# ஆண்டறிக்கை
# 2023

கைத்தொழில் அபிவிருத்திச் சபை

கைத்தொழில் அமைச்சு

# பொருளடக்கம்

தலைப்பெழுத்துச் சொற்பட்டியல் ........ 1

எமது தொலைநோக்கு ........ 1

இலக்குகள் ........ 1

நிறுவனம் பற்றிய தகவல்கள் ........ 2

நிறுவனக் கட்டமைப்பு ........ 5

**முகாமைத்துவ மீளாய்வு ........ 7**

2023 ஆம் ஆண்டின் முக்கிய நிகழ்வுகள் ........ 12

**முன்னேற்றப் பொழிப்பு........ 23**

**செயற்பாட்டு மீளாய்வு ........ 29**

1) நிருவாகப் பிரிவு ........ 30

2) பொறியியல் பிரிவு ........ 34

3) கைத்தொழிற் பேட்டைப் பிரிவு ........ 41

4) முயற்சியாண்மை அபிவிருத்திப் பிரிவு ........ 46

5) பிராந்திய அபிவிருத்திப் பிரிவு ........ 54

6) திட்டமிடல் பிரிவு ........ 59

7) தொழில்நுட்ப சேவைப் பிரிவு ........ 64

8) சந்தைப்படுத்தல் பிரிவு ........ 69

9) இறப்பர் உற்பத்திகள் அபிவிருத்தி மற்றும் சேவை நிலையம் ........ 72

10) தோல்பொருள் உற்பத்திகள் மற்றும் பாதணிகள் அபிவிருத்தி நிலையம்........ 75

**நிதிசார் மீளாய்வு........ 79**

1 விரிவான நிதிநிலைக் கூற்று ........ 80

2 விரிவான வருமானக் கூற்று ........ 81

3 உரிமைமாற்றக் கூற்று ........ 82

4 காசுப்பாய்ச்சல் கூற்று ........ 83

5 முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளும் நிதிக்கூற்றுக்கான குறிப்புகளும் ........ 84

**நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் மீளாய்வு ........ 115**

## தலைப்பெழுத்துச் சொற்பட்டியல்

| | | |
|---|---|---|
| AD | - | நிர்வாகப் பிரிவு |
| ATRDC | - | பொருத்தமான தொழில்நுட்பவியல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையம் |
| AVCO Method | - | சராசரி கிரய முறைமை |
| BMICH | - | பண்டாரநாயக்க ஞாபகார்த்த சருவதேச மாநாட்டு மண்டபம் |
| BAU | - | வழமையான வியாபாரம் |
| BSC | - | பித்தளைப் பாண்டங்கள் சேவை நிலையம் |
| CDLPF | - | தோல்பொருள் உற்பத்திகள் மற்றும் பாதணிகள் அபிவிருத்தி நிலையம் |
| CNC | - | கணினி எண்முறைக் கட்டுப்பாடு |
| CSC | - | பொதுவான சேவை நிலையம் |
| CTB | - | இலங்கை போக்குவரத்துச் சபை |
| DS | - | பிரதேச செயலாளர் |
| ED | - | பொறியியல் பிரிவு |
| EDD | - | முயற்சியாண்மை அபிவிருத்திப் பிரிவு |
| E-commerce | - | இலத்திரனியல் வாணிபம் |
| EnMS | - | எரிசக்தி முகாமைத்துவ முறைமை |
| EPC | - | மின் முலாமிடல் நிலையம் |
| EU | - | ஐரோப்பிய ஒன்றியம் |
| FD | - | நிதிப் பிரிவு |
| GDP | - | மொத்தத் தேசிய உற்பத்தி |
| GHG | - | பச்சைவீட்டு வாயு |
| HDFC | - | வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் |
| HODs | - | பிரிவுத் தலைவர்கள் |
| ICC | - | சர்வதேச வாணிப சபை |
| ICT | - | தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் |
| IDB | - | கைத்தொழில் அபிவிருத்திச் சபை |
| IEC | - | சர்வதேச மின் தொழில்நுட்பவியல் ஆணைக்குழு |
| IED | - | கைத்தொழிற் பேட்டைப் பிரிவு |
| INBAR | - | சர்வதேச மூங்கில் மற்றும் பிரம்பு தாபனம் |
| IoT | - | பொருள்களின் இணையம் (டிஜிட்டல் கருவிகளையும் மின்னணுப் பொருள்களையும் மனிதர்களுடன் மெய்நிகர் முறையில் இணைக்கும் ஒரு திறன்மிகு நவீன கட்டமைப்பு. |
| ISO | - | சர்வதேச தரநிர்ணயக் கட்டளைகள் நிறுவனம் |
| IT | - | தகவல் தொழில்நுட்பவியல் |
| JAS | - | ஜப்பான் விவசாய தர நியமங்கள் |
| KPIs | - | முக்கிய செயல்திறன் குடிகாட்டிகள் |
| Ltd | - | வரையறுத்த |
| MD | - | சந்தைப்படுத்தல் பிரிவு |
| MFIF | - | நடுத்தர அதிர்வெண் தூண்டு (கிளர்மின்) உலை |
| MOU | - | புரிந்துணர்வு ஒப்பந்தம் |
| MPI | - | திட்டமிடல் மற்றும் முதலீட்டு அமைச்சு |
| MSMEs | - | நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் |
| MT | - | மெட்ரிக் தொன் |
| NBT | - | தேசத்தைக் கட்டியெழுப்புவதற்கான வரி |
| NMRA | - | தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபை |
| NVQ | - | தேசிய தொழில் தகைமை |
| PCU | - | எதிர்வுகூறப்பட்ட அலகுக் கடன் முறை |
| PD | - | திட்டமிடல் பிரிவு |
| PPP | - | அரச - தனியார் கூட்டாண்மை |
| RDD | - | பிராந்திய அபிவிருத்திப் பிரிவு |
| RPDSC | - | இறப்பர் உற்பத்திகள் அபிவிருத்தி மற்றும் சேவை நிலையம் |
| R&D | - | ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி |
| SCX | - | உப ஒப்பந்தப் பரிமாற்றம் |
| SDB | - | சணச அபிவிருத்தி வங்கி |
| SEs | - | சுயதொழில் முயற்சியாளர்கள் |
| SEDA | - | பேண்தகு தொழில்முயற்சியாண்மை அபிவிருத்தி அணுகல் |
| SoP | - | பதவி உயர்வுத் திட்டம் |
| SoR | - | ஆட்சேர்ப்புத் திட்டம் |
| TSD | - | தொழில்நுட்ப சேவைப் பிரிவு |
| TVEC | - | மூன்றாம்நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழு |
| UNIDO | - | ஐக்கிய நாடுகள் கைத்தொழில் அபிவிருத்தி அமைப்பு |
| USAID | - | சர்வதேச அபிவிருத்திக்கான ஐக்கிய அமெரிக்க முகவராண்மை |

*<u>எமது தொலைநோக்கு</u>*

"இலங்கை முழுவதிலுமுள்ள அனைத்துக் கைத்தொழில்களையும் அபிவிருத்தி செய்தல்"

*<u>எமது பணிக்கூற்று</u>*

"இலங்கை முழுவதிலுமுள்ள அனைத்துக் கைத்தொழில்களையும் ஊக்குவிப்பதற்கும் மேம்படுத்துவதற்கும் அபிவிருத்தி செய்வதற்கும் தேவையான மூலோபாய, தொழில்நுட்ப மற்றும் வர்த்தக அடிப்படையினை வழங்குதல்"

*<u>இலக்குகள்</u>*

| | |
|---|---|
| 1 | 2030 ஆம் ஆண்டளவில் "வியாபாரம் செய்வதற்கான வசதியை" தசாப்தத்தின் 99 ஆம் இடத்திலிருந்து 50 ஆம் இடத்திற்கு கீழே கொண்டு வருதல். |
| 2 | 2030 ஆம் ஆண்டளவில் முயற்சியாண்மை சதவீதம் (கைத்தொழில்களின் உருவாக்கத்தை அதிகரித்தல்) – 2.8% இலிருந்து 10% வரை அதிகரித்தல். |
| 3 | 2030 ஆம் ஆண்டளவில் GDP க்கான உற்பத்திக் கைத்தொழில்களின் பங்களிப்பு - 15% இலிருந்து 25% வரை அதிகரித்தல். (உறுதிப்பாடு – புதிய/தற்போதுள்ள கைத்தொழில்கள்) |
| 4 | 2030 ஆம் ஆண்டளவில் தற்போதைய தலா ஏற்றுமதியை (596 US$) உலகளாவிய சராசரியிலிருந்து (3055 US$) 50% (1527 US$) வரை அதிகரித்தல். |
| 5 | 2030 ஆம் ஆண்டளவில் கைத்தொழில் வலயங்களுக்கான காணிகளின் சதவீதத்தை 0.04% இலிருந்து 1% வரை அதிகரித்தல். |
| 6 | வளங்களின் செயல்திறன், பசுமைத் தொழில்நுட்பம் மற்றும் நேரில் பொருளாதார எண்ணக்கருக்களைப் பின்பற்றுதலும் உள்வாங்கிக்கொள்ளும் அதேவேளை இழிவளவாக்கும் செயற்பாடுகளை முன்னேற்றுவதன் ஊடாக 2030 ஆம் ஆண்டளவில் கைத்தொழில் துறையின் BAU நிலைக்கு எதிராக பச்சைவீட்டு வாயுக்களின் (GHG) வெளியீட்டை 7% இனால் குறைத்தல். |

## 1) நிறுவனம் பற்றிய தகவல்கள்

### சட்ட வடிவம்

கைத்தொழில் அபிவிருத்திச் சபை (IDB) கைத்தொழில் அமைச்சின் கீழ் இயங்கும் ஒரு முன்னணி அரச நிறுவனமாகும். அது, 1969 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க கைத்தொழில் அபிவிருத்திச் சபைச் சட்டத்தினால் வலுவாக்கம் செய்யப்பட்டுள்ளதோடு, இலங்கையில் கைத்தொழில் துறையை அபிவிருத்தி செய்யும் பொறுப்பு அதற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இலங்கை 'நடுத்தர வருமானம்' ஈட்டும் ஒரு நாட்டின் அந்தஸ்தை நோக்கி நகர்வதால், அபிவிருத்தியடைந்த நாடுகளுக்கு கைத்தொழில் உற்பத்திகளை ஏற்றுமதிசெய்யும் போது சலுகை நிபந்தனைகளின் அடிப்படையில் மேலும் தங்கியிருக்க எம்மால் முடியாது. எமது உற்பத்திகளின் தரத்தை அதிகரித்தல், கிரயத்தைக் குறைத்தல், விளைதிறனை அதிகரித்தல், தரக்குறிப் பெறுமானத்தை முன்னேற்றுதல் ஆகிய காரணிகள் எமது கைத்தொழில் உற்பத்திகளின் போட்டிநிலையை உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சந்தையில் தக்கவைத்துக்கொள்வதற்கு மிக முக்கியமானதாகும். கைத்தொழில் அபிவிருத்திச் சபை நிறுவப்பட்ட 1969 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்கச் சட்டத்தினால் இலங்கையின் அரச மற்றும் தனியார் ஆகிய இரு பிரிவுகளிலும் அனைத்து கைத்தொழில்களையும் உள்ளடக்குகின்றவாறு பரந்ததொரு வரம் IDB க்கு வழங்கப்பட்டுள்ளது. தேசிய பொருளாதார வளர்ச்சிக்கான மூலோபாய ரீதியான முக்கியத்துவம் காரணமாக சிறிய மற்றும் நடுத்தர அளவான கைத்தொழில்களை ஊக்குவிப்பதன் மீதும் மேம்படுத்துவதன் மீதும் கடந்த காலத்தில் IDB முக்கிய கவனம் செலுத்தியுள்ளது. IDB இனால் தொழில்முயற்சியாளர்களையும் SMIsகளையும் மாத்திரம் ஊக்குவித்தலும் மேம்படுத்தலும் ஆகாது என்பதுடன், கைத்தொழில் ஆராய்ச்சிகளை மேம்படுத்துவதும் எமது கைத்தொழில் உற்பத்திகளை ஏற்றுமதிசெய்வதற்கு உதவுதலும் உள்ளிட்ட எமது அனைத்து கைத்தொழில்களையும் அபிவிருத்திசெய்வதற்கு வசதிகள் வழங்கப்பட வேண்டும். இன்று IDB இனால் ஏற்றுமதி சார்பான கலாசாரமொன்றை நோக்கி தமது வரத்தை முற்றாக உள்ளடக்கும் வகையில் தமது செயற்பாடுகள் விஸ்தரிக்கப்பட்டுள்ளன. மேலும், IDB சர்வதேச வர்த்தகத் துறையில் உள்நாட்டு கைத்தொழில் உற்பத்திகளை வெளிநாட்டுச் சந்தைக்கு ஏற்றுமதி செய்வதை ஊக்குவிப்பதுடன், இலங்கையின் எந்தவொரு கைத்தொழில் முயற்சிக்கும் அல்லது கைத்தொழில் ஏற்றுமதிக்கும் அதற்கு உரிய தேவைப்படும் சேவைகளையும் வசதிகளையும் வழங்குகிறது. சட்டத்தில் குறித்துரைக்கப்பட்டுள்ள எல்லா நோக்கங்களையும் நிலைபேறானதாக அடைந்துகொள்வதற்காக IDB இனால் தமது அனைத்துச் செயற்பாடுகளின் செயல்திறனும் நிதிசார் இயலாற்றலும் முன்னேற்றப்பட வேண்டும். கைத்தொழில் அபிவிருத்திச் சபை அதன் ஆரம்பத்தில் இருந்து கடந்த 53 வருட காலத்துள் அரசாங்கங்கள் மாற்றமடைந்தவுடன் பல அமைச்சுக்களின் கீழ் இயங்கியது. தற்போது கைத்தொழில் அமைச்சின் நிருவாக நோக்கெல்லையின் கீழ் ஒரு நியதிச்சட்ட நிறுவனமாக கைத்தொழில் அபிவிருத்திச் சபை இயங்குகிறது.

## பணிப்பாளர் சபை உறுப்பினர்கள் - 2023/24

| இல. | பதவி | பெயர் | நிறுவனம் | காலப்பகுதி | |
|---|---|---|---|---|---|
| | | | | நியமனத் திகதி | நியமனத் திகதி |
| 01. | தவிசாளர் | வைத்தியர் சாரங்க அலகப்பெரும | கைத்தொழில் அபிவிருத்திச் சபை | 2022.09.15 | 2024.09.20 |
| 02. | சபை உறுப்பினர் | திரு. எச்.ஆர்.பீ.பீரிஸ் | - | 2020.01.01 | 2023.06.10 |
| 03. | சபை உறுப்பினர் | திரு. ஆலோக்க வாஹலவத்த | - | 2020.01.01 | 2023.03.17 |
| 04. | சபையின் பதவிவழியால் நியமிக்கப்படும் உறுப்பினர் | திரு. கே.ஜி.ஆர்.ஜி.ஆர். விக்ரமவர்தன | தேசிய திட்டமிடல் திணைக்களம் | 2020.06.30 | 2023.08.09 |
| 05. | திறைசேரியின் பிரதிநிதி | திரு. பி.கே.ஆர்.பாலசூரிய | நிதி அமைச்சு | 2022.03.23 | 2023.01.25 |
| 06. | சபையின் நோக்குநர் | திரு. கே.ஜி.ஆர். விமலசூரிய | கைத்தொழில் அமைச்சு | 2022.06.01 | 2023.07.14 |
| 07. | சபை உறுப்பினர் | திரு. சுரங்க மெண்டிஸ் | இலங்கை – ஜேர்மன் தொழில்நுட்பப் பயிற்சி நிறுவகம் | 2022.07.29 | 2024.09.20 |
| 08. | சபை உறுப்பினர் | திரு. எச்.எம்.ரஞ்ஜித் கிரிஎல்ல | - | 2022.08.08 | 2024.09.20 |
| 09. | திறைசேரியின் பிரதிநிதி | செல்வி சந்திமா புஞ்சிஹேவா | நிதி அமைச்சு | 2023.01.25 | 2023.08.08 |
| 10. | சபை உறுப்பினர் | திரு. பீ. சாரத மாவிட்டகம | - | 2023.06.26 | 2024.06.26 |
| 11. | சபையின் நோக்குநர் | எஸ்.எச்.பர்னாந்து | கைத்தொழில் அமைச்சு | 2023.07.14 | 2024.01.12 |
| 12. | சபை உறுப்பினர் | திரு. பீ.எல்.யூ.ரத்னமலல | - | 2023.07.28 | 2024.09.20 |
| 13. | திறைசேரியின் பிரதிநிதி | திரு. பி.ஏ.ரி.ரொத்ரிகோ | நிதி அமைச்சு | 2023.08.08 | 2024.05.09 |
| 14. | சபையின் பதவிவழியால் நியமிக்கப்படும் உறுப்பினர் | திரு. குமுது மீகஹகே | வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு அமைச்சு | 2023.08.14 | 2024.09.20 |
| 15. | சபையின் பதவிவழியால் நியமிக்கப்படும் உறுப்பினர் | திரு. எஸ்.எச்.வி.குமார | அபிவிருத்தி நிதித் திணைக்களம் | 2023.10.10 | 2024.05.09 |

## சபையின் முக்கிய பிரிவுகள்

| இல. | பிரிவின் பெயர் | | பிரிவுத் தலைவர் |
|---|---|---|---|
| 01 | நிர்வாகப் பிரிவு (AS) | - | திரு. சமிந்த ராமசுந்தர (பணிப்பாளர்) |
| 02 | பிராந்திய அபிவிருத்திப் பிரிவு (RDD) | - | திரு. பீ.பீ.பீ.எஸ்.திக்வெல்ல (பணிப்பாளர்) |
| 03 | திட்டமிடல் பிரிவு (PD) | - | திரு. ஜே.டீ.ஹேமகுமார சில்வா (பணிப்பாளர்) |
| 04 | சந்தைப்படுத்தல் பிரிவு (MD) | - | திரு. எச்.எம்.எஸ்.சமரகோன் (பணிப்பாளர்) |
| 05 | கைத்தொழிற் பேட்டைப் பிரிவு (IED) | - | திரு. டப்ளியு.ஏ.லால் பிரியந்த (பணிப்பாளர்) |
| 06 | பொறியியல் பிரிவு (ED) | - | திரு. டப்ளியு.ஏ.பீ.கபில நிஷாந்த (பணிப்பாளர்) |
| 07 | முயற்சியாண்மை அபிவிருத்தி மற்றும் மதியுரைச் சேவை நிலையம் (CEDACS) | - | திருமதி ரேணுகா ஜயலத் (பணிப்பாளர்) |
| 08 | தொழில்நுட்ப சேவைப் பிரிவு (TSD) | - | திரு. எச்.ஏ.பீ.குணவர்தன (பணிப்பாளர்) |
| 09 | நிதிப் பிரிவு (FD) | - | திரு. எச்.ஏ.பீ.குணவர்தன (பணிப்பாளர்) |
| 10 | தோல்பொருள் உற்பத்தி மற்றும் பாதணிகள் அபிவிருத்தி நிலையம் (CDLPF) | - | திரு. அமரநாத் விமலசிங்க (பிரதிப் பணிப்பாளர்) |
| 11 | இறப்பர் உற்பத்திகள் அபிவிருத்தி மற்றும் சேவை நிலையம் (RPDSC) | - | திருமதி ஹசமாலி சமரசிங்க (உதவிப் பணிப்பாளர்) |

## நிறுவன அமைப்பு


தவிசாளர்
HM 2-1
பணிப்பாளர் நாயகம்
HM 1-3
பிரதிப் பணிப்பாளர் நாயகம் (நடவடிக்கை)
பிரதிப் பணிப்பாளர் நாயகம் (அபிவிருத்தி)
HM 1-2
பணிப்பாளர் - நிருவாகம் (1)
பணிப்பாளர் - நிதி (1)
பணிப்பாளர் - திட்டமிடல் (1)
பணிப்பாளர் - சந்தைப்படுத்தல் (1)
பணிப்பாளர் - மு.அ.ம.சே.நி. (CEDACS) (1)
பணிப்பாளர் - கைத்தொழிற் பேட்டைகள் (1)
பணிப்பாளர் - பிராந்திய அபிவிருத்தி (1)
பணிப்பாளர் - தொழில்நுட்ப சேவைகள் (1)
பணிப்பாளர் - பொறியியல் (1)
MM 1-2
உ.ப. / பி.ப. (4)
கணக்காளர்கள் (3)
உ.ப. / பி.ப. (3)
உ.ப. / பி.ப. (3)
உ.ப. / பி.ப. (3) நூலகர் (1) முறைமை நிருவாகி (1)
உ.ப. / பி.ப. (2)
உ.ப. / பி.ப. (2)
உ.ப. / பி.ப. (25)
உ.ப. / பி.ப. (10) பொறியியலாளர் (2)
உ.ப. / பி.ப. (1) பொறியியலாளர் (7)
உள்ளக கணக்காய்வாளர் (1)
பணிப்பாளர் சபை செயலாளர் (1)
JM 1-1
நிருவாக அலுவலர் (02) வழங்கல் அலுவலர் (01) பாதுகாப்பு அலுவலர் (01) போக்குவரத்து அலுவலர்(01)
கணக்கு அலுவலர் (1)
அபி.அலு./ சி.தொ.ஊ.அ. (3)
அபி.அலு./ சி.தொ.ஊ.அ. (2) , விற்.அலு. (3)
அபி.அலு./ சி.தொ.ஊ.அ (2) அச்சீட்டு அலுவலர் (1) வெப் மாஸ்டர் (1)
அபி.அலு./ சி.தொ.ஊ.அ (2) அத்தியட்சகர் (7)
அபி.அலு./ சி.தொ.ஊ.அ. (2)
சி.தொ.ஊ.அ. (25)
அபி.அலு./ சி.தொ.ஊ.அ. (15) நிரு.அ.(1)
அபி.அலு/ சி.தொ.ஊ.அ. (1) சிரே.பொறி.உ. (9)
உள்ளக கணக்காய்வு அலுவலர் (1)
தவிசாளரின் நேர்தொடர்பு உதவியாள் (1)
MA 5-2
உதவிப் பணியாட்குழு [ தொ.ஊ.அ (EPO) / (94) புள்ளிவிபரவியல் அலுவலர் / (01) திட்ட வடிவமைப்பாளர் (1)
MA 2-1/MA 1-
உதவிப் பணியாட்குழு:
(கணக்குப் பதியுநர் / வரைஞர் / பொறியியல் உதவியாளர் / கணினி கிராஃபிக் வடிவமைப்பாளர் / நூலக உதவியாளர் / ஆய்வுகூட உதவியாளர் / முகாரி / வரைவு உதவியாளர் / முகாமைத்துவ உதவியாளர் / புள்ளிவிவரவியல் ஆய்வாளர் / விற்பனை உதவியாளர் / களஞ்சியசாலைப் பொறுப்பாளர் / செய்துகாட்டுநர் / பயிற்சிப் போதனாசிரியர் (184)
PL 1/PL 2/PL 3
உதவிப் பணியாட்குழு : (திறன் வேலைகள் / அலுவலக சிறு பணியாளர் / வெளிக்கள உதவியாளர் / களஞ்சியசாலை வேலையாள் / வேலையாள்) (266)

# முகாமைத்துவ மீளாய்வு

- தவிசாளர் விடுக்கும் செய்தி
- பணிப்பாளர் நாயகம் விடுக்கும் செய்தி

# தவிசாளர் விடுக்கும் செய்தி



கடந்த ஆண்டை திரும்பிப் பார்க்கும்போது, கைத்தொழில் அபிவிருத்திச் சபை என்ற வகையில் நாமடைந்துள்ள பாரிய முன்னேற்றத்தையும் அடைவுகளையும் உங்களோடு பகிர்ந்துகொள்ளக் கிடைத்ததையிட்டு நான் பெரு மகிழ்ச்சியடைகின்றேன். 2023 ஆம் ஆண்டில் பல்வேறு சவால்களை எதிர்நோக்க நேரிட்டபோதும், ஏற்றுமதி திசைமுகப்படுத்திய சக்திக்கூடங்களாக உள்நாட்டுக் கைத்தொழில்களை நிலைமாற்றுவதை நோக்காகக்கொண்ட அரச கொள்கைப் பணிச்சட்டத்தை அமுலுக்கிடுவதற்காக அர்ப்பணிப்புள்ள எமது அணியினர், தமது கோடிட்டுக்காட்டத்தக்க தாங்கிக்கொள்ளும் ஆற்றல், புதிய எண்ணக்கருக்கள் என்பவற்றுடன் அசையாத அர்ப்பணிப்பையும் வெளிக்காட்டினர். கைத்தொழில் அமைச்சர் கௌரவ (வைத்தியர்) ரமேஷ் பத்திரண அவர்கள் இம்முயற்சிக்கு வழிகாட்டினார்.

கைத்தொழில்துறை அபிவிருத்திக்குப் பொறுப்பான ஒரே அரச நிறுவனமான IDB, கைத்தொழிலாளர்கள் எதிர்நோக்கும் சவால்களுக்குத் தீர்வு காண்பதும் அவர்களுக்கு வாய்ப்பான வியாபாரச் சூழலொன்றைக் கட்டியெழுப்புவதும் சமூகத்தில் உற்பத்தியின் தேசிய முக்கியத்துவத்தை எடுத்துணர்த்துவதும் மீது மூலோபாய ரீதியாக கவனம் செலுத்தியுள்ளது.

இச்செயல்முனைப்புகளை அமுலுக்கிடுவதன் ஊடாக "வியாபாரம் செய்யும் வசதி" குறிகாட்டியின் தரவரிசையில் 99 ஆவது இடத்திலிருந்து 50 ஆவது இடம் வரை இலங்கையை உயர்த்திவைப்பது எமது நோக்காக இருந்தது. உற்பத்தித்துறையை 15% இலிருந்து 25% வரை அதிகரித்தல், முயற்சியாண்மை விகிதத்தை 2.8% இலிருந்து 10% வரை அதிகரித்தல், கைத்தொழில் வலய காணிப் பங்களிப்பை 0.04% இலிருந்து 1% வரை விஸ்தரித்தல், தலா ஏற்றுமதி உலக சராசரியிலிருந்து 50% வரை அதிகரித்தல், பொதுவான வியாபாரத் தோற்றநிலைக்கு ஒப்பீடாக பச்சைவீட்டு வாயு (GHG) வெளியிடப்படுவதை 7% இனால் குறைத்தல் என்பன எமது இலக்குகளில் அடங்கியது. 2030 ஆம் ஆண்டளவில் வளங்களின் வினைத்திறன், பசுமைத் தொழில்நுட்பம் மற்றும் சுற்றுப் பொருளாதார எண்ணக்கருக்களின் ஊடாக இந்நோக்கங்கள் அடைந்துகொள்ளப்பட வேண்டியிருந்தது.

"கைத்தொழில் அபிவிருத்தி நிதியம்" ஆரம்பிக்கப்படுதல், "இன்டஸ்ட்ரி எக்ஸ்போ 2023" மற்றும் அதனைத்தொடர்ந்து மூன்று பிராந்திய கண்காட்சிகளை வெற்றிகரமாக நடாத்துதல், IDB இணையத்தளத்தை உயர்மட்ட உசாத்துணைக் கருவிகலன்களுடன்கூடிய முழுமையான ஓரிடத்திலிருந்து அனைத்துச் சேவைகளையும் வழங்கக்கூடிய one-stop shop ஆக தரமுயர்த்துதல், அனைத்து மாவட்டங்களினுள்ளும் பிராந்திய மட்டத்தில் 40,000 க்கும் அதிகமான பயிற்சி அமர்வுகளைப் பூர்த்திசெய்தல் என்பன ஆண்டின் சிறப்பான அடைவுகளில் அடங்கும்.

தொழில்நுட்பப் பரிமாற்று மற்றும் பயிற்சியின் மூலம் கைத்தொழில் துறைக்கு நவீன தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்தி அதன்மூலம் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுக் கைத்தொழில்களுக்கிடையில் நிலவும் தொழில்நுட்ப இடைவெளியைக் குறைக்கும் நோக்குடன் ஆண்டுபூராவும் ஆரம்ப மற்றும் விரிவான (Startup and Scale-up) மூலோபாயங்களின் கீழ் சில கருத்திட்டங்களை வெற்றிகரமாக அமுல்படுத்தினோம். SEDA இன் ஆரம்ப மற்றும் விரிவான நிகழ்ச்சித்திட்டங்களின் ஊடாக இலங்கைப் பிரஜைகளுக்கிடையில் முயற்சியாண்மை உளப்பாங்கொன்றை உருவாக்குவதற்கும், காணிகள், திரவத்தன்மை மற்றும் உரிமங்கள் (Ls3) சம்பந்தமான பிரச்சினைகளைத் தணிப்பதற்கும் உள்நாட்டு மற்றும் சர்வதேச சந்தை உறவுகளை விஸ்தரிப்பதும் பலப்படுத்துவதும் மூலம் இலங்கையை கைத்தொழில் அபிவிருத்தியுடன்கூடிய

சுபீட்சமான ஒரு தேசமாக கட்டியெழுப்புவதற்கும் நாம் செயலாற்றினோம். முயற்சியாண்மையை இளைஞர் பரம்பரையினருக்கிடையில் ஊட்டி வளர்ப்பதற்காக பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள், பாடசாலை கைத்தொழில் முயற்சியாண்மை எண்ணக்கருக்களை ஏனைய உயர்கல்வி நிறுவனங்களின் பாடவிதானங்களில் உட்படுத்துவதற்கும், ஒவ்வொரு மாவட்டத்தையும் அதேபோல் கல்வி வலயத்தையும் உள்ளடக்கும் வகையில் பாடசாலைக் கைத்தொழில் முயற்சியாண்மை வட்டங்களை அறிமுகப்படுத்துவதற்கும் நாம் முன்னின்று செயலாற்றியுள்ளோம். இது தவிர, பரந்தளவில் பார்வையாளர்களை அணுகுவதற்கும் அறிவுறுத்துவதற்கும் பல்வேறு ஊடக மேடைகளை உபயோகித்து உற்பத்திப் பொருளாதாரமொன்றை நோக்கி நாடு இட்டுச்செல்லப்படும் வேகத்தை அதிகரிப்பதை இலக்காகக்கொண்ட நிகழ்ச்சித்திட்டங்களை நாம் தயாரித்துள்ளோம்.

இதுதவிர, டிஜிட்டல் சந்தைப்படுத்தல் மற்றும் இ-வாணிப மேடைகளை முன்னேற்றுவதன் மூலம் உள்நாட்டு தொழில்முனைவோருக்கு உலக சந்தையில் பிரவேசிப்பதற்கான அடிப்படை வேலைத்திட்டம் IDB இனால் வகுக்கப்பட்டுள்ளது. வளர்ந்துவரும் தொழில்முனைவோருக்கு உதவுவதற்கும் தேவைப்படும்போது ஒத்துழைப்பு வழங்குவதற்கும், குறும் தொலைபேசி இலக்கமொன்றையும் (1995), கையடக்க செயலயொன்றையும், வற்ஸ்-எப் இலக்கமொன்றையும் (0705001995) நாம் அறிமுகப்படுத்தியுள்ளோம். தொழில்முனைவோரின் அர்ப்பணிப்பு மற்றும் பாடுபட்டு உழைப்பதற்கு வரவேற்பொன்றையும் மதிப்பீடொன்றையும் வழங்குவதன் மூலம் முயற்சியாண்மைக் கலாசாரத்தை முன்னேற்றுவதன் மீதும் நாம் கவனம் செலுத்தினோம். IDB பதிவு போன்ற விசேட நிகழ்ச்சித்திட்டங்கள் இதில் அடங்கும். அதன்மூலம் அரசின் உத்தியோகபூர்வ அங்கீகாரம், விசேட அடையாள அட்டைகள் மற்றும் வாகன அனுமதிப்பத்திரங்களை வழங்கப்படுவதோடு சமூகத்தில் அவர்களின் அந்தஸ்து அதிகரிக்கும்.

இந்த மீளாய்வு காலப்பகுதியில் எமது நோக்கங்களையும் இலக்குகளையும் அடைந்துகொள்வதற்காக பெரும் பங்களிப்பாற்றிய IDB இன் பணிப்பாளர் நாயகம் உள்ளிட்ட பணியாட்குழுவுக்கு எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிக்க விரும்புகின்றேன். IDB இன் பணிகளை முகாமைசெய்யும் போது முகாமைச் சபை வழங்கிய வழிகாட்டல்களையும் அறிவுறுத்தல்களையும் ஒத்துழைப்பையும் நான் பெரிதும் போற்றுகின்றேன். கைத்தொழில் அமைச்சர் கௌரவ (வைத்தியர்) ரமேஷ் பத்திரண அவர்களின் சிறப்பான வழிகாட்டலுக்கும் 2023 ஆம் ஆண்டில் எமது நோக்கங்களை அடைந்துகொள்வதில் எமக்கு உதவுவதற்காக அர்ப்பணித்துச் செயலாற்றிய கைத்தொழில் அமைச்சுக்கு விசேட நன்றி தெரிவிக்கின்றேன். அந்த உற்சாகத்தையும் அர்ப்பணிப்பையும் தொடர்ந்தும் பேணுவதன் ஊடாக எதிர்வரும் ஆண்டில் இதனை விட பாரிய ஒரு வெற்றியை அடைந்துகொள்ளக்கூடியதாக இருக்குமென்று நான் எதிர்பார்க்கின்றேன்.

**வைத்தியர் சாரங்க அலஹப்பெரும**
**தவிசாளர்**
**கைத்தொழில் அபிவிருத்திச் சபை**

# பணிப்பாளர் நாயகம் விடுக்கும் செய்தி



ஒரு நாட்டின் பொருளாதார அபிவிருத்தி சாத்தியப்பாடானதாகவும் பொருள்பொதிந்ததாகவும் மாறுவது, அது நீடுறுதியானதாக இருக்கும்போது மாத்திரமே. இச்சூழமையில் நாட்டின் அபிவிருத்தியையும் நீடுறுதியான தன்மையையும் கருதாதபோதிலும், எந்தவொரு பொருளாதாரத்திலும் கைத்தொழில்துறை மிக முக்கிய வகிபாகத்தை வகிக்கும்.

இலங்கையின் சாத்தியமான சூழல், பல்வேறு கண்ணோட்டங்களின் ஊடாக உள்நாட்டுக் கைத்தொழில்கள் முன்னேற்றமடைவதற்குத் தூண்டுதல் அளித்துள்ளது. இதனிடையே, பொருளாதார வளர்ச்சியின் மீதான உற்பத்தித்துறையின் நேரடியான, குறிப்பிடத்தகு செல்வாக்கு காரணமாக அதற்கு குறிப்பாக முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது. இந்த உள்ளார்ந்த ஆற்றலைப் பயன்படுத்திக்கொள்வதற்காக தெளிவான, கவனத்தை ஈர்த்த மூலோபாயமொன்றுடன் உள்நாட்டுக் கைத்தொழில்களுக்கு சிறப்பான அபிவிருத்திச் செயல்முனைப்புகளை அமுல்படுத்துவது இன்றியமையாதது.

எவ்வாறாயினும், தீவிர உலக போட்டிகர யுகமொன்றில், எமது தாய்நாட்டின் கைத்தொழில்கள் புத்தாக்கங்களைத் தழுவியவாறும் தாக்குப்பிடிக்கும் ஆற்றல், நீடுறுதியான தன்மை மற்றும் வளர்ச்சியை உறுதிப்படுத்துவதற்கான மூலோபாய ரீதியான அணுகுமுறைகளைப் பின்பற்றி சவால்களுக்கு முகங்கொடுப்பது அவசியமாகும். கைத்தொழில் அபிவிருத்திக்கு அர்ப்பணித்துள்ள ஒரு முன்னணி அரச நிறுவனமாக விளங்கும் இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபை (IDB) இந்த மாற்றீட்டுச் செயன்முறைக்கு பெரும் பங்களிப்பாற்றும் முக்கிய பொறுப்பை வகிக்கிறது.

இந்த ஆண்டறிக்கையில் முதன்மைபெறும் செயல்முனைப்புகள், உள்நோக்குகள், கூட்டுப் பிரயத்தனங்கள் உள்நாட்டுக் கைத்தொழிலின் தேவைகளை நிறைவேற்றுவதற்கு மாத்திரமன்றி, கைத்தொழில் அபிவிருத்தியைப் போசிப்பதற்கு எமது ஊழியர்களுக்கும் ஒழுங்கமைப்புக்கும் மிகவும் பலமான, மிகவும் பயனுறுதிவாய்ந்த வகிபாகமொன்றை நிறைவேற்றுவதற்கு வலுவூட்டுமென்று நம்புகிறேன்.

இறுதியாக, IDB இன் தவிசாளரின் தூரநோக்குள்ள தலைமைத்துவத்துக்கும் வழிகாட்டலுக்கும் IDB பணியாட்குழுவின் அர்ப்பணிப்புக்கும் அயராத முயற்சிகளுக்கும் அந்த ஒட்டுமொத்த அணியினருக்கு எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிக்க விரும்புகிறேன். எமது முன்னேற்றத்துக்கும் அடைவுக்கும் பின்னணியிலுள்ள உந்துசக்தி உமது அயராத அர்ப்பணிப்பாகும்.

**எச்.எம்.எஸ்.சமரகோன்**
**பணிப்பாளர் நாயகம்**
**கைத்தொழில் அபிவிருத்திச் சபை**




# கடந்த கால செயலாற்றுகை

# 2023 ஆம் ஆண்டின் முக்கிய நிகழ்வுகள்

## 1) "Industry 2023" தேசிய கைத்தொழில் கண்காட்சியும் கைத்தொழில் சிறப்பு விருது விழாவும் உத்தியோகபூர்வ அங்குரார்ப்பணம்



கைத்தொழில் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் கௌரவ மருத்துவர் ரமேஷ் பத்திரண அவர்களின் தலைமையிலும் முதனிலைக் கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் சாமர சம்பத் தசநாயக்க அவர்களின் பங்கேற்புடனும் "Industry 2023" தேசிய கைத்தொழில் கண்காட்சியும் கைத்தொழில் சிறப்பு விருது விழாவும் உத்தியோகபூர்வமாக வெளியிடும் நிகழ்வு பத்தரமுல்லை 'வோட்டர்ஸ் எட்ஜ்' ஹோட்டல் வளவில் இடம்பெற்றது. வெளிநாட்டு தூதராண்மைக் குழுக்களின் தூதுவர்கள், கைத்தொழில் அமைச்சின் செயலாளர் திருமதி திலகா ஜயசுந்தர, பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சின் செயலாளர் திரு. ஜானக தர்மகீர்த்தி, மேலதிக செயலாளர்கள், ஏனைய அதிகாரிகள், இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் தவிசாளர் வைத்தியர் சாரங்க அலஹப்பெரும, நிறுவனத்தின் தலைவர்கள், உயரதிகாரிகள், கைத்தொழில் அமைச்சின் மதியுரைச் சபையின் தலைவர்கள், நாட்டின் முன்னணி தொழில்முயற்சியாளர்கள் உள்ளிட்ட சிறப்பு விருந்தினர்கள் பலர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர். இச்சந்தர்ப்பத்தில் கைத்தொழில் மற்றும் பெருந்தோட்ட அமைச்சரினால் ஒரு நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்காக கைத்தொழில்களை ஊக்குவிக்கும் தேவை குறித்து மேலும் தெளிவுபடுத்தப்பட்டது.

## 2) தேசிய கைத்தொழில் சிறப்பு விருது விழா - 2023




நுண், சிறிய, நடுத்தர, பாரியளவு கைத்தொழில் முயற்சியாளர்கள் 300 பேரின் அர்ப்பணிப்பு, கௌரவ பங்களிப்புக்காக கைத்தொழில் அமைச்சு மற்றும் கைத்தொழில் அபிவிருத்திச் சபையினால் "2023 தேசிய கைத்தொழில் சிறப்பு விருது விழா" ஒழுங்குசெய்யப்பட்டது. மேலும், ஏற்றுமதி சார்பான உற்பத்திப் பொருளாதாரமொன்றுக்கு அவர்களை மென்மேலும் வலுவூட்டும் நோக்கிலாகும். மேன்மை தங்கிய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, கைத்தொழில் மற்றும் சுகாதார அமைச்சர் வைத்தியர் ரமேஷ் பத்திரண, சிறிய மற்றும் நடுத்தர அளவான தொழில்முயற்சிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் திரு. பிரசன்ன ரணவீர, முதனிலைக் கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் சாமர சம்பத் தசநாயக்க உள்ளிட்ட சிறப்பு விருந்தினர்கள் பலரின் பங்கேற்புடன் அது நவம்பர் மாதம் 01 ஆம் திகதி கொழும்பு தாமரைத் தடாகம் (நெளும் பொக்குன) அரங்கில் வெகு விமர்சையாக நடைபெற்றது.

இலங்கையின் அனைத்து மாவட்டங்களையும் உள்ளடக்குகின்றவாறு நுண், சிறிய, நடுத்தர மற்றும் பாரியளவு கைத்தொழில்களின் கீழ் விண்ணப்பித்த 4,000 போட்டிகர கைத்தொழில்களில், துறைபோந்த நடுவர் குழாமொன்றினால் தேசிய கைத்தொழில் சிறப்பு விருது விழாவில் 300 வெற்றியாளர்கள் தெரிவுசெய்யப்பட்டனர். செனொடா பிறைவேற் லிமிற்றட் - நுண் அளவு, தொட்டவத்த இன்ஜினியரின் வர்க்ஸ்

- நுண் அளவு, தனூஷா குருப் ஒவ் கம்பனி – நடுத்தர அளவு மற்றும் டிப்ட் பிரடக்ட்ஸ் பீ.எல்.சி. – பாரிய அளவு முதலியவற்றில் முழு செயலாற்றுகைக்கான கௌரவிப்பாக பிளாட்டினம் விருதுகளை அதிமேதகு சனாதிபதி ரணில் விக்ரமசிங்க அவர்கள் வழங்கி வைத்தார்.






### 3) "Industry 2023" – தேசிய கைத்தொழில் கண்காட்சி



ஏற்றுமதியை மையப்படுத்திய பொருளாதாரமொன்றைக் கட்டியெழுப்பும் பொருட்டு உள்நாட்டு கைத்தொழில்களை பலப்படுத்துவதற்கு கைத்தொழில் அமைச்சு, கைத்தொழில் அபிவிருத்திச் சபை, அமைச்சின் கீழ் இயங்கும் ஏனைய நிறுவனங்கள், தனியார் துறை ஒத்துழைப்புடன் "Industry 2023" தேசிய கைத்தொழில் கண்காட்சியை ஒழுங்குசெய்தன. இவ்வைபவம் 2023 யூன் 22 ஆம் திகதி பிரதமர் கௌரவ தினேஷ் குணவர்தன அவர்கள் தலைமையில் BMICH இல் ஆரம்பமானது. 2023 கைத்தொழில் கண்காட்சி தொடர்ச்சியாக நான்கு நாட்கள் வெகு சிறப்பாக நடைபெற்றது. இலங்கையின் ஒட்டுமொத்த கைத்தொழில்களையும் உள்ளடக்குகின்றவாறு நுண், சிறிய, நடுத்தர மற்றும் பாரியளவு கைத்தொழில்களை இணைத்துக்கொண்டு 21 துறைகளைப் பிரதிநிதித்துவப்படுத்தி 700 க்கும் அதிகமான காட்சிப்படுத்துநர்கள் இந்த பாரிய கண்காட்சியில் உள்வாங்கப்பட்டிருந்தனர்.

இத்தேசிய கைத்தொழில் கண்காட்சி மூலம் கைத்தொழில்களை ஊக்குவிப்பதற்கு, புதிய தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்துவதற்கு, புத்தாக்கங்களை ஊக்குவிப்பதற்கு, உள்நாட்டு மற்றும் சர்வதேச தொழில்முயற்சியாளர்கள், வழங்குநர்கள் மற்றும் வாங்குநர்களை ஒன்றிணைப்பதற்கும், இலங்கையின் புதிய கைத்தொழில்களுக்கு பரந்தளவிலான பரப்பொன்றை உருவாக்குவதற்கு வாய்ப்பு உருவாக்கிக் கொடுக்கப்பட்டுள்ளது. அதேபோல், இலங்கைச் சந்தையில் பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திகளுக்கான கேள்வியை அதிகரிப்பதுடன், இளைஞர் மற்றும் மகளிர் முயற்சியாண்மையை அதிகரிப்பதற்கு இதன் மூலம் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

### 4) தென்மாகாண கைத்தொழில் கண்காட்சி – 2023 (Industry 2023 Galle Edition)



நாட்டில் ஏற்றுமதி சார்பான உற்பத்திப் பொருளாதாரமொன்றை வலுவூட்டும் நோக்குடன் கைத்தொழில் அமைச்சுடனும் கைத்தொழில் அபிவிருத்திச் சபையுடனும் இணைந்து Industry 2023 Galle Edition தென்மாகாண கைத்தொழில் கண்காட்சி ஒழுங்குசெய்யப்பட்டுள்ளது. கைத்தொழில் மற்றும் சுகாதார அமைச்சர் மருத்துவர் ரமேஷ் பத்திரண அவர்கள் தலைமையிலும், சிறிய மற்றும் நடுத்தர அளவான தொழில்முயற்சி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் பிரசன்ன ரணவீர அவர்கள் உள்ளிட்ட சிறப்பதிதிகள் பலரின் பங்கேற்புடன் டிசம்பர் 28 ஆம் திகதி காலி சமனல விளையாட்டுத் திடலில் தென்மாகாண கைத்தொழில் கண்காட்சி நடைபெற்றது. அது புத்தாக்க, புதிய தொழில்நுட்பத்துடனும் குறிப்பாக தென்மாகாண புதிய கைத்தொழில்கள் அடங்கிய 300 சிற்றறைகளைக் கொண்டதாகும்.

இவ்வைபவத்திற்கு தென்மாகாண ஆளுநர் கலாநிதி விலீ கமகே, காலி மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் சம்பத் அத்துகோரள, கைத்தொழில் அமைச்சின் செயலாளர் திருமதி திலகா ஜயசுந்தர, தென்மாகாண பிரதம செயலாளர் திரு. சுமித் அலஹகோன், காலி மாவட்ட செயலாளர் திரு. சாந்த வீரசிங்க, கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் தவிசாளர் வைத்தியர் சாரங்க அலஹப்பெரும, தென்மாகாண நிருவாக ஆணையாளர் திரு. ரணில் விக்ரமசேக்கர, காலி மாவட்ட முன்னாள் மாநகர முதல்வர் பிரியந்த சஹபந்து, கைத்தொழில் அமைச்சின் அனைத்து மேலதிக செயலாளர்கள் உள்ளிட்ட சிறப்பு விருந்தினர்கள் பலரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.










### 5) வடமாகாண கைத்தொழில் கண்காட்சி - 2023 (Industry 2023 Jaffna Edition)



நாட்டில் ஏற்றுமதி சார்பான உற்பத்திப் பொருளாதாரமொன்றை வலுவூட்டும் நோக்குடன் கைத்தொழில் அமைச்சும் கைத்தொழில் அபிவிருத்திச் சபையும் இணைந்து Industry 2023 Jaffna Edition வடக்கு மாகாண கைத்தொழில் கண்காட்சியை ஒழுங்குசெய்துள்ளது. கைத்தொழில் மற்றும் சுகாதார அமைச்சர் வைத்தியர் ரமேஷ் பத்திரண அவர்கள் தலைமையிலும், கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்த அவர்களதும் பங்கேற்புடன் யாழ்ப்பாணம் காலாசார நிலைய வளவில் இது ஆரம்பமானது.

வடமாகாணத்திற்கு தனிவேறான 20 கைத்தொழில் துறைகளின் கீழ் 300க்கும் மேற்பட்ட கண்காட்சிக்கூடங்களை உள்ளடக்குகின்றவாறு புத்தாக்கங்களையும், புதிய தொழில்நுட்பங்களையும் இக்கண்காட்சியில் காண முடிந்தது. சிறிய மற்றும் நடுத்தர அளவான தொழில்முயற்சி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் பிரசன்ன ரணவீர, கைத்தொழில் அமைச்சின் செயலாளர் திருமதி திலகா ஜயசுந்தர, கைத்தொழில் அபிவிருத்தி சபையின் தவிசாளர் வைத்தியர் சாரங்க அலஹப்பெரும, யாழ்ப்பாணம் பிரதி கொன்சல் ஜெனரல் திரு. ராம் மஹேஷ், வடமாகாண பிரதம செயலாளர் திரு. எஸ்.எம்.சமன் பந்துலசேன, மாவட்ட செயலாளர் திரு. அம்பலவாணர் சிவபாலசுந்தரம், Koriean Spa Pachaging தனியார் கம்பனியின் பிரதம நிறைவேற்று அதிகாரி திரு. நலின் அந்தனி, Diana Resycling Manufacturing & Play Equipment நிறுவனத்தின் திரு. ரி.தவராசா ஆகியோர் உள்ளிட்ட சிறப்பு விருந்தினர்கள் பலரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.






### 6) மத்திய மாகாண கைத்தொழில் கண்காட்சி – 2023 (Industry 2023 Kandy Edition)



மத்திய மாகாண ஆளுநர் அலுவலகம், மத்திய மாகாண கைத்தொழில் அமைச்சு உள்ளிட்ட ஏனைய அரச மற்றும் தனியார் நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் கைத்தொழில் அமைச்சினாலும் கைத்தொழில் அபிவிருத்திச் சபையினாலும் Industry 2023 Kandy Edition மத்திய மாகாண கைத்தொழில் கண்காட்சி ஒழுங்கு செய்யப்பட்டது. மத்திய மாகாண ஆளுநர் திரு. லலித் யூ.கமகே, சிறிய மற்றும் நடுத்தர அளவான தொழில்முயற்சி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் திரு. பிரசன்ன ரணவீர உள்ளிட்ட சிறப்பு விருந்தினர்களின் பங்கேற்புடன் கண்டி பழைய போகம்பறை சிறைச்சாலை வளவில் அது நடைபெற்றது.

மத்திய மாகாணத்திற்கு தனிவேறான 20 கைத்தொழில் துறைகளின் கீழ் 300க்கு மேற்பட்ட கண்காட்சிக் கூடங்களை உள்ளடக்குகின்றவாறு புத்தாக்க, புதிய தொழில்நுட்பத்தைக் கொண்ட இக்கைத்தொழில் கண்காட்சி அமைந்திருந்தது.

இந்நிகழ்விற்கு கைத்தொழில் அமைச்சின் செயலாளர் திருமதி திலகா ஜயசுந்தர, கைத்தொழில் அமைச்சின் மேலதிக செயலாளர் திரு. சமிந்த பதிராஜ, இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் தவிசாளர் வைத்தியர் சாரங்க அலஹப்பெரும, மத்திய மாகாண பிரதம செயலாளர் திரு. ஜீ.எச்.எம்.ஏ.பிரேமசிங்க, மத்திய மாகாண ஆளுநரின் செயலாளர் திரு. எம்.டபிள்யு,எம். எம்.மடஹபொல, மத்திய மாகாண கைத்தொழில் அமைச்சின் செயலாளர் திரு. கே.ஜீ.உபாலி ரணவக்க, கைத்தொழிலாளர்கள், தொழில்முயற்சிகள் உள்ளிட்ட பெரும் எண்ணிக்கையான சிறப்பு விருந்தினர்கள் இணைந்துகொண்டனர்.

### 7) படைவீரர்களின் குடும்பங்களின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புதல்

படைவீரர்களின் குடும்பங்களின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கும் நாட்டின் பொருளாதாரத்திற்கு



பேண்தகு பங்களிப்பை வழங்குவதற்கும் இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபை, ரணவிரு சேவா அதிகார சபை, பாட்டா நிறுவனம் ஆகியன இணைந்து நிகழ்ச்சித்திட்டமொன்றை முடுக்கிவிட்டுள்ளது. அதன்படி, இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபையினால் பாதணிகள் உற்பத்தி பற்றிய பயிற்சியொன்றை வழங்கி அவர்களுக்கு பாட்டா நிறுவனத்தினால் உப ஒப்பந்த முறைப்படி பாதணிக் கூறுகளை உற்பத்திசெய்வதற்கு இந்நிகழ்ச்சித்திட்டம் திட்டமிடப்பட்டுள்ளது.

### 8) 'பாடசாலை கைத்தொழில் முயற்சியாண்மை வட்டம்' நிகழ்ச்சித்திட்டம்

பாடசாலை மட்டத்தில் முயற்சியாண்மையை ஊக்குவிப்பதற்காக கல்வி அமைச்சினாலும் கைத்தொழில்



அமைச்சினாலும் IDB உடன் ஒருங்கிணைப்புடன் இந்த நிகழ்ச்சித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. சவால்களை எதிர்நோக்கக்கூடிய தமது திறமைகளின் அடிப்படையில் நம்பிக்கைவைத்து செயலாற்றும் தனிநபரொருவரைக் கட்டியெழுப்புவதற்கான முயற்சியாண்மைக் கலாசாரமொன்றை உருவாக்குவது இதன் முக்கிய நோக்கமாகும். தற்போது 350க்கு மேற்பட்ட பாடசாலை முயற்சியாண்மை வட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், 2024 ஆம் ஆண்டில் 5000 வரை இதனை அதிகரிப்பதற்கு இலக்கிடப்பட்டுள்ளது.

### 9) தேசிய உணவு பானங்கள் கருத்தரங்கு - 2023

உணவு பானங்கள் சார்ந்த உலக சந்தையில் வெற்றிகரமாக பிரவேசிப்பதற்கு இந்நாட்டு உணவு பான உற்பத்திப் பிரிவுக்கு அவசியமாகின்ற வழிகாட்டலை வழங்கும் நோக்குடன் கைத்தொழில் அமைச்சு, கைத்தொழில் அபிவிருத்திச் சபை (IDB), ஐக்கிய நாடுகள் கைத்தொழில் அபிவிருத்தி தாபனம் (UNIDO) ஆகியவற்றினால் ஒழுங்குசெய்யப்பட்ட தேசிய உணவு பானங்கள் கருத்தரங்கு (National Food & Beverage Conference-2023) கைத்தொழில் மற்றும் சுகாதார அமைச்சர் வைத்தியர் ரமேஷ் பத்திரண அவர்கள் தலைமையில் கொழும்பு மரீனோ பீஷ் ஹோட்டலில் நடைபெற்றது.




இங்கு, Finagle Lanka (Pvt) Ltd இன் பிரதான நிறைவேற்று அதிகாரி திரு. குஷான் அமரசிங்க, Ceylon Plant Food (Pvt) Ltd இன் தலைவர் திரு. அனீஷ் ஜுனைட், Nelna Agri Development (Pvt) Ltd இன் பணிப்பாளர் திருமதி புன்யா நாணாயக்கார ஆகியோர் முக்கிய உரையாற்றுவதற்காக இணைந்து கொண்டனர். முக்கிய உரைகளின் இறுதியில் உணவு பான உற்பத்தித் துறையுடன் சம்பந்தப்பட்ட அரச அதிகாரிகளுடன் இலங்கையின் உணவு பானக் கைத்தொழிலின் எதிர்காலம் குறித்து கலந்தாலோசிக்கப்பட்டது. உலகின் தேவைகளை அடையாளம் கண்டு இத்துறையில் ஏற்றுமதிகளை அதிகரிப்பது குறித்தும் இலங்கையின் மரக்கறி மற்றும் பழங்களின் ஏற்றுமதி ஆற்றல் குறித்தும் இங்கு நீண்டநேரம் கலந்தாலோசிக்கப்பட்டது.

இக்கருத்தரங்கிற்கு கைத்தொழில் அமைச்சின் மேலதிக செயலாளர் திரு. ரஞ்ஜித் விமலசூரிய, கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் தலைவர் வைத்தியர் சாரங்க அலஹப்பெரும, அரச அதிகாரிகள், UNIDO இன் தலைவர்கள், Sri Lanka Food Processors Association தலைவர் திரு. துசித் விஜேசிங்க, தனியார்துறை அதிகாரிகள், உணவு பான கைத்தொழில்கள் சார்ந்த முயற்சியாண்மையினர், கைத்தொழிலாளர்கள், முதலீட்டாளர்கள் உள்ளிட் பெரும் திரளானவர்கள் இதில் கலந்துகொண்டனர்.

### 10) ஏற்றுமதி சார்பான பொருளாதாரமொன்றை நோக்கி – உலக உணவுக் கண்காட்சி, மொஸ்கோ 2023 (World Food Moscow - 2023







கௌரவ கைத்தொழில் அமைச்சரினதும் கைத்தொழில் அமைச்சின் செயலாளரினதும் வழிகாட்டலின் கீழ் கைத்தொழில் அபிவிருத்திச் சபை "World Food Moscow 2023" இல் கலந்துகொண்டது. ரஷ்யாவின் மொஸ்கோ நகரில் குரோகஸ் எக்ஸ்போ இல் இக்கண்காட்சி இடம்பெற்றது. குறிப்பாக, ரஷ்யாவிலும் அதனை அண்டிய நாடுகளிலும் பல்வேறு வெளிநாட்டு வாங்குநர்களை தொடர்புபடுத்திக்கொள்வதற்கும், வெளிநாட்டுச் சந்தையில் நிலவும் புதிய போக்குகள் குறித்து ஆராய்வதற்கும் இலங்கை ஏற்றுமதியாளர்களுக்கு இக்கண்காட்சி மிகச் சிறந்த அரங்கொன்றை அமைத்துக் கொடுத்தது.

World Food Moscow என்பது உணவுக் கைத்தொழில் தொழில்வாண்மையினர், அத்துறையில் நிபுணத்துவம் வாய்ந்தவர்கள், உணவு உற்பத்தியாளர்கள், வழங்குநர்கள், மொத்த மற்றும் சில்லறை வர்த்தகததில் வாங்குநர்களைப் போன்றே, பொது உணவு வழங்கல் தொழில்முயற்சிகளை ஒன்றிணைக்கும் ஒரு கைத்தொழில் அரங்காகும். ரஷ்யாவின் இலங்கைக்கான தூதுவர் பேராசிரியர் (திருமதி) ஜனிதா ஏ.லியனகே, கல்வி மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சர் திரு. சமில ஜயரத்ன ஆகியோர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

### 11) 20 ஆவது சீன-ஆசிய கண்காட்சி (20th China-ASEAN Expo)



"20th China – ASEAN Expo 2023" சீனாவின் Nanning International Convention & Exhibition Center (NICEC) இல் நடைபெற்றது. உணவு பானங்கள், விவசாய உற்பத்திகள், சர்வதேச வர்த்தகப் பண்டங்கள், நுகர்வுப் பண்டங்கள், சேவை உற்பத்திகள் முதலியன முக்கிய பிரிவுகளாக இருந்தன. மக்கட் சீன குடியரசின் Guangzhou இல் இலங்கை கொன்சல் ஜெனரல் அலுவலகத்தினதும் கைத்தொழில் அபிவிருத்திச் சபையினதும் உதவியுடன் இலங்கைக் கம்பனிகள் இக்கண்காட்சியில் பங்குபற்றின.

### 12) வியட்நாமின் ஹனோய் நகரில் மனங்கவர் இலங்கை SME உற்பத்திகளின் கண்காட்சி

வியட்நாமின் இலங்கைத் தூதுவராலயம், கைத்தொழில் அபிவிருத்திச் சபையுடன் (IDB) ஒத்துழைத்து இலங்கையின் சிறிய மற்றும் நடுத்தர அளவான தொழில்முயற்சியாளர்களின் உற்பத்திகளை ஊக்குவிப்பதற்காக *"Sri Lankan Fair"* கண்காட்சியை ஒழுங்கு செய்தன. இரு நாட்களாக நடைபெற்ற இந்த இலங்கை உற்பத்திகளின் கண்காட்சியில் வியட்நாம் நாட்டவர்கள், ஹனோயில் வாழும் வேறு வெளிநாட்டவர்கள், சிரேட்ட அரச மற்றும் நிறுவனங்களின் உயரதிகாரிகள், ஹனோயின் மேன்மைதங்கிய தூதுவர்கள் உள்ளிட்ட இராஜதந்திரிகள் உள்ளிட்ட பெருந்திரளானவர்கள் கலந்துகொண்டனர்.



இலங்கை உற்பத்திகளின் கண்காட்சி, இலங்கைத் தூதுவராலயத்தில் நடைபெற்றது. மரப்பலகை மற்றும் அலங்காரப் பொருள்கள், சம்பிரதாய இலங்கை முகமூடிகள், ஓவியங்கள், பத்திக் மற்றும் ஏனைய தயாரித்த ஆடைகள், கண்கவர் பொருள்கள், கையினால் செய்த வெள்ளி ஆபரணங்கள், இரத்தினக்கற்கள், மென் விளையாட்டுப் பொருள்கள், சிறந்த மர செதுக்குவேலைகள், மருந்துத் தேயிலை மற்றும் பலசரக்குகள், பித்தளைப் பாண்டங்கள் முதலியன அங்கு காட்சிப்படுத்தப்பட்டன. ஹனோயில் அமைந்துள்ள டில்மா நிறுவனத்தினால் அதே வளவில் தயாரிக்கப்பட்ட இலங்கை சம்பிரதாய உணவு பரிமாறல் மற்றும் விற்பனை, சம்பிரதாய இலங்கைத் தேயிலை பரிமாறல் மூலம் இந்த இரு நாள் வைபவம் பெரிதும் வெற்றி பெற்றது.

இலங்கை உற்பத்திகளின் கண்காட்சி சுபவேளையில் ஆரம்பித்து ஹனோயிலுள்ள இலங்கைத் தூதுவர் பேராசிரியர் ஏ.சாஜ் யூ.மென்டிஸ் கருத்துத் தெரிவிக்கும் போது அபிவிருத்தியடைந்த, வளர்முக அல்லது குறைந்தளவு அபிவிருத்தியடைந்த முதலான எந்தவொரு பொருளாதாரத்தினதும் முதுகெலும்பாக சிறிய மற்றும் நடுத்தர அளவான தொழில்முயற்சியாளர்கள் பெரும்பாலும் விபரிக்கப்படுவதாகவும்

கருதப்படுவதாகவும் குறிப்பிட்டார். வர்த்தக திணைக்களத்தின் பணிப்பாளரும் அங்குரார்ப்பண நிகழ்வில் உரையாற்றினார்.

ஹனோய்க்கு வருகைதந்த இலங்கையின் சிறிய மற்றும் நடுத்தர அளவான 15க்கும் அதிகமான தொழில்முயற்சியாளர்களுக்கு நீண்டகால வர்த்தக, வாணிப தொடர்புகளை ஏற்படுத்திக்கொள்வதற்கும், அதன் மூலம் இலங்கை உற்பத்திகளை வியட்நாமுக்கு ஏற்றுமதி செய்வதற்கும் ஏற்றதாக அமையும் பொருட்டும், Bat Trang குயவர் கிராமம், மரப்பலகை கைப்பணிக் கிராமம், வியட்நாம் இரத்தினக்கல் சங்கத்தைப் பார்வையிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டன. மேலும், தூதுவராலயத்தினால் இலங்கை தொழில்முயற்சியாளர்களுக்கு அவர்களின் வர்த்தக நிறுவனங்களை ஊக்குவிப்பதற்கு B2B கூட்டங்கள் ஒழுங்கு செய்யப்பட்டன.

வியட்நாம் நாட்டவர்களுக்கும் ஹனோயில் இருக்கின்ற ஏனைய வெளிநாட்டவர்களுக்கும் மத்தியில் இந்நாட்டின் புகழுருவை மேம்படுத்துவதற்கு இந்த வர்த்தக செயல்முனைப்பு காரணமாக அமைந்தது.

### 13) Food Africa 2023 கண்காட்சி




கைத்தொழில் அபிவிருத்திச் சபை, எகிப்தின் கைரோ நகரில் 2023 டிசம்பர் மாதம் 10 முதல் 12 வரை நடைபெற்ற **Food Africa 2023** கண்காட்சியில் பங்கேற்றது. அயல் நாடுகளிலிருந்து வருகைதந்த பல்வேறு வெளிநாட்டவர்களை உள்ளடக்கிய சிறப்பான அரங்கொன்றை ஏற்படுத்திக்கொடுத்த இக்கண்காட்சி, வெளிநாட்டுச் சந்தையில் நிலவும் நவீன போக்குகளை ஆராய்வதற்கு அரியதொரு சந்தர்ப்பமாக அமைந்தது. **Food Africa** என்பது உணவு மற்றும் பொதியிடல் கைத்தொழில் தொழிற்றுறையாளர்களையும் தேர்ச்சிபெற்றவர்களையும் ஒன்றிணைக்கும் ஒரு கைத்தொழில் அரங்காகும். ஒரு நாடு என்ற ரீதியில் இக்கண்காட்சியின்போது தெங்குசார் உற்பத்திகள், பலசரக்குகள், தாவர பிழிசாற்று உற்பத்திகள் போன்ற உணவு பான உற்பத்திகள் காட்சிப்படுத்தப்பட்டன. எகிப்திலுள்ள இலங்கைக்கான தூதுவர், மேண்மைதங்கிய எம்.கே.பத்மநாதன், இரண்டாவது செயலாளர் - வர்த்தகம் திரு. கசுன் பாலசூரிய ஆகியோர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

### 14) உள்நாட்டு சூட்டிகையான மின்சார சக்கர நாற்காலி உற்பத்தியை மேம்படுத்துவதற்கும் தொழில்முயற்சியாளர்களுக்கு உதவுவதற்கும் "Moving on Wheels" என்ற புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் IDB கைச்சாத்திடல்



சுகாதார சிகிச்சைத் துறையில் மற்றுமொரு தொழிற்றுறையாளருடன் வெற்றிகரமான பயணத்தை ஆரம்பிப்பதைக் குறிக்குமுகமாக மின்சார சக்கர நாற்காலிகளையும் அவற்றின் உதிரிப்பாகங்களையும் உள்நாட்டில் உற்பத்திசெய்வதை ஊக்குவிப்பதற்காக கைத்தொழில் அபிவிருத்திச் சபை புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திட்டது. மின்சார சக்கர நாற்காலிகளையும் உதிரிப்பாகங்களையும் உள்நாட்டில் உற்பத்தி செய்தல், நவீன மாதிரியில் ஒன்றுகோர்த்தல், சர்வதேச சந்தையில் சந்தைப்படுத்துவதற்கு இலங்கையின் முதலாவது ஒரேயொரு மின்சார சக்கர நாற்காலி உருவாக்குநரும் உற்பத்தியாளருமான "Moving on Wheels" மற்றும் கைத்தொழில் அபிவிருத்திச் சபைக்கும் இடையில் உள்ளூர் தேவையான

தரப்படுத்தலை விருத்திசெய்யும் நோக்குடனான மற்றுமொரு பாரிய நிகழ்ச்சித்திட்டத்தின் ஆரம்பம் இங்கு இடம்பெற்றது. இங்கு தரக்கட்டுப்பாடும் தரநியமங்களும், தேவையான பரிசோதனைகள், உள்நாட்டு வழங்கல் சங்கிலியொன்றை உருவாக்குதலும் மூன்றாம் தரப்பு தரச் சான்றுறுதிப்படுத்தலின் பேரில் முன்னெடுத்துச் செல்வதற்காக பரிமாற்றுத் தொழில்நுட்பத்தைப் பிரபல்யப்படுத்துவதுடன் கட்டியெழுப்பப்படுகிறது.

"Moving on Wheels" நிறுவனத்தின் தாபகரான திரு. தரங்க வகசெனவி அந்நிறுவனத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தியதுடன், வைத்தியர் சாரங்க அலஹப்பெரும அவர்களும், தவிசாளரும் கைத்தொழில் அபிவிருத்திச் சபையை பிரதிநிதித்துவப்படுத்தினர்.

## 15) இலக்கிட்ட நோக்கங்களை அடைந்துகொள்வதற்காக வழங்கல் சங்கிலிகளை முகாமை செய்வதன் இன்றியமையாமை



கைத்தொழில் அமைச்சின் கீழ் இயங்கும் கைத்தொழில் அபிவிருத்திச் சபை (IDB) வழங்கல் மற்றும் பொருள்சார் முகாமைத்துவ நிறுவகத்துடன் (ISMM) கைத்தொழில் துறையை மேலும் ஊக்குவிக்கும் நோக்குடன் கைத்தொழில் துறையின் வழங்கல்களும் பொருள்சார் முகாமைத்துவமும் பற்றிய புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திட்டுள்ளன. அது கைத்தொழில் மற்றும் சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரண அவர்கள் தலைமையில் கைத்தொழில் அமைச்சில் இடம்பெற்றது.

கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் தவிசாளர் வைத்தியர் சாரங்க அலஹப்பெரும அவர்களும் ISMM நிறுவனத்தின் தவிசாளர் ஜயந்த கால்லெஹேவா அவர்களும் கைச்சாத்திட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் மூலம் கைத்தொழில் துறைக்குரிய வழங்கல் சங்கிலியை முகாமை செய்வதற்காக அடிப்படைக் கொள்கைச் சட்டகமொன்றை உருவாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

அதேபோல், இப்புரிந்துணர்வு ஒப்பந்தத்தை அமுல்படுத்துவதன் ஊடாக தொழிற்சாலைகளின் வழங்கல் சங்கிலிச் செயன்முறை வினைத்திறனானதாகவும் பலம்பொருந்தியதாகவும் மாறும்.

ISMM நிறுவனம், 50 வருட நீண்ட வரலாற்றைக் கொண்ட, வழங்கல் மற்றும் பொருள்சார் முகாமைத்துவ துறையில் தொழிற்றுறையாளர்களை உருவாக்கும் மிக முக்கிய நிறுவனமாக விளங்குவதுடன், கைத்தொழில்களுக்கு வசதிகளை வழங்கும் முக்கிய அரச நிறுவனத்துடன் இணைந்து, தனியார்துறை மற்றும் அரசதுறை கைத்தொழில்களுக்கு வழங்கல் முகாமைத்துவமும் வழங்கல்களும் பற்றிய பல்வேறு நிகழ்ச்சிகளை நடாத்துவதற்கு கைத்தொழில் அபிவிருத்திச் சபை எதிர்பார்க்கின்றது.

## 16) Industry Sri Lanka தொலைக்காட்சி நிகழ்ச்சிக்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்து



கைத்தொழில் அமைச்சின் கீழ் இயங்கும் கைத்தொழில் அபிவிருத்திச் சபைக்கும் தேசிய தொலைக்காட்சிக்கும் இடையில் "Industry Sri Lanka" தொலைக்காட்சி நிகழ்ச்சியை ஆரம்பிப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடல் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன அவர்கள், தேசிய தொலைக்காட்சியின் தவிசாளர் கலாநிதி பிரசாத் அமரசிங்க, கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் தவிசாளர் வைத்தியர் சாரங்க அலஹப்பெரும ஆகியோரின் தலைமையில் இடம்பெற்றது. உள்ளூர்ப்

பொறிமுறையொன்றை அடிப்படையாகக்கொண்டு உள்ளூர்க் கைத்தொழிலாளரை நவீன தொழில்நுட்பத்துடன் இற்றைப்படுத்தி ஏற்றுமதி மையப்படுத்திய உற்பத்திப் பொருளாதாரமொன்றை நோக்கி ஊக்குவிக்கும் இன்றைய அரசின் எதிர்பார்ப்பை முன்வைத்து இது அமுல்படுத்தப்பட்டுள்ளது. இந்நிகழ்ச்சித்திட்டத்திற்கு நிதி அனுசரணையாளர்களாக சணச காப்புறுதிக் கம்பனி, கொமர்ஷல் வங்கியுடன் ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொள்ளப்பட்டது. வெகுசன ஊடக அமைச்சின் செயலாளர் அனுஷ பெல்பிட்ட, கைத்தொழில் அமைச்சின் மேலதிக செயலாளர் திரு. சமிந்த பத்திராஜ, சுயாதீன தொலைக்காட்சி ஊடக வலையமைப்பின் தவிசாளர் வழக்குரைஞர் சுதர்ஷன குணவர்தன, கைத்தொழில் அபிவிருத்திச் சபையினதும் தேசிய தொலைக்காட்சியினதும் அதிகாரிகள் உள்ளிட்ட சிறப்பு அதிதிகள் பலரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

## 17) "Industry" கடனுதவி வழங்குவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடல்



கைத்தொழில் அபிவிருத்திச் சபையினால் (IDB) கைத்தொழில் அபிவிருத்தி நிதியத்திலிருந்து கடன் வழங்குவதற்கு உத்தியோகபூர்வ வங்கியைத் தெரிவுசெய்த பிரதேச அபிவிருத்தி வங்கியுடன் (RDB) அதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடப்பட்டது. கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் தவிசாளர் வைத்தியர் சாரங்க அலஹப்பெரும அவர்களதும் பிரதேச அபிவிருத்தி வங்கியின் தவிசாளர் சுசந்த சில்வா அவர்களதும் தலைமையில் இந்நிகழ்வு இடம்பெற்றது.

1969 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க கைத்தொழில் அபிவிருத்திச் சட்டத்தினால் வலுவூட்டப்பட்ட கைத்தொழில் அபிவிருத்தி நிதியம், கைத்தொழில மற்றும் சுகாதார அமைச்சர் வைத்தியர் ரமேஷ் பத்திரண அவர்களினால் 10 மில்லியன் ரூபாவுடன் ஆரம்ப மீதியுடன் BMICH இல் நடைபெற்ற தேசிய கைத்தொழில் வாரத்தில் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

நாடெங்கும் பரந்துள்ள சிறிய மற்றும் நடுத்தர அளவான தொழில் முயற்சியாளர்களுக்கு Industry கடன் திட்டத்தை அமுல்படுத்துவதற்கு உத்தியோகபூர்வ வங்கி பங்காளராக பிரதேச அபிவிருத்தி வங்கியுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

ஆகக் குறைந்த ஆவணங்களின் கீழ் மிகக் குறுகிய காலத்தில், 6% ஆண்டு சலுகை வட்டி வீதத்தின் கீழ் Industry கடன் திட்டம் அமுல்படுத்தப்படுகிறது. முதல் கட்டத்தில் நாடெங்கும் பரந்துள்ள அனைத்து மாவட்டங்களையும் பிரதிநிதித்துவப்படுத்துகின்றவாறு தெரிவு செய்யப்பட்ட சிறிய மற்றும் நடுத்தர அளவான 25 தொழில்முயற்சியாளர்களுக்கு ஆளொருவருக்கு உயர்ந்தபட்சம் 5 இலட்சம் ரூபா வீதம் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் முயற்சியாண்மை அபிவிருத்திப் பிரிவின் பணிப்பாளர் திருமதி ரேணுகா ஜயலத் உள்ளிட்ட IDB அதிகாரிகள், பிரதேச அபிவிருத்தி வங்கியின் பொது முகாமையாளர் திரு. பாலித்த சுமேத உள்ளிட்ட RDB அதிகாரிகளும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

## 18) கடன் திட்டத்திற்கு 25 கைத்தொழிலாளர்கள் தெரிவுசெய்யப்பட்ட நிகழ்வு

கைத்தொழில் அமைச்சின் கீழ் இயங்கும் கைத்தொழில் அபிவிருததிச் சபை பிரதேச அபிவிருத்தி வங்கியுடன் இணைந்து இலங்கை தொழில்முயற்சிகளை முன்னேற்றுவதற்காக கடன் வழங்குவதற்கு அறிமுகப்படுததிய கைத்தொழில் அபிவிருததி நிதியம் ஆரம்பிக்கப்பட்டது. இந்நிதியத்தின் கீழ் நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவான தொழில்முயற்சியாளர்களுக்கு கடன் வழங்கப்படும். ஆரம்ப கட்டமாக 25 கைத்தொழிலாளர்களுக்கு உயர்ந்தபட்சம் தலா 5 இலட்சம் ரூபா கடன் வழங்கப்பட்டது. 6% ஆண்டு வட்டி வீதத்தின் கீழ் 3 ஆண்டு கொடுப்பனவு காலப்பகுதிக்கு இலங்கையின் ஒவ்வொரு மாவட்டத்தையும்




பிரதிநிதித்துவப்படுத்துகின்றவாறு தெரிவுசெய்யப்பட்ட நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவான 25 தொழில்முயற்சியாளர்களுக்கு 6.5 மில்லியன் ரூபா தொகை முதற் கட்டமாக வழங்கி வைக்கப்பட்டது. தற்போது 15 மில்லியன் ரூபா வரை அதிகரித்துள்ள கைத்தொழில் அபிவிருத்தி நிதியம் அடுத்து ஆண்டாகும்போது ஒரு பில்லியன் ரூபா வரை அதிகரிக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

கைத்தொழில் அமைச்சின் செயலாளர் திருமதி திலகா ஜயசுந்தர, கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் தவிசாளர் வைத்தியர் சாரங்க அலஹப்பெரும, முயற்சியாண்மை அபிவிருத்திச் சபையின் பணிப்பாளர் திருமதி ரேணுகா ஜயலத், கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் உயரதிகாரிகள், பிரதேச அபிவிருத்தி வங்கியின் உயரதிகாரிகள், தொழில்முயற்சியாளர்கள் உள்ளிட்ட பலர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

# முன்னேற்றப் பொழிப்பு

- பௌதிக முன்னேற்றம்
- நிதி முன்னேற்றம்
- உற்பத்திக் கைத்தொழில்களின் ஊக்குவிப்பிற்காக அமுல்படுத்தப்படும் விசேட நிகழ்ச்சித்திட்டங்கள்
- சவால்கள்
- எதிர்கால இலக்குகள்
- செயலாற்றுகைக் குறிகாட்டிகள்

## பௌதிக முன்னேற்றம்

- 2023 ஆம் ஆண்டில் 204 புதிய கைத்தொழில்களை ஏற்படுத்துவதற்கு உதவியது.
- ஆண்டினுள் இந்நாட்டிலுள்ள 465 கைத்தொழில்களை அபிவிருத்தி செய்வதற்கு உதவியது.
- ஆண்டினுள் 793 நுண் கைத்தொழில்களை அபிவிருத்தி செய்வதற்கு உதவியது.
- ஆண்டினுள் ஏற்றுமதி செய்வதற்குத் தயாரான 31 கைத்தொழில்கள் அபிவிருத்தி செய்யப்பட்டன.
- ஆண்டினுள் 1,162 தொழில்நுட்பப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.
- 397 முயற்சியாண்மை அபிவிருத்த நிகழ்ச்சித்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.
- 736 கைத்தொழிலாளர்களுக்கு பொறியியல் சேவைகள் வழங்கப்பட்டன.

## நிதி முன்னேற்றம்

- 2023 ஆம் ஆண்டுக்கான மீண்டெழும் மற்றும் ஏனைய மீண்டெழும் செலவினங்களின் மொத்த ஏற்பாடுகள் முறையே 517 மில்லியன் ரூபா, 94 மில்லியன் ரூபா ஆகும். அந்த மொத்த ஏற்பாடுகளில், மீண்டெழும் செலவினங்களிலிருந்து 60% உம் ஏனைய மீண்டெழும் செலவினங்களிலிருந்து 80% உம் ஆண்டினுள் செலவிடப்பட்டுள்ளது.

- அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கான ஆண்டின் ஏற்பாடுகள் 40 மில்லியன் ரூபாவாக இருந்ததுடன், சுமார் 90% க்கு கிட்டிய தொகை செலவிடப்பட்டுள்ளது.

- ஆண்டிற்குரிய மூலதனச் சொத்துக்களைக் கொள்வனவு செய்வதற்கு 60 மில்லியன் ரூபா தொகை ஒதுக்கப்பட்டுள்ளது. அதில் 65% மூலதன வரவுசெலவுத்திட்டம் ஊடாக செலவிடப்பட்டுள்ளது.

- தற்போது அமுலிலுள்ள கருத்திட்டங்களுக்கான மொத்த ஏற்பாடுகள் 100 மில்லியன் ரூபாவாக இருந்ததுடன், கருத்திட்டங்களுக்கு 30% செலவிடப்பட்டுள்ளது.

## உற்பத்திக் கைத்தொழில் ஊக்குவிப்பிற்காக அமுல்படுத்தப்படும் விசேட நிகழ்ச்சித் திட்டங்கள்

- உள்நாட்டுக் கைத்தொழில்களை சர்வதேச சந்தைக்கு கட்டியெழுப்பும் நோக்குடன் IDB இனால் BMICH இல் தேசிய கைத்தொழில் கண்காட்சியும், அதனோடு இணைந்ததாக "Industry 2023 – யாழ்ப்பாணம்" கண்காட்சியும், கண்டி போகம்பறை மைதானத்தில் கைத்தொழில் கண்காட்சியும், காலி மாவட்டத்தின் கைத்தொழில் கண்காட்சியும் ஒழுங்குசெய்யப்பட்டது.

- யூன் 22 ஐ தேசிய கைத்தொழில் தினமாக பிரகடனப்படுத்தலும், தேசிய கைத்தொழில் கண்காட்சியோடு இணைந்ததாக தேசிய கைத்தொழில் வாரமொன்றை பெயரிடுதலும்.

- பாடசாலைகளில் பாடசாலை கைத்தொழில் முயற்சியாண்மை வட்டங்களை நிறுவுதலும், எதிர்காலத்தில் பல்கலைக்கழகங்களையும் ஏனைய உயர்கல்வி நிறுவனங்களையும் உள்ளடக்குகின்றவாறு இக்கருத்திட்டத்தை விஸ்தரித்தலும்.

- பல்வேறு கைத்தொழில் துறைகளுக்கு உலக சந்தைக்கு வெற்றிகரமாக திறந்துவிடப்படுவதற்கு அவசியமான வழிகாட்டலை வழங்குவதற்காக 2023 ஆம் ஆண்டில் தேசிய உணவு பானங்கள் கருத்தரங்கையும் தேசிய இறப்பர் மற்றும் பிளாஸ்ரிக் கருத்தரங்கையும் நடாத்துதல்.

- ஏற்றுமதி சார்பான பொருளாதாரமொன்றை உருவாக்குவதற்காக 'மொஸ்கோ உலக உணவுக் கண்காட்சி, 20 ஆவது சீன-ஆசிய கண்காட்சி, வியட்நாம் ஹனோய் நகரில் இலங்கை SME உற்பத்திகள் சங்கத்தின் கண்காட்சி போன்ற சர்வதேச கண்காட்சிகளுக்கு உள்ளூர்க் கைத்தொழிலாளர்களை தொடர்புபடுத்திக்கொள்ளல்.

- 300 நுண், சிறிய, நடுத்தர மற்றும் பாரியளவு கைத்தொழில்களின் அர்ப்பணிப்பையும் பங்களிப்பையும் பாராட்டி, அவற்றின் ஏற்றுமதிகளுக்கு மேலும் உரம் சேர்க்குமுகமாக கைத்தொழில் அமைச்சும் இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபையும் இணைந்து "தேசிய கைத்தொழில் சிறப்பு விருதுகள் 2023" விழாவை ஒழுங்குசெய்தமை.

- இலங்கை கைத்தொழில்களை அபிவிருத்திசெய்வதற்காக ஆரம்பிக்கப்பட்ட முதலாவது தொலைக்காட்சி அலைவரிசையாக "Industry TV" ஐ அறிமுகப்படுத்தல். (Peo TV No. 130)

- கைத்தொழில் துறைக்குரிய தற்கால செய்திகளையும் நிகழ்வுகளையும் இற்றைப்படுத்தி கைத்தொழில்களுக்கான அர்ப்பணித்துள்ள "Industry Ceylon" ஐ அறிமுகப்படுத்தல்.

- உள்ளூர் தொழில்முயற்சியாளர்களுக்கு உலக சந்தையை நெருங்குவதற்குள்ள தடைகளை அடையாளம் காணலும், வெளிநாட்டுப் பொருளாதாரங்களுடன் புதிய பொருளாதார கூட்டுப் பங்காண்மைகளை ஏற்படுத்திக்கொள்ளலும், பாரிய சாத்தியப்பாடுள்ள வெளிநாடுகளின் தூதுவராலயங்கள் ஊடாக தொடர்புகளைக் கட்டியெழுப்பிக்கொள்வதற்கு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தலும் (Connect Sri Lanka).

- இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் கைத்தொழில் அபிவிருத்திச் சட்டத்திற்கிணங்க கைத்தொழில் அபிவிருத்தி நிதியம் உருவாக்கப்பட்டுள்ளது. அதன் மூலம் சிற்றளவு கைத்தொழிலாளர்களுக்கு அவர்களின் கைத்தொழில்களை அபிவிருத்தி மற்றும் அபிவிருத்தித் தேவைகளுக்காக 5 இலட்சம் ரூபா என்ற எல்லைக்குட்பட்டு கடன் வழங்குதல்.

## சவால்கள்

- கைத்தொழில் அபிவிருத்திச் சட்டத்தை வலுவாக்கம் செய்தல் - 1969 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க கைத்தொழில் அபிவிருத்திச் சட்டத்தை மீள வலுவாக்கம் செய்வதன் ஊடாக கைத்தொழில்களை ஊக்குவிப்பதற்கும் மேம்படுத்துவதற்கும் அபிவிருத்தி செய்வதற்கும் அடிப்படையையும் பின்புல உதவியையும் வழங்க வேண்டும்.

- கைத்தொழிற் பேட்டைகளை நிறுவுவதற்கு காணிகளைக் கையகப்படுத்தும் பிரச்சினைகள் - பிரதேச செயலகப் பிரிவுகளின் காணிகளில் அதிகளவானவற்றின் உரிமை பற்றிய தரவுகள் காணப்படாமையும், உரிமையாளர்களுக்கு இழப்பீட்டுக் கொடுப்பனவு செலுத்தும் முறைகளிலுள்ள குறைபாடுகளும்.

- இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் தலைமை அலுவலகம் அமைந்துள்ள காணியின் உரிமையை சபைக்கு உரிமைமாற்றம் செய்தல் - இல.615, காலி வீதி, கட்டுபெத்த, மொரட்டுவை என்ற இடத்தில் அமைந்துள்ள காணி 1970 முதல் 50 வருடங்களுக்குக் கூடுதலான காலமாக

சபையினால் பயன்படுத்தப்பட்டுள்ளது. எனினும், இக்காணி சட்டரீதியாக கைத்தொழில் அபிவிருத்திச் சபைக்கு உரிமைமாற்றம் செய்யப்பட்டிருப்பதற்கான சாட்சி எதுவும் சபை வசமில்லை.

## எதிர்கால இலக்குகள்

- 2030 ஆம் ஆண்டளவில் 'வியாபாரம் செய்வதற்கான வசதியை' தசாப்தத்தின் 99 ஆவது இடத்திலிருந்து 50 ஆவது இடத்திற்கு கீழ் கொண்டுவருதல்.
- 2030 ஆம் ஆண்டளவில முயற்சியாண்மை % (கைத்தொழில்களைக் கட்டியெழுப்புவதை அதிகரித்தல்) – 2.8% முதல் 10% வரை அதிகரித்தல்.
- 2030 ஆம் ஆண்டளவில் 'GDP இற்காக உற்பத்திக் கைத்தொழில்களின் பங்களிப்பு – 15% முதல் 25% வரை அதிகரித்தல். (உறுதிப்பாடு – புதிய/தற்போதுள்ள கைத்தொழில்கள்)
- 2030 ஆம் ஆண்டளவில் இன்றைய தலா ஏற்றுமதியை (596 US$) உலகளாவிய சராசரியின் (3055 US$) 50% (1527 US$) வரை அதிகரித்தல்.
- 2030 ஆம் ஆண்டளவில் கைத்தொழில் வலயங்களுக்கான காணிகளின் சதவீதத்தை 0.04% இலிருந்து 1% வரை அதிகரித்தல்.
- வள செயலாற்றுகை, பசுமைத் தொழில்நுட்பம், சுழல் பொருளாதார எண்ணக்கருக்களைப் பின்பற்றுதலும் உள்ளடக்கிக்கொள்ளப்படும் அதேவேளை, குறைப்புச்செய்யும் செயற்பாடுகளை அதிகரிப்பதன் ஊடாக 2030 ஆம் ஆண்டளவில் கைத்தொழில் துறையின் BAU தரத்திற்கு எதிராக பச்சைவீட்டு வாயுக்களின் (GHG) வெளியேற்றத்தை 7% இனால் குறைத்தல்.

## செயலாற்றுகைக் குறிகாட்டிகள்

### கைத்தொழில் பேட்டைகளின் அபிவிருத்தி

| இல. | விபரம் | அடிப்படை ஆண்டு (உள்ளபடியான பெறுமதி - 2022) | உத்தேச பெறுமானம் - 2023 | முன்னேற்றம் 2023.12.31 |
|---|---|---|---|---|
| 1 | நிறுவப்பட்டுள்ள புதிய கைத்தொழிற் பேட்டைகளின் எண்ணிக்கை | 16 | 2 | 1 |
| 2 | வர்த்தக உற்பத்தியில் ஈடுபட்டுள்ள மொத்த கைத்தொழில்களின் எண்ணிக்கை – திரண்ட | 277 | 20 | 14 |
| 3 | வர்த்தக உற்பத்தியில் ஈடுபட்டுள்ள புதிய கைத்தொழில்கள் | - | 10 | 6 |
| 4 | பிறப்பிக்கப்பட்ட மொத்த தொழில்வாய்ப்புகள் | 8595 | 400 | 295 |
| 5 | பிறப்பிக்கப்பட்ட புதிய தொழில்வாய்ப்புகள் | - | 300 | 180 |
| 6 | வேறு | - | - | - |

## உற்பத்திக் கைத்தொழில்களின் தராதர அபிவிருத்தி

| இல. | விபரம் | அடிப்படை ஆண்டு (உள்ளபடியான பெறுமதி - 2022) | உத்தேச பெறுமானம் - 2023 | முன்னேற்றம் 2023.12.31 |
|---|---|---|---|---|
| 1 | தரச் சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்ள உதவிய கைத்தொழில்களின் எண்ணிக்கை | 1,480 | 1,924 | 1,305 |
| 2 | வேறு தர மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டங்கள் | 158 | 205 | 255 |

## உற்பத்திக் கைத்தொழில்களின் தர அபிவிருத்தி - உற்பத்திக் கைத்தொழில்களுக்கு வழங்கப்பட்டுள்ள பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்

| உற்பத்திக் கைத்தொழில்களுக்கு வழங்கப்பட்டுள்ள பயிற்சி வாய்ப்புகளின் எண்ணிக்கை | | அடிப்படை ஆண்டு (உள்ளபடியான பெறுமதி - 2022) | உத்தேச பெறுமானம் - 2023 | முன்னேற்றம் 2023.12.31 |
|---|---|---|---|---|
| **1. தேர்ச்சிகளையும் இயல்திறன்களையும் கட்டியெழுப்புதல் - தொழில்நுட்பம் சாராத** | | | | |
| 1.1 நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை | உள்நாடு | 273 | 475 | 397 |
| | வெளிநாடு | - | - | - |
| 1.2 பயனாளிகளின் எண்ணிக்கை | உள்நாடு | 3,273 | 11,875 | 14,618 |
| | வெளிநாடு | - | - | - |
| **2. தேர்ச்சிகளையும் இயல்திறன்களையும் கட்டியெழுப்புதல் - தொழில்நுட்பம் சார்** | | | | |
| 1.1 நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை | உள்நாடு | 417 | 2,262 | 1,003 |
| | வெளிநாடு | - | - | - |
| 1.2 பயனாளிகளின் எண்ணிக்கை | உள்நாடு | 8,667 | 55,882 | 21,843 |
| | வெளிநாடு | - | - | - |
| மொத்த நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை | உள்நாடு | **690** | **2,737** | **1,400** |
| | வெளிநாடு | - | - | - |
| மொத்த பயனாளிகளின் எண்ணிக்கை | உள்நாடு | **11,940** | **67,757** | **36,461** |
| | வெளிநாடு | - | - | - |



## 2023 ஆம் ஆண்டில் முன்னெடுக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள்/ கருத்திட்டங்கள்

| இல. | நிகழ்ச்சித்திட்டங்கள்/ கருத்திட்டங்கள் (2023 ஆம் ஆண்டு உள்ளிட்ட) | பயனாளிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | பிரிவுகளுடன் ஒன்றிப்பான தொழில்நுட்பப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் (இரசாயனப் பிரிவு, கட்டிடப் பொருள்கள், எண்ணெய் மற்றும் நார்ப் பொருள்கள், உணவுப் பிரிவு, தொழில்நுட்பம் சார்ந்த ஏனையவை) | 16,784 |
| 2 | தொழில்நுட்பத்துடன் ஒன்றிப்பான விசேட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் (சமூர்த்தி, முச்சக்கர வண்டிச் சாரதிகள் - வியாபாரத் தொழில்நுட்பம், படைவீரர்) | 1,361 |
| 3 | தொழில்நுட்பப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்/ செயலமர்வுகள்/ செய்துகாட்டல்கள் | 1,551 |
| 4 | கைத்தொழில்கள்/ ஒழுங்கமைப்புகள்/ நிறுவனங்களின் கேள்விக்கு அமைய தயாரிக்கப்பட்ட பிரிவுகளை அடிப்படையாகக்கொண்ட தொழில்நுட்பப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை முன்னெடுத்தல் | 60 |
| 5 | கைத்தொழில் சான்றிதழ் பயிற்சிப் பாடநெறிகளை நடாத்துதல் | 61 |
| 6 | தொழில்நுட்பம் பற்றி அறிவுறுத்துவதற்கான நிகழ்ச்சித்திட்டங்களை/ செயலமர்வுகளை/ செய்துகாட்டல்களை நடாத்துதல் | 50 |
| 7 | பாதணித் தொழில்நுட்பப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல் | 135 |
| 8 | கைப் பை உற்பத்தித் தொழில்நுட்பப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் | 34 |
| 9 | தோல்பொருள் தொழில்நுட்பப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் | 40 |
| 10 | தராதரத்தை முன்னேற்றுவதற்கான நிகழ்ச்சித்திட்டங்கள் | 77 |
| 11 | பாதணி உற்பத்தித் தொழில்முயற்சிகளை ஆரம்பித்தல் | 291 |
| 12 | தராதரத்தை முன்னேற்றுவதற்கான நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல் | 77 |
| 13 | தொழில்முயற்சியாளர்கள்/ கைத்தொழிலாளர்கள்/ அரச மற்றும் வெளிநிலை ஒழுங்கமைப்புகளுக்கு தயாரிக்கப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல். | 68 |
| 14 | தற்போது காணப்படும் மற்றும் புதிய கைத்தொழிலாளர்களுக்கான கைத்தொழில் பொறியியல் பயிற்சிகள் | 98 |
| 15 | சமூக ஊடக சந்தைப்படுத்தல், இணையத்தள அபிவிருத்தியும் ட்ரொப் சிப்பிங் பற்றிய செயலமர்வுகளும் (Zoom தொழில்நுட்பத்தின் ஊடாக + வளவில்) | 827 |
| 17 | Zoom தொழில்நுட்பத்தின் ஊடாக எமது பிராந்திய வலையமைப்பின் ஊடாக நாடு பூராவும் தொழில்முயற்சியாளர்களுக்கு நடாத்தப்படும் டிஜிட்டல் சந்தைப்படுத்தல் பிரயோக நிகழ்ச்சித்திட்டம் | 30 |
| 18 | வெளிநிலை நிதியளிக்கும் ஒழுங்கமைப்புகளுடன் சமூக ஊடக சந்தைப்படுத்தல், IoT, Fiverr, கையடக்க பிரயோகங்கள் அபிவிருத்தி பற்றிய இளைஞர் யுவதிகளுக்கான தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் சம்பந்தமான பலவின செயலமர்வுகள் | 162 |
| 19 | ஏற்றுமதி நடபடிமுறைகள் பற்றிய முயற்சியாண்மை அறிவை முன்னேற்றுவதற்கான செயலமர்வு | 99 |
| 20 | சம்பந்தப்பட்ட நிறுவனங்களுடன்/ மாவட்ட அலுவலகங்களுடன் கைத்தொழில்களுக்கு முன்னேற்றும் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல் | 38 |

## நிதி உதவப்பட்ட முயற்சியாண்மைகளின் எண்ணிக்கை

| இல. | சிறிய மற்றும் நடுத்தர அளவான தொழில்முயற்சிகளின் அபிவிருத்திக்கான புதிய கருத்திட்டங்கள் | அடிப்படை ஆண்டு (உள்ளபடியான பெறுமதி - 2022) | உத்தேச பெறுமானம் - 2023 | முன்னேற்றம் 2023.12.31 |
|---|---|---|---|---|
| 1 | கைத்தொழில் அபிவிருத்தி நிதியம் | - | - | 33 |
| 2 | சிறிய மற்றும் நடுத்தர அளவான தொழில்முயற்சிகளுக்கான ஏனைய நிதியுதவிகள் | 601 | 780 | 930 |
| | **மொத்தம்** | **601** | **780** | **963** |

## செயற்பாட்டு மீளாய்வு

1) நிர்வாகப் பிரிவு
2) பொறியியல் பிரிவு
3) கைத்தொழிற் பேட்டைப் பிரிவு
4) முயற்சியாண்மை அபிவிருத்திப் பிரிவு
5) பிராந்திய அபிவிருத்திப் பிரிவு
6) திட்டமிடல் பிரிவு
7) தொழில்நுட்ப சேவைகள் பிரிவு
8) சந்தைப்படுத்தல் பிரிவு
9) இறப்பர் உற்பத்திகள் அபிவிருத்தி மற்றும் சேவை நிலையம்
10) தோல்பொருள் உற்பத்திகள் மற்றும் பாதணிகள் அபிவிருத்தி நிலையம்

# 1) நிர்வாகப் பிரிவு

## 1.1 அறிமுகம்

நிர்வாகப் பிரிவானது சேவை நிலையத்தின் விளைதிறனையும் செயல்திறனையும் உயர் மட்டத்தில் பேணுவதுடன் சம்பந்தப்பட்ட முக்கிய ஒரு பிரிவாகும். மேலும், அனைத்து மனித வள முகாமைத்துவ மற்றும் அபிவிருத்திச் செயற்பாடுகளையும் தயாரித்தல், அமுல்படுத்தல், மேற்பார்செய்தல், மதிப்பீடு செய்தல் ஆகியவற்றுக்கு இப்பிரிவு பொறுப்பாகும். உழைப்பாளர் சேனையைப் பலப்படுத்துவதற்காக ஆட்சேர்ப்பு நடபடிமுறை (SoR), பதவியுயர்த்தல் நடபடிமுறை (SoP) ஆகியவற்றைத் தயாரித்தல், முறை சார்ந்த ஆட்சேர்ப்பை மேற்கொள்ளல், செயலாற்றுகை மதிப்பீடு, பதவியுயர்வு மற்றும் ஓய்வுறுத்தல் முதலியன இப்பிரிவுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள மற்றும் சில செயற்பாடுகளாகும். அவர்கள் உழைப்பாளர் சேனைக்கு உந்துகைகளை வழங்குவதுடன், ஒழுங்கமைப்பின் நோக்கங்களை அடைந்துகொள்ள வழிவகை செய்வர். இதுதவிர, IDB ஊழியர்களின் இயல்திறனை விருத்திசெய்யும் மற்றும் தேவைப்படும் திறன்களை முன்னேற்றும் பொறுப்பை நிர்வாக மற்றும் மனித வள அபிவிருத்திப் பிரிவு வகிக்கின்றது.

**அட்டவணை 1.1 : பதவியினர் முகாமைத்துவம் - 2023**

| வகையீடு | அனுமதித்த பதவியினரின் எண்ணிக்கை | தற்போது இருக்கின்ற பதவியினரின் எண்ணிக்கை | பதவி வெற்றிடங்கள்/ (மேன்மிகைகள்) |
|---|---|---|---|
| சிரேட்ட மட்டம் | 12 | 08 | 04 |
| மூன்றாம்நிலை மட்டம் | 252 | 180 | 72 |
| இரண்டாம்நிலை மட்டம் | 184 | 155 | 29 |
| முதனிலை மட்டம் | 266 | 199 | 67 |
| **மொத்தம்** | **714** | **542** | **172** |



### அட்டவணை 1.2 : 2023 ஆம் ஆண்டில் நடைபெற்ற பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்

| இல. | நிகழ்ச்சித்திட்டத்தின் பெயர் | பயிற்சி பெற்ற பதவியினர் எண்ணிக்கை | மொத்த முதலீடு (ரூ.'000) | |
|---|---|---|---|---|
| | | | உள்நாடு | வெளிநாடு |
| 1 | நுண்ணுயிரியியல் - தொடர் 02 | 02 | 12,0000.00 | |
| 2 | ISO / IEC 17025:2017 இன்படி ஆய்வுகூட தராதர முகாமைத்துவ முறைமைகளை அபிவிருத்தி செய்தல் - வகுப்பறைப் பயிற்சி | 02 | 40,000.00 | |
| 3 | AutoCAD பற்றிய முழுமையான சான்றிதழ் பாடநெறி | 01 | 18,000.00 | |
| 4 | கோப்பு முகாமைத்துவம் பற்றிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் | 08 | 20,000.00 | |
| 5 | ஆரம்ப விசாரணை பயிற்சி | 02 | 19,000.00 | |
| 6 | உள்ளக கணக்காய்வு நடைமுறைகள் | 01 | 13,000.00 | |
| 7 | பெயர்வழிக் கோப்புகளைப் பராமரித்தல் | 02 | 19,000.00 | |
| 8 | கூட்டிணை பெறுகை மற்றும் வழங்கற் சங்கிலிகள் முகாமைத்துவம் | 02 | 14,000.00 | |
| 9 | அரசின் புதிய வரிக் கொள்கை பற்றிய விழிப்புணர்வு | 02 | 13,000.00 | |
| 10 | பொது நிர்வாகத்தில் முதுகலைமாணிப் பட்டம் | 01 | 105,300.00 | |
| 11 | தொழில் உறவுகள் மற்றும் மனிதவள முகாமைத்துவத்தில் முதுகலைமாணிப் பட்டயம் | 01 | 105,300.00 | |
| 12 | புத்தாக்க தலைமைத்துவமும் வியாபார வாய்ப்புகளும் | 01 | 10,100.00 | |
| 13 | பரிசோதனை அறிக்கைகளின் அளவைகளை சான்றுறுதிப்படுத்தலும் பொருள்கோடலும் பற்றிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் | 02 | 18,871.78 | |
| 14 | சக்தி முறைமை உச்சப்படுத்தல் (ESO) நிபுணத்துவ பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் | 01 | இலவசம் | |
| 15 | கடிதம் வரைதல் பற்றிய நிகழ்நிலை செயலமர்வு | 07 | 17,500.00 | |
| 16 | பணியாட்குழு பயிற்சியும் அபிவிருத்தியும் பற்றிய சான்றிதழ் பாடநெறிக்கான விண்ணப்பம் | 01 | இலவசம் | |
| 17 | செயலமர்வில் பயன்கூர் 'பாதுகாப்பு மற்றும் சுகாதார' குழுவை நிறுவுதல் | 01 | 15,332.75 | |
| 18 | கண்காணிப்பு மற்றும் அளத்தல் கருவிகள் மதிப்பாய்வு பற்றிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் | 02 | 16,410.24 | |
| 19 | நிர்வாக அலுவலர்களின் பொறுப்புக்களும் கடமைகளும் | 02 | 15,000.00 | |
| 20 | Advanced Microsoft Excel பயிற்சி | 01 | 18,000.00 | |
| 21 | Sage 200 செயற்பாடுகளுக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் | 01 | 35,000.00 | |
| 22 | RAMIS முறைமை பயிற்சி | 01 | 35,000.00 | |
| 23 | நீர்நீக்கல் (Dehydration) தொழில்நுட்பம் | 01 | 13,500.00 | |
| 24 | விவசாய மற்றும் தொழில்நுட்ப உணவுப் பாதுகாப்புக் கருவியாற்றல் | 02 | 7,000.00 | |
| 25 | கூட்டிணைத் திட்ட அபிவிருத்தி | 01 | 12,500.00 | |
| 26 | அமைச்சரவை விஞ்ஞாபனங்களைத் தயாரித்தலும் சமர்ப்பித்தலும் | 01 | 9,500.00 | |
| 27 | கட்டமைக்கப்பட்ட பிரச்சினைகளுக்குத் தீர்வு காணல் பற்றிய சான்றிதழ் பாடநெறி | எல்லா JM MM | 92,630.00 | |

| இல. | நிகழ்ச்சித்திட்டத்தின் பெயர் | பயிற்சி பெற்ற பதவியினர் எண்ணிக்கை | மொத்த முதலீடு (ரூ.'000) | |
|---|---|---|---|---|
| | | | உள்நாடு | வெளிநாடு |
| 28 | சவர்க்காரம் பற்றிய செயலமர்வு | 01 | 30,000.00 | |
| 29 | திறந்த மூலாதார டிஜிட்டல் நூலக மென்பொருள்கள் பற்றிய நிகழ்நிலை பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் - Java /CDS/ISIS | 01 | 5,000.00 | |
| 30 | காசாளர் பதவிக்குரிய கடமைகளும் பொறுப்புக்களும் | 02 | 12,000.00 | |
| 31 | Milling & Shaping பாடநெறி | 01 | 26,000.00 | |
| 32 | பொது நிர்வாகமும் முகாமைத்துவமும் பற்றிய முதுகலைமாணிப் பட்டம் 2023/2024 | 01 | 108,000.00 | |
| 33 | ISO/IEC 17025: 2017 இன்படி ஆய்வுகூட தராதர முகாமைத்துவ பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தை அபிவிருத்திசெய்தல் | 02 | 40,000.00 | |
| 34 | அலுவலர்களுக்கான 02 நாள் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் | 80 | 731,482.00 | |
| 35 | FSSC22000V.5.1/ISO22000 : 2018 உணவுப் பாதுகாப்பு முகாமைத்துவ முறைமை பற்றிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் முன்னணி கணக்காய்வுப் பாடநெறி | 01 | 79,925.00 | |
| 36 | உலர் இறப்பர், இறப்பர் மரப்பால், பிளாஸ்ரிக் கைத்தொழில்களுக்கான உயர் பல்படி பதார்த்த இயல்புகளை அடையாளம் காண்பதற்கான செயலமர்வு | 04 | 60,000.00 | |
| 37 | ஒழுக்காற்று நடபடிமுறைகள் பற்றிய இரு நாள் செயலமர்வு | 01 | 9,500.00 | |
| 38 | ISO/IEC 17025 இன்படி ஆய்வுகூட தராதர முகாமைத்துவ முறைமையில் உள்ளக கணக்காய்வு | 02 | 60,000.00 | |
| 39 | இரு நாள் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் - MA | 160 | 1,280,176.00 | |
| 40 | சாரதிகளுக்கான ஒரு நாள் செயலமர்வு | 01 | 5,000.00 | |
| 41 | NVQ – 04 பதிவேடு – அச்சிடல் | 10 | 5,000.00 | |
| 42 | பயிற்றுவிப்பாளர்களுக்கான பயிற்சி (TOT Programme) | 80 | 775,733.00 | |
| 43 | World food Moscow-2023 உணவுக் கண்காட்சி | 02 | | 2,466,700.00 |
| 44 | இந்திய மோட்டார் வாகன உற்பத்தித் தொழிற்சாலைகளுக்கான விஜயம் | 01 | | 65,976.00 |
| 45 | இலங்கைக்கான கைத்தொழில் பூங்காக்களை நிர்மாணித்தலும் முகாமையும் பற்றிய கருத்தரங்கு | 02 | | 276,950.00 |
| 46 | வளர்முக நாடுகளுக்கு மின்-பொறிமுறைக் கைத்தொழில்களை ஊக்குவித்தலும் பொருளாதார அபிவிருத்தி பற்றிய கருத்தரங்கும் | 01 | | 155,981.00 |
| 47 | Food Africa, கெய்ரோ, எகிப்து - 2023 | 02 | | 1,908,511.00 |

1.2 செயலாற்றுகை – 2023

அட்டவணை 1.3 : பிரிவின் செயலாற்றுகை சிறப்புக்கூறுகள்

| # | செயற்பாடு | எண்ணிக்கை |
|---|---|---|
| **1** | **HRM - ஆட்சேர்ப்புகள்** | |
| (i) | ஆட்சேர்ப்புகள் (பணியாட்குழு) | 104 |
| (ii) | கேட்டுவிலகல்கள் | 13 |
| (iii) | ஓய்வுபெறல்கள் | 17 |
| (iv) | பதவியை விட்டுவிலகல்கள் | 06 |
| **2** | **HRD – பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்** | |
| (i) | உள்நாட்டுப் பயிற்சிகள் | 42 |
| (ii) | வெளிநாட்டுப் பயிற்சிகள் | 05 |
| **3** | **HRM – ஊழியர் நலன்புரி** | |
| (i) | இடர்க் கடன் - 127 பேர் | ரூ. 27,539,824.52 |
| **4** | **பாதுகாப்பு முகாமைத்துவம்** | |
| (i) | பாதுகாப்புக் கிரயம் | ரூ. 59,132,410.48 |
| **5** | **அஞ்சல், தொலைத்தொடர்புக் கட்டணங்கள்** | |
| (i) | அஞ்சல் கட்டணங்கள் | ரூ. 989,740.00 |
| (ii) | தொலைத்தொடர்புக் கட்டணங்கள் | ரூ. 5,974,015.82 |
| **6** | **HRM – இழப்பீடுகள்** | |
| (i) | பணிக்கொடைக் கொடுப்பனவு - 44 பேர் | ரூ. 34,262,870.50 |

# (2) பொறியியல் பிரிவு

கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் (IDM) பொறியியல் பிரிவு, இந்நாட்டின் பேண்தகு கைத்தொழில் அபிவிருத்திக்காக சபையின் தொலைநோக்கை அமுல்படுத்துவதற்கு பங்களிப்புச்செய்யும் மிக முக்கிய தொழில்நுட்ப/ பொறியியல் பிரிவாக இயங்குகிறது.

### பொறியியல் பிரிவின் முக்கிய நோக்கங்கள்

1. பயிற்சி வசதிகளையும் புத்தாக்கங்களையும் போசித்தலும், கிராமியப் பிரிவில் அனைத்தையும் உள்ளடக்கிய வளர்ச்சியொன்றை ஏற்படுத்துவதன் ஊடாக இலங்கை தொழில்நுட்பவியலாளர்களை வலுவூட்டுதலும்.
2. கைத்தொழிலின் பொறியியல்/தொழில்நுட்பத் தேவைகளை அடையாளம் கண்டு அனைத்து பங்கீடுபாட்டாளர்களுக்கும் விருப்பத்திற்குரிய சேவைகளை வழங்குவதற்கு தற்போதுள்ள வளங்களை சிறந்த முறையில் உபயோகித்து அவர்களின் நோக்கங்களை அடைந்துகொள்வதற்கு உதவுதல்.
3. முழுமையான வழிகாட்டல்களையும் கொள்கைகளையும் அமுல்படுத்தி, துறையின் பொறுப்புள்ள, சுற்றாடல் நட்புறவான மாற்றமொன்றை போசித்து இலங்கையின் மோட்டார் வாகன கைத்தொழிலை பேண்தகு நிலையை நோக்கி இட்டுச்செல்லல்.
4. உள்ளூர்க் கைத்தொழில்களின் உற்பத்திசெய்யப்பட்ட உலோக மற்றும் உலோகமல்லாத உற்பத்திப் பண்டங்களின் உற்பத்திக் காரணிகள்/(உழைப்பு), தொழில்நுட்பம், மூலப்பொருள்களை ஆராய்தலும் அக்கைத்தொழில்களில் நிலவும் வெற்றிடங்களை அடையாளம் காண்பதற்கு ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுதல், இறக்குமதியைக் குறைப்பதற்கும் உள்நாட்டுக் கைத்தொழில்களுக்கு வெளிநாட்டுச் சந்தையைத் திறந்துவிடும் பொருட்டு பேண்தகு அடிப்படையில் வெற்றிடங்களை நிரப்புவதற்கு அவசியமான சூழல் மாற்றங்களை ஏற்படுத்தல்.
5. கருவிகள், இயந்திர உபகரணங்கள், பொறித்தொகுதிகள், உற்பத்தி வசதிகளை மதிப்பீடு செய்தலும் கைத்தொழில்களுக்கான நிலைவர அறிக்கையையும் மதிப்பீட்டு அறிக்கைகளையும் தயாரித்தல்.
6. பழுதுப்பட்ட உலோக துண்டுப்பொருள்களை (Scrap Material) மீள்சுழற்சிசெய்வதற்கு உள்ளூர் உலோகக் கைத்தொழில்களுக்கு வார்ப்பட வசதிகளை அபிவிருத்தி செய்வதற்கும் அதன் மூலம் உலோக இறக்குமதியையும் பழுதுப்பட்ட உலோக துண்டுப்பொருள்களின் ஏற்றுமதியைக் குறைத்தலும்.

மேற்படி நோக்கங்களை அடைந்துகொள்வதற்கு பொறியியல் பிரிவின் நோக்கெல்லையின் கீழ் பின்வரும் அலகுகள் இயங்குகின்றன:-

### அ) கட்டுபெத்த வேலைக்களம்

- இலங்கையின் சிறிய மற்றும் நடுத்தர அளவான கைத்தொழில்களுக்கு உபகரணங்களையும் இயந்திரங்களையும் செய்துருவாக்கல், ஒன்றுகோர்த்தல், நிறுவுதல், இயக்குவதற்கு இந்த வேலைக்கள பட்டறையானது கடைசல், திரித்தல், இயந்திர உபகரணங்களை அமைத்தல், உருக்கியொட்டல், வெப்பப் பரிகரிப்பு மற்றும் ஒன்றுகோர்ப்பு வசதிகளைக் கொண்டுள்ளது.
- கைத்தொழில்களுக்கு வசதிகளையும் தேவைகளையும் இனங்கண்டு இலங்கையின் உலோகங்களை அடிப்படையாகக் கொண்ட கைத்தொழில்களில் மிகச் சிறந்த உற்பத்தி வசதிகளை அமுல்படுத்துவதற்கு உதவுதல்
- இயந்திராதிகள், கூறமைதிகளைத் திட்டமிடலும் உற்பத்திசெய்தலும் உருக்கியொட்டல், வெப்பப் பரிகரிப்பு, இயந்திர உபகரணங்கள் போன்ற ஏனைய வேலைக்கள சேவைகள் பற்றிய பயிற்சியை வழங்குதல்.
- இயந்திர உபகரணத் தேவைகளை நிறைவேற்றுவதற்கு இயந்திர உற்பத்தியாளர்களை வாடிக்கையாளர்களுடன் தொடர்புபடுத்துதல்.

- கைத்தொழிலுக்கு நிதியுதவி வழங்க மதிப்பீட்டறிக்கைகளை சோதனையிடுதலும் தயாரித்தலும்.
- பல்கலைக்கழகங்களுக்கும் ஏனைய நிறுவனங்களுக்கும் பொறித்தொகுதியினுள் பயிற்சி வசதிகள் (உ+ம்: NAITA)

### ஆ) கட்டுபெத்தவில் வார்ப்பட வசதிகளும் சேவைகளும்




- இலங்கையில் இரும்பு மற்றும் இரும்பு அல்லாத உலோக (Ferrous & Non Ferrous) உற்பத்திகளை மேற்கொள்வதற்கு வார்ப்பட தொழில்நுட்பத்தை உள்ளூர்க் கைத்தொழில்களுக்கு வழங்குவதற்காக இந்த வசதி அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது.
- உள்ளூர்க் கைத்தொழில்களுக்கு அடிப்படை உலோகங்களை உற்பத்திசெய்வதற்கு இலங்கையில் பழுதுப்பட்ட உலோக துண்டுப்பொருள்களை (Scrap Material) மீள்சுழற்சித் தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்தலும் நிறுவுதலும். அதன் மூலம் உலோக இறக்குமதியையும் பழுதுப்பட்ட உலோக துண்டுப்பொருள்களின் ஏற்றுமதியையும் குறைப்பதற்கு வாய்ப்புள்ளது. ஆகையால், உலக சந்தையுடன் போட்டியிடுவதற்கு எம்மால் இலங்கையில் விலைப் போட்டிகரமான உலோகங்களின் உற்பத்திகள் முன்னேற்றமடையச் செய்யப்படுகிறது.
- உலோகவியல் ஆய்வுகூட வசதி (Metallurgy Lab Facility): இலங்கையில் உலோகங்களை அடிப்படையாகக்கொண்ட உற்பத்திகளின் எதிர்பார்த்த தரத்தை அடைந்துகொள்வதற்கு தொழில்நுட்பத் தேவைகளை அடையாளம் கண்டு உலோகங்களின் இணைப்பாக்கம், கட்டமைப்பு, இயல்புகள் என்பவற்றை அடையாளங்கண்டு அபிவிருத்திசெய்தல்
- வாகனக் கைத்தொழில் கூறமைதிக்கு இசைவு அறிக்கைகளையும் ஏற்றுமதி சார்பான உலோக உற்பத்திகளுக்கு பெறுமதி சேர்க்கும் அறிக்கைகளையும் வழங்குதல்.
- உலோக கழிவுப்பொருள்களின் (Mill scale, Mill powder, Aluminium ash, Zinc ash, dross முதலிய) ஏற்றுமதியை அனுமதிப்பது குறித்து பரிசீலித்தல்.
- மூலப்பொருள்களுக்கும் இடைநிலைப் பண்டங்களுக்கும் தீர்வை வரி விலக்களிப்பை அனுமதிப்பதற்கான சிபார்சுகளை வழங்குதல்.
- புதிய மற்றும் தற்போது காணப்படும் வார்ப்படக் கைத்தொழில்களின் இயல்திறனை அபிவிருத்தி செய்தலும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதலும்.

### இ) பொறியியல் அலுவலகம்




- CP21/1529/320/043 ஆம் இலக்க அமைச்சரவை அனுமதியின் கீழ் கொதிகலன்கள் மற்றும் அழுத்த இயந்திரங்கள் ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையம் (Boiler and Pressure vessel Research Development Centre) நிறுவப்பட்டது. ஆரம்பத்தில் இக்கருத்திட்டத்திற்கு பின்வரும் இயந்திர உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதுடன், அதன் பெறுமதி 8.4 மில்லியன் ரூபாவாகும். தற்போது இந்த இயந்திரங்களை உபயோகித்து சோதனை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

1. மீ ஒலியியல் காய்ச்சியொட்டல் சோதிப்பான் (Ultrasonic welding tester)
2. கையில் எடுத்துச்செல்லக்கூடிய வன்நிலை சோதிப்பான் (Portable hardness tester)
3. லேசர் அளத்தல்/ மட்டம்பார்க்கும் கருவி (Laser measuring /leveling equipment)
4. எண்ணிமமுறை வேர்னியர் இடுக்குமானி (Digital Vernier caliper)

### ஈ.) ரோபோ தொழில்நுட்பவியல் பிரயோக நிலையம் (Robotic Application Centre)



ரோபோ தொழில்நுட்ப உள்ளீடுகள் நிலையம் கைததொழில்கள், நீண்டகாலமாக இடம்பெயர்ந்த ஆட்களை மீளக் குடியமர்த்தல், கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சின் நோக்கெல்லையின் கீழ் குறிப்பாக உள்ளூர்க் கைத்தொழில்களுக்கு தேசிய ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த மூலோபாயக் கருத்திட்டமொன்றாக

அமுல்படுத்தப்படுவதுடன், கைத்தொழில் அபிவிருத்திச் சபை உள்நாட்டுப் பொருளாதாரத்திற்கு உயர் பங்களிப்பொன்றை வழங்குவதற்கு துறையின் வேகமான வளர்ச்சிக்காக கைத்தொழிலுக்கு தொழில்நுட்பத்தை உள்ளடக்கவுள்ளது. ரொபோ தொழில்நுட்ப நிலையம் MIG வெல்டிங் ரொபோ (MIG welding robot), பிளாஸ்மா கட்டிங் ரேபோ இயந்திரங்கள் (Plasma cutting robot) நான்கைக் கொண்டதாகும்.

- உள்ளூர்க் கைத்தொழில்களுக்கு உற்பத்திகள்/செயன்முறை அபிவிருத்தி, செயன்முறைத் திட்டமிடல், தொழில்நுட்ப உதவி போன்ற பொறியியல் சேவைகளை வழங்குதல்.
- குறிப்பாக, மோட்டார் வாகன பிரிவினதும் ஏனைய உற்பத்திப் பிரிவுகளினதும் பெறுமதிசேர்க்கும் நடவடிக்கைகள் குறித்து ஆராய்ந்து பரிசோதித்து இந்த உற்பத்திப் பிரிவை முன்னேற்றுவதற்கு பங்குகொள்ளல்.

**(உ) திட்ட வடிவமைப்பு மற்றும் அபிவிருத்தி அலகு**



தொழிற்சாலைகளின் பேண்தகு பொருளாதார வளர்ச்சிக்காக கைத்தொழில் தேவைகளை அடையாளம் கண்டு உபகரணங்களையும் இயந்திர சாதனங்களையும் பொறித்தொகுதிகளையும் உற்பத்தி வசதிகளையும் திட்டமிட்டு வடிவமைத்தலும் பேண்தகு விதத்தில் அவற்றை அமுல்படுத்தலும்.

**ஊ) மதிப்பீடு மற்றும் உலோகத்தை அடிப்படையாகக் கொண்ட கைத்தொழில் தரவுப் பகுப்பாய்வு அலகு**

- இலங்கையில் பொறித்தொகுதிகள், சாதனங்கள், பொறிகள் மற்றும் உற்பத்தி வசதிகளை மதிப்பிடுதலும் நிலைவர அறிக்கைகளைத் தயாரித்தலும்.
- உள்நாட்டு கைத்தொழில்களின் உலோக மற்றும் உலோகமல்லாத உற்பத்தியின்/பண்ட உற்பத்தியின் உற்பத்திக் காரணி (உழைப்பு, தொழில்நுட்பம், மூலப்பொருள்) விகிதங்களை ஆராய்வதற்கு முதனிலை மற்றும் இரண்டாம்நிலை தரவுகளை சேகரிப்பதற்கும், பழைய உலோகங்களின் இறக்குமதியையும் ஏற்றுமதியையும் குறைப்பதற்கும், உள்நாட்டுக் கைத்தொழில்களுக்கு வெளிநாட்டுச் சந்தையை திறந்துவிடுவதற்கும் பேண்தகு அடிப்படையில் இடைவெளியை பூர்த்திசெய்வதற்காக இடைவெளிகளை அடையாளம் கண்டு தேவையான சூழல் மாற்றங்களை மேற்கொள்வதற்காக அவற்றை ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுதல்.

**எ) சிவில் பொறியியல் அலகு**

IDB மற்றும் கைத்தொழில்களுக்காக பின்வரும் சேவைகளை வழங்குவதற்கு இந்த அலகு தலைமை அலுவலகத்தில் நிறுவப்பட்டுள்ளது.

- நிறுவன நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக IDB உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தலும் பராமரித்தலும்.
- கைத்தொழிற் பேட்டைகளின் கைத்தொழில் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்திசெய்யும் தேவையை உணர்ந்து பொருளாதாரத்திற்கு மிகச் சிறந்த பயனைப் பெற்றுக்கொடுப்பதற்காக பங்குரிமையாளர்களுடன் இணைந்து அவற்றில் பங்கேற்றல்.
- இலங்கைக்கு உலக பொருளாதாரத் தேவைகளை அடைந்துகொள்வதற்காக நாட்டில் வளர்ந்துவரும் கைத்தொழில் பேட்டைகளைத் திட்டமிடுதலும் கட்டியெழுப்புதலும்.
- உகந்த கைத்தொழில் கழிவுபொருள் முகாமைத்துவ தொழில்நுட்பத்தை அடையாளம் கண்டு நாட்டின் பேண்தகு கைத்தொழில் அபிவிருத்திக்காக அதனை உள்நாட்டு கைத்தொழில்களுக்கு அறிமுகப்படுத்தல்/அமுல்படுத்தல்.
- விசேட கருத்திட்டங்களுக்கு உரிய சிவில் பொறியியல்சார் நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

### ஏ) மின் பொறியியல் அலகு

IDB மற்றும் கைத்தொழில்களுக்காக பின்வரும் சேவைகளை வழங்குவதற்கு இந்த அலகு நிறுவப்பட்டு இயங்கி வருகிறது.

- IEE பிரமாணங்களுக்கு அமைய பேண்தகு விதத்தில் (IDB க்கு பசுமை/தூய எரிசக்தி) மின்வலுவை வழங்குதல், தற்போதுள்ள இலத்திரனியல் வலையமைப்புகளையும் கட்டிடங்களையும் IDB இன் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகளில் ஈடுபடுத்தல்களை இற்றைப்படுத்தலும் பராமரித்தலும்.
- கைத்தொழிற் பேட்டைகளுக்கு பேண்தகு மின்வலுவை வழங்குதலும் விநியோகித்தலும் கைத்தொழிற் பேட்டைகளுக்கு அவர்களின் எரிசக்திக் கிரயத்தைக் குறைப்பதற்காக குறைந்த செலவில் எரிசக்திப் பிரயோகங்களையும் தொழில்நுட்பத்தையும் அறிமுகப்படுத்தல்.
- இலங்கையில் வளர்ந்துவரும் கைத்தொழில் எரிசக்திப் பிரச்சினைகளை இனமறிந்து இலங்கையின் பேண்தகு கைத்தொழில் அபிவிருத்தி கருதி அவற்றை தடுப்பதற்கான தீர்வுகள் அல்லது புதிய தொழில்நுட்பப் பிரயோகங்களை முன்மொழிதல். (ஒப்பீட்டு அனுகூலகத்தைப் அடைந்து கொள்வதற்காக IDB மற்றும் கைத்தொழில்களுக்கு சூரிய சக்தி மற்றும் எரிசக்திக் கணக்காய்வையும் காபன் கணக்காய்வையும் அறிமுகப்படுத்தல்.)
- இலத்திரனியல் மற்றும் மின் கைத்தொழில் துறை முன்னேற்றத்திற்குரிய திட்டமிடல், கொள்கை வகுப்பு மற்றும் அவற்றுக்கு அவசியமான வசதிகளை கைத்தொழில்களுக்கு ஏற்படுத்திக் கொடுத்தல்.

### ஐ) பொருத்தமான தொழில்நுட்ப ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையம் (ATRDC), பன்னல

- கைத்தொழில் பிரிவின் அபிவிருத்திக்குத் தேவையான இயந்திர உபகரணங்கள் மற்றும் பொறியமைப்புகளின் தேவைப்பாடுகளை அடையாளம் காணும் இயல்திறனும் சாத்தியப்பாடும் இந்த வசதிக்குள்ளது. இங்கு, உள்ளூர் விவசாயிகளுக்காக உச்சமட்ட கிரயத்தில் அவற்றை வடிவமைத்து செய்துருவாக்கப்படுகிறது.
- இயந்திர உபகரணங்கள், சாதனங்கள், பொறித்தொகுதிகள் மற்றும் வேறு உற்பத்தி வசதிகளை மதிப்பீடு செய்தலும், கைத்தொழில்களுக்கான நிலைவர அறிக்கைகளையும், மதிப்பீட்டு அறிக்கைகளையும் தயாரித்தலும்.
- இலங்கையின் சிறிய மற்றும் நடுத்தர அளவான கைத்தொழில்களுக்காக இயந்திர உபகரணங்களையும் பொறியமைப்புகளையும் திட்டமிட்டு வடிவமைத்தல், செய்துருவாக்கல், ஒன்றுகோர்த்தல், இயக்குதல் இந்த நிலையத்தினால் முன்னெடுக்கப்படும் ஏனைய முக்கிய செயற்பாடுகளாகும்.

### ஓ) பொதுவான சேவைகள் நிலையம் (CSC), மாத்தறை

இலங்கையின் சிறிய மற்றும் நடுத்தர அளவான கைத்தொழில்களுக்கு இயந்திர உபகரணங்களையும் சாதனங்களையும் திட்டமிட்டு வடிவமைத்தல், ஒன்றுகோர்த்தல், நிறுவுதல் மற்றும் ஆரம்பிப்பதற்கான கடைச்சல், திரித்தல், பொறியமைப்பாக்கம், வளைத்தல், உருக்கியொட்டுதல், ஒன்றுகோர்த்தல் ஆகிய வசதிகளை CSC கொண்டுள்ளது.

### ஓ) CNC அலகு



IDB இன் CNC அலகு 5-axis CNC திரித்தல் பொறி (milling machine), CNC கடைச்சல் பொறி (கடையி), கருவி மற்றும் கட்டர் கிரைண்டர் மற்றும் உயர் துல்லியமான இயந்திரமயத்திற்கு கருமங்களைத் தொடர்புபடுத்தும் சரியான சாதனங்களைக் கொண்டதாகும்.

## 2.1 பிரிவின் முன்னேற்றம் - 2023

அட்டவணை 2.1 : 2023 இல் பூர்த்திசெய்யப்பட்ட சேவைகளுக்கான வெளிவாரி வருமானம்

| இல. | பிரிவு/அலகு | வருமானம் / LKR |
|---|---|---|
| 1 | பொறியியல் வேலைக்களம், தலைமை அலுவலகம் - கட்டுபெத்த | 6,759,662.00 |
| 2. | வார்ப்பட வேலைக்களம், தலைமை அலுவலகம் - கட்டுபெத்த | 42,237,898.76 |
| 3. | மதிப்பீட்டறிக்கைகள் - தலைமை அலுவலகம், கட்டுபெத்த | 2,116,935.00 |
| 4. | A.T.R.D.C. - பன்னல | 1,829,673.55 |
| 5. | மின் | 113,361.92 |
| 6. | CNC அலகு | 2,459,914.00 |
| 7. | கைத்தொழில் பொறியியல் பயிற்சி | 623,850.00 |
| | **மொத்தம்** | **56,141,295.23** |

## 2.2 உள்ளக சேவைகள்

IDB க்கு பூர்த்திசெய்யப்பட்ட உள்ளக பொறியியல் சேவை வேலைகளின் பெறுமதிகள் (உள்ளபடியான கிரய அடிப்படை) பின்வருமாறு:

**அட்டவணை 2.2 : 2023 ஆம் ஆண்டில் உள்ளக ரீதியாக பூர்த்திசெய்யப்பட்ட சேவைகளின் பெறுமதிகள்**

| இல | பிரிவு | பெறுமதி/LKR |
|---|---|---|
| 1 | வேலைக்களம் - தலைமை அலுவலகம் | 3,176,000.00 |
| 2 | வார்ப்பட வேலைக்களம் - தலைமை அலுவலகம் | 1,460,500.00 |
| 3 | சிவில் பொறியியல் சேவைகள் - தலைமை அலுவலகம் | 6,758,572.00 |
| 4 | மின் பொறியியல் சேவைகள் - தலைமை அலுவலகம் | 4,213,123.98 |
| | **மொத்தம்** | **15,608,195.99** |

**அட்டவணை 2.3 : உள்ளபடியான வருமானம் - வருடாந்த ஒப்பீடு**

| ஆண்டு | உள்ளபடியான வருமானம் (ரூ) |
|---|---|
| **2019** | 22,769,521 |
| **2020** | 21,806,327 |
| **2021** | 27,993,261 |
| **2022** | 63,751,098 |
| **2023** | 56,141,295 |



# 3) கைத்தொழிற் பேட்டைப் பிரிவு

## 3.1 விபரம்

கைத்தொழில் அபிவிருத்திச் சட்டத்தின் 33(2) (அ) ஆம் பிரிவனால் கைத்தொழிற் பேட்டைகளை நிறுவுவதற்கும் பராமரிப்பதற்கும் இயக்கிச்செல்வதற்கும் கைத்தொழில் அபிவிருத்திச் சபைக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது. ஆகையால், புதிய கைத்தொழிற் பேட்டைகளை நிறுவுதல், IDB இன் நோக்கங்களுக்கு அமைய அவற்றைப் பராமரித்தல்/முகாமைசெய்தல், புதிய உற்பத்திக் கைத்தொழில்களுக்கு போதிய இடவசதி இன்றி சிறிய மற்றும் நடுத்தர அளவான தொழில்முயற்சியாளர்களுக்கு நீண்டகால குத்தகை அடிப்படையில் கட்டியெழுப்பக்கூடிய காணிகளை அல்லது தொழிற்சாலைக் கட்டிடங்களை/ முன்னேற்றக்கூடிய ஆதனங்களைப் பெற்றுக்கொடுப்பது கைத்தொழிற் பேட்டைகள் பிரிவின் முக்கிய நோக்கமாகும். ஆகையால், பிராந்திய கைத்தொழில்மயமாக்கலை ஊக்குவிப்பதற்கும் நாடுபூராவும் கைத்தொழில் அபிவிருத்திச் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கும் குறிப்பாக, சிறந்த கைத்தொழில் சூழலொன்றில் அமைந்துள்ள பிரதேசங்களில் போதிய உட்கட்டமைப்பு வசதிகளுடன்கூடிய காணிகளையும் நிர்மாணிக்கப்பட்ட கட்டிடங்களையும் வழங்கும் சிறிய மற்றும் நடுத்தர அளவான கைத்தொழில்களை முன்னேற்றுவதன் மீது முக்கிய கவனம் ஈர்க்கப்பட்டது.

1960 தசாப்தத்தில் கைத்தொழிற் பேட்டை என்ற எண்ணக்கரு இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்டது. 1969 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க கைத்தொழில் அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட ஒரு நியதிச்சட்ட நிறுவனமான கைத்தொழில் அபிவிருத்திச் சபைக்கு சிறிய மற்றும் நடுத்தர அளவான கைத்தொழில்களை ஊக்குவித்தல், அபிவிருத்தி செய்தல் மற்றும் மேம்படுத்தல் என்ற பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளது. அண்மைக்காலத்தில் புதிய கைத்தொழில்களை நிறுவுவதற்கு தனியார்துறையை ஊக்குவிக்குமுகமாக தற்போதுள்ள கைத்தொழிற் பேட்டைகளின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கு மேலும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்நாட்டின் சமூக பொருளாதார அபிவிருத்தியில் மாவட்டங்களுக்கும் கொழும்பு மற்றும் அண்மிய பகுதிகளுக்கும் இடையில் போதிய கைத்தொழில் உட்கட்டமைப்பு வசதிகளின் இடைவெளியொன்று காணப்படுகிறது.

அதிலிருந்து கடந்த 56 ஆண்டுகளில் IDB நாடுபூராவும் 18 கைத்தொழிற் பேட்டைகளை அபிவிருத்தி செய்ததுடன், குறிப்பிடத்தக்க மட்டத்தில் கொழும்பு, அண்மிய பிரதேசங்கள் மற்றும் கிராமப்புறங்கள் மீது கவனம் செலுத்தியது. தற்போது 16 கைத்தொழிற் பேட்டைகள் சுமுகமாக இயங்கி வருவதுடன், இரண்டு கைத்தொழிற் பேட்டைகள் அதாவது பெலிஅத்த, பத்தேகம ஆகியன இன்று இயங்கவில்லை. IDB இனால் இக்கைத்தொழிற் பேட்டைகளில் நீண்டகால குத்தகை அடிப்படையில் தமது கைத்தொழில்களை நிறுவுவதற்கு தேவையான உட்கட்டமைப்பு வசதிகளுடன்கூடிய பொருத்தமான காணிகளும் கட்டிடங்களும் ஒதுக்கப்படுகின்றன.

கடந்த பல ஆண்டுகளினுள் புதிய கைத்தொழில்களை நிறுவுவதற்கும் தனியார்துறையை ஊக்குவிப்பதற்காக தற்போதுள்ள கைத்தொழிற் பேட்டைகளின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கும் தொடர்ந்து நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. முதலீட்டாளர்களின் கேள்வியை நிறைவுசெய்வதற்கும், இக்கைத்தொழிற் பேட்டைகளின் கைத்தொழில்களை நிறுவுவதற்குப் பொருத்தமான காணித்துண்டுகளையும் நிர்மாணிக்கப்பட்ட கட்டிடங்களையும் சிபார்சுசெய்வதற்கு கைத்தொழிற் பேட்டைப் பிரிவு IDB மாவட்ட அலுவலகங்களின் பணிப்பாளர்களுடன் இணைந்து IDB இனால் முக்கிய செயற்பொறுப்பொன்று ஆற்றப்படுகிறது.

1967 ஆம் ஆண்டு முதல் அபிவிருத்தி செய்யப்பட்ட மொத்த காணிகளின் அளவு சுமார் 305 ஏக்கர்களாகும். அது, 733 காணித்துண்டுகளாக பிரிக்கப்பட்டு ஏலவே 378 கைத்தொழிலாளர்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. அதேபோல், ஒதுக்கப்பட்ட மொத்த அபிவிருத்தி செய்யப்பட்ட 280 காணித்துண்டுகளில் வியாபாரங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் 8,627 தொழில்வாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன. மேலும், 50 கைத்தொழில் அலகுகள் அவர்களின் தொழிற்சாலைக் கட்டிடங்கள் பல்வேறு நிர்மாணக் கட்டங்களில் காணப்படுகின்றன. தங்குமிட தேவைகளுக்காக பயன்படுத்தப்படும் 23 கைத்தொழில் அலகுகளையும் சிறிய கைத்தொழிற் பேட்டைகளில் இயங்காத நிலையிலுள்ள 26 கைத்தொழில்களையும் ஒழிவுக்கு உட்படுத்த நடவடிக்கை

எடுக்கப்பட்டுள்ளது. 60 கைத்தொழில்களுக்கு IDB இனால் நிர்மாணித்து பூர்த்திசெய்யப்பட்ட 80 கட்டிடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

**3.2 IDB கைத்தொழிற் பேட்டைகளின் இன்றைய நிலை**

- 1965-1970 ஆம் காலப்பகுதியில் IDB இனால் பின்வரும் கைத்தொழிற் பேட்டைகள் ஆரம்பிக்கப்பட்டன:

**அட்டவணை 3.1 : தொடக்க கைத்தொழிற் பேட்டைகள்**

| | கைத்தொழிற் பேட்டை | மாவட்டம் |
|---|---|---|
| 01 | ஏக்கலை | கம்பஹா |
| 02 | பல்லெகெலே | கண்டி |
| 03 | அச்சுவேலி | யாழ்ப்பாணம் |

- களுத்துறை மாவட்டத்திலுள்ள ஹொரணை கைத்தொழிற் பேட்டை, 1978 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது.
- குருணாகல், புத்தளம் ஆகிய மாவட்டங்களில் முறையே பன்னல, லுனுவில ஆகிய இடங்களிலுள்ள கைத்தொழிற் பேட்டைகள் 1980களில் நிறுவப்பட்டன. மேலும், 2022 ஆம் ஆண்டில் கட்டம் II இன் கீழ் பன்னல கைத்தொழிற் பேட்டையின் 6.5 ஏக்கர் நிலத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகள் பூர்த்தியடைந்தது.
- "இசுரு உயன கைத்தொழிற் பேட்டை நிகழ்ச்சித்திட்டம் மற்றும் கிராமிய கைத்தொழிற் பேட்டைகள் நிகழ்ச்சித்திட்டம்: ஆகியவற்றின் கீழ் 1990 ஆம் ஆண்டில் கொட்டகலை, வவுலுகல, கலிகமுவ, புஸ்ஸெல்ல, பத்தேகம, நேகம்பஹ, மிகிந்தலை, வவுனியா, பெலிஅத்த, புத்தல ஆகிய இடங்களில் கைத்தொழிற் பேட்டைகள் நிறுவப்பட்டன.
- கொழும்பு மாவட்டத்தின் பானலுவ கைத்தொழிற் பேட்டை 2006 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. இக்காணியின் உரித்தைக் கையகப்படுத்தும் செயன்முறை, 2023 ஆம் ஆண்டில் வெற்றிகரமாக நிறைவடைந்தது.
- இது தவிர, கைத்தொழில் அமைச்சு 2018/2019 இல் கட்டம் II அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தை ஆரம்பித்து உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்திக்கு 100 மில்லியன் ரூபாவை வழங்கியது.
- 2023 ஆம் ஆண்டில் தென் மாகாணத்தில் உணவு மற்றும் விவசாய உற்பத்திக்காக 21 ஏக்கர்களுடன் 'எல்பிட்டிய' புதிய கைத்தொழிற் பெட்டை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மேலும், 45 ஏக்கர்களைக் கொண்ட எல்பிட்டிய கட்டம் II புதிய கைத்தொழிற் பேட்டையாக அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது.
- IDB இனால் புதிய கைத்தொழிற் பேட்டைகளை புதிதாக நிறுவுவதற்கு 2023 ஆம் ஆண்டில் களுத்துறை மாவட்டத்தின் தொடங்கொட, மாத்தறை மாவட்டத்தின் கம்புறுப்பிட்டிய ஆகிய இடங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. 2023 ஆம் ஆண்டில் தோல் மற்றும் தோல்சார் உற்பத்திகளுக்கான புதிய கைத்தொழிற் பேட்டையொன்றை நிறுவுவதற்கு கிழக்கு மாகாணத்தின் வாழைச்சேனை பகுதியில் 50 ஏக்கர் காணி அடையாளம் காணப்பட்டுள்ளது.
- இது தவிர, புதிய கைத்தொழிற் பேட்டைகளை ஆரம்பிப்பதற்கு நாடெங்கும் 338 ஏக்கர் காணி அடையாளம் காணப்பட்டுள்ளது.

அட்டவணை 3.2 : நாடெங்கும் நிறுவப்பட்டுள்ள கைத்தொழிற் பேட்டைகள் (மாகாண வாரியாக)

| கைத்தொழிற் பேட்டை | மாகாணம் |
|---|---|
| ஏக்கல, ஹொரணை, வவுலுகல, பானலுவ | மேல் மாகாணம் |
| பல்லேகெலே, களுதாவளை, கொட்டகலை | மத்திய மாகாணம் |
| பன்னல, லுனுவில | வடமேல் மாகாணம் |
| கலிகமுவ, புஸ்ஸெல்லாவ | சப்ரகமுவ மாகாணம் |
| நேகம்பஹ, மிகிந்தலை | வடமத்திய மாகாணம் |
| பூந்தோட்டம், அச்சுவேலி | வட மாகாணம் |
| புத்தல | ஊவா மாகாணம் |
| **உத்தேச கைத்தொழிற் பேட்டைகள்** | |
| எல்பிட்டிய, கம்புறுபிட்டிய | தென் மாகாணம் |
| தொடங்கொட | மேல் மாகாணம் |
| வாழைச்சேனை | கிழக்கு மாகாணம் |

## 3.3 கைத்தொழிற் பேட்டைகள் பிரிவினால் கைத்தொழிற் பேட்டைகளின் கைத்தொழில்களில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு வழங்கப்படும் வசதிகள்

01 இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபையினால் காணித்துண்டுகளும் நிர்மாணித்து முடித்த கட்டிடங்களும் முறையே 30 ஆண்டு, 20 ஆண்டு நீண்டகால அடிப்படையில் தமது கருத்திட்டப் பிரேரணைகளை முன்வைக்கும் முதலீட்டாளர்களுக்கு மதிப்பீட்டுக் குழு அனுமதியின் பேரில், ஆரம்ப முதலீடு குறைவாக இருப்பதால் உயர் வெளியீட்டைப் பெற்றுக்கொள்ளும் நிபந்தனையுடன் குத்தகைக்கு விடப்படுகிறது.

02 உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதல்.

- முப்படியான மின்சார (3phase current) மற்றும் உள்ளக அடிப்படையிலான மின் பகிர்வு முறைமையொன்று காணப்படுதல்.
- நீர்வழங்கல், நீரைச் சேமித்துவைத்தல், விநியோக முறைமையொன்று காணப்படுதல்.
- ரெலிகொம் வசதிகளை வழங்குதல்.
- போக்குவரத்து வசதிகளையும் உள்ளக வீதிகளுக்கான பிரவேச வாய்ப்பையும் பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருத்தல். ஆகையால், காலமும் வளங்களும் வீண் போகாமல் உற்பத்தியை உடனடியாக ஆரம்பிக்கலாம்.

03 ஏனைய துணைநிலை வசதிகள் காணப்படுதல்.

கைத்தொழிற் பேட்டைகளில் அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகள் தவிர, வியாபாரக் கொடுக்கல் வாங்கல்களுக்கு வசதியளிக்கக்கூடிய விதத்தில் அஞ்சல் அலுவலகங்களும் உணவகங்களும் பொலிஸ் காவல்கூடங்களும் நிறுவப்பட்டிருத்தல்.

04 கழிவுநீரையும் கைத்தொழில் கழிவுப்பொருள்களையும் வெளியேற்றும் முறைமை. (வடிகான்கள், ஆட்துளைகள்:Manholes, பம்பு நிலையங்கள் முதலியன.)

05 கைத்தொழிற் பேட்டைகளுக்கு தொடர்ச்சியான பாதுகாப்புச் சேவைகளை IDB வழங்குகிறது.

06 கைத்தொழிலாளர்களுக்காக குத்தகைக்கு விடப்பட்டுள்ள ஆதனங்களுக்கான குத்தகை உரிமையை வங்கிகள் வைத்துக்கொண்டு கடன் வசதியளித்தல்.

07 கைத்தொழிற் பேட்டைகளின் நிருவாக மற்றும் பராமரிப்புத் தேவைகளுக்கு தொடர்ச்சியாக தலையீடு செய்தல்.

08 அனைத்து கைத்தொழிற் பேட்டைகள் சார்ந்த சுற்றாடல் நட்புறவான பராமரிப்பு நடவடிக்கைகளைப் பேணுதல் குறித்த தேவைப்பாட்டையும் மேற்பார்வையையும் வழிப்படுத்தலையும் வழங்குதல்.

09 அரசாங்க விலைமதிப்பீட்டுத் திணைக்களத்தின் விலைமதிப்பீட்டுப் பெறுமதிகளின்படி மாதாந்த அடிப்படையில் குத்தகை விடப்பட்டுள்ள கைத்தொழிற் பேட்டைகளின் காணித்துண்டுகளுக்கு/ கட்டிடங்களுக்கு கைத்தொழிலாளர்களிடமிருந்து மாதாந்த வாடகையையும் மீளளிப்புச் செய்யக்கூடிய அடிப்படையில் மூன்றாண்டு பிணைத் தொகைகளையும் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுத்தல்.

## 3.4 2023 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள்

2020/2021 புதிய கொரோனா வைரசு நோய் (COVID 19) மற்றும் 2022 பொருளாதார நெருக்கடி உலகெங்கும் குறிப்பிடத்தக்க விதத்தில் வியாபகமடைந்தது. அதுமுதல் 2019-2021 ஆம் ஆண்டில் நடமாட்டத்தடை விதிக்கப்படல், வீட்டிலிருந்தே வேலைசெய்யும் காலப்பகுதிகள் விதிக்கப்பட்டவுடன் இலங்கையின் உற்பத்திகள்/ ஏற்றுமதிகள் கைத்தொழில் துறைகளின் நிலைமை மிக மோசமாக பாதிக்கப்பட்டது. எனினும், சில உற்பத்தித் தொழிற்சாலைகளுக்கு சேவைகளை ஏற்றுமதிசெய்வதற்கு போதிய ஆற்றலிருந்தது. வாழ்க்கைப்பாணி மாற்றமடைந்தவுடன் சிறிய மற்றும் நடுத்தர அளவான தொழில்முயற்சியாளர்களுக்கு தைத்த ஆடைகள், பெறுமதிசேர்க்கப்பட்ட விவசாய மற்றும் சுரங்க உற்பத்திகள், சமைத்த உணவுப் பொருள்கள் முதலியவற்றை விநியோகிப்பதற்கு கூடுதலான வாய்ப்பு உருவாகியுள்ளது. சில தொழில்முயற்சிகள் பல புது மாதிரியான முயற்சிகளிலும் காலடி எடுத்து வைத்துள்ளன. இவ்வாறு கொவிட்-19 வைரசுகளின் எழுச்சி இந்த வளர்ச்சிக் கட்டத்தில் அவர்கள் எதிர்நோக்கிய பெரு விளைவொன்றாக அமைந்தது.

தற்போது காணப்படும் கைத்தொழிற் பேட்டைகளிலுள்ள உட்கட்டமைப்பு வசதிகளை நவீனமயப்படுத்தல், மேம்படுத்தல், எல்பிட்டிய புதிய கைத்தொழிற் பேட்டையின் சுமார் 65 ஏக்கர் காணியில் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்திசெய்வதற்கான துரித அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின்கீழ் திறைசேரியிலிருந்து நிரல் அமைச்சின் ஊடாக பெற்றுக்கொண்ட சுமார் 100 மில்லியன் ரூபா தொகை கைத்தொழிற் பேட்டைகள் பிரிவினால் செலவிடப்பட்டுள்ளது.

முக்கியமாக அரசு வசமுள்ள கட்டுமான நிறுவனங்களும் தனியார் நிர்மாணக் கம்பனிகளும் இதற்கு பங்களிப்புச் செய்துள்ளன. அநேகமான கருத்திட்டங்கள் 2015 ஆம் ஆண்டிலிருந்து அமுலில் உள்ளன.

- **கைத்தொழில் அலகுகளுக்கு கைத்தொழிலாளர்களை அடையாளம் காணலும் தெரிவுசெய்தலும்**

தற்போது தங்கியிருக்கின்ற கைத்தொழில்களில் ஈடுபட்டுள்ளவர்களதும் புதிய காணித்துண்டுகள்/ நிர்மாணித்து முடித்த கட்டிடங்களைத் தேடும் புதிய முதலீட்டாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கிடைப்பதற்கான சாத்தியப்பாட்டைக் கவனத்திலெடுத்து அடையாளம் காணப்பட்ட கைத்தொழில்களில் ஈடுபட்டுள்ள 49 பேருக்கு ஆண்டினுள் நேர்முகப் பரீட்சைகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது.

**அட்டவணை 3.3 : 2023 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட கைத்தொழில்கள்**

| கைத்தொழிற் பேட்டை | காணித் துண்டங்கள்/கட்டிடங்களை ஒதுக்கிக்கொடுத்தல் | புதிதாக ஆரம்பிக்கப்பட்ட கைத்தொழில்கள் | |
|---|---|---|---|
| | | கைத்தொழில்கள் | தொழில்கள் |
| கொட்டகலை | 2 | 1 | 10 |
| ஏக்கல | 1 | 1 | 35 |
| பன்னல | 1 | 1 | 8 |
| பூந்தோட்டம் | 6 | 2 | 35 |
| களுதாவளை | 1 | 1 | 11 |
| **மொத்தம்** | **11** | **06** | **99** |

அட்டவணை 3.4 : 2023 ஆம் ஆண்டில் அபிவிருத்தி செய்யப்பட்ட தற்போதுள்ள கைத்தொழில்கள்

| கைத்தொழிற் பேட்டை | அபிவிருத்தி செய்யப்பட்ட தற்போதுள்ள கைத்தொழில்கள் | |
|---|---|---|
| | கைத்தொழில்கள் | உருவாக்கப்பட்ட புதிய தொழில்கள் |
| ஏக்கலை | 3 | 42 |
| பல்லெகெலே | 3 | 38 |
| பூந்தோட்டம் | 1 | 5 |
| களுதாவளை | 1 | 8 |
| **மொத்தம்** | **8** | **93** |

- **குத்தகை ஒப்பந்தங்களில் கைச்சாத்திடல்**

காணிகள் மற்றும் நிர்மாணித்து முடித்த கட்டிடங்களுக்கு முறையே 30 வருடங்கள் மற்றும் 20 வருட காலப்பகுதிக்கு திருப்திகரமாக முறையில் தொழில்முயற்சிகளில் ஈடுபடும் சம்பந்தப்பட்ட கைத்தொழிலாளர்களுடன் காணிகள்/நிர்மாணித்து முடித்த கட்டிடங்களுக்கு குத்தகை ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டன. அதன்படி, 2023 ஆம் ஆண்டில் குறித்த கைத்தொழில்களில் ஈடுபட்டுள்ளவர்களுடன் 32 குத்தகை ஒப்பந்தங்களைக் கைச்சாத்திட்டு 1,046,750/- தொகையை ஈட்ட முடிந்தது.

- **தோல்வியடைந்த கைத்தொழில்களைக் கையகப்படுத்துதலும் பொருத்தமான முதலீட்டாளர்களிடம் கையளித்தலும்**

2023 ஆம் ஆண்டில் 19 கைத்தொழில்களை உள்ளடக்குகின்றவாறு தோல்வியடைந்த கைத்தொழில்களை கையகப்படுத்தி புதிய கைத்தொழில்களை ஆரம்பிப்பதற்காக பொருத்தமான முதலீட்டாளர்களுக்கு அவை கையளிக்கப்பட்டுள்ளன.

- **கைத்தொழில்களுக்கு கடன் வசதியளித்தல்**

கைத்தொழிலாளர்களுக்கு குத்தகைவிடப்பட்டுள்ள ஆதனம் பற்றிய குத்தகை உரிமையை வைத்துக்கொண்டு நிதி நிதிவனங்களிலிருந்து 8 கைத்தொழில்களுக்கு கடன் வசதிகளைப் பெற்றுக்கொள்வதற்கு வசதியளிக்கப்பட்டுள்ளது.

- **வாடகை வருமானத்தை சேகரித்தல்**

2023 ஆம் ஆண்டினுள் சேகரிக்கப்பட்ட குத்தகை விடப்பட்டுள்ள காணிகளுக்கும் கட்டிடங்களுக்குமான மாதாந்த/வருடாந்த வாடகைகள், நீர்க் கட்டணங்கள், உரிமைமாற்றக் கட்டணங்கள் (காணி மதிப்பீட்டுக் கட்டணங்கள்), நிலுவைகள் சேகரிப்பு வருமானம் 92.58 மில்லியன் ரூபாவாகும். குத்தகைபெறுநரிடமிருந்து மூன்றாண்டு கால மீளளிப்பு செய்யக்கூடிய வைப்புக்களாக அறவிட்டுக்கொள்ளப்பட்ட சேகரிப்புகளுக்கான சுழல் நிதியம் பேணப்படுகிறது. அதன்படி, 2023 ஆம் ஆண்டின் இறுதியில் சுழல் நிதியத்திலிருந்து திரண்ட தொகை, 10.63 மில்லியன் ரூபாவாகும்.

# 4) முயற்சியாண்மை அபிவிருத்திப் பிரிவு

## 4.1 அறிமுகம்

நெசவு மற்றும் கிராமியக் கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சினால் 1989 டிசம்பர் மாதம் 15 ஆம் திகதி அமைச்சரவைப் பத்திரமொன்றின் மூலம் இப்பிரிவு கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் கீழ் ஒரு விசேட பயிற்சிப் பிரிவாக நிறுவப்பட்டது. இப்பிரிவு நாடளாவிய ரீதியில் முகாமைத்துவத் திறன்களும் முயற்சியாண்மை அபிவிருத்தியும் குறித்த பயிற்சியளிப்பதில் ஈடுபடுகிறது. இப்பிரிவின் பெயர், 2023 ஆம் ஆண்டில் முயற்சியாண்மை அபிவிருத்திப் பிரிவு (EDD) என்று மாற்றப்பட்டது. EDD பிரிவு பயிற்சி அலகு, நூலகம், தகவல் கூடம், தகவல் தொழில்நுட்ப அலகு, அச்சீட்டு அலகு என்ற நான்கு(04) அலகுகளைக் கொண்டது. இன்றைய முக்கிய தொழில்முயற்சிகள் மற்றும் புதிய கைத்தொழில் தொனிப்பொருள்கள் பற்றிய சிறிய மற்றும் நடுத்தர அளவான தொழில்முயற்சியாளர்களையும் எதிர்கால தொழில்முயற்சியாளர்களையும் அறிவுறுத்தும் பொறுப்பு இவ்வனைத்து உப பிரிவுகளுக்கும் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேலும், சமூகத்தில் முயற்சியாண்மைக் கலாசாரமொன்றை ஏற்படுத்துவது EDD பிரிவின் நோக்கமாகும்.

நாடெங்கும் பரந்துள்ள முயற்சியாண்மை அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவத் திறன்கள் பற்றிய பல்வேறு பயிற்சிகளை வழங்குவது பயிற்சி அலகின் முக்கிய செயற்பொறுப்பாகும். நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவான தொழில்முயற்சியாளர்களுக்கு அவர்களின் கைத்தொழில்களை முன்னேற்றுவதற்கு நிதியுதவியளித்தல், பாடசாலை மாணவர்களுக்கும் சமூகத்திற்கும் இடையில் முயற்சியாண்மைக் கலாசாரமொன்றை ஏற்படுத்துதல், நாட்டில் கோடிட்டுக்காட்டத்தக்க தொழில்முயற்சியாளர்களுக்கு வரவேற்பொன்றையும் மதிப்பொன்றையும் வழங்குதல், ஏனைய எதிர்கால தொழில்முயற்சியாளர்கள் அவர்களின் தொழில்முயற்சிகளை ஆரம்பிப்பதற்கு ஊக்குவித்தல் ஆகியன இப்பயிற்சி அலகுக்கு மேலும் ஒப்படைக்கப்பட்டுள்ள செயற்பொறுப்புகளாகும். EDD இனால் “Industry TV” (PEO TV 130 அலைவரிசை) அலைவரிசை ஊடாக சமூகத்திற்கு கைத்தொழில் செய்திகளையும் இற்றைப்படுத்திய தகவல்களையும் வழங்குவதற்கான அரங்கொன்று உருவாக்கப்பட்டுள்ளது. சிறிய மற்றும் நடுத்தர அளவான தொழில்முனைவோரை முன்னேற்றுதல், ஊக்குவித்தல், அபிவிருத்திசெய்வதற்கு நூலக வசதிகள், மதியுரைச் சேவைகள், கைத்தொழில் தகவல்களை வழங்குதல் ஆகிய பொறுப்புக்கள் நூலக மற்றும் தகவல் அலகின் அலுவலர்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. பிரிவின் தகவல் தொழில்நுட்ப அலகினால் (ITU) IDB இனுள் வலையமைப்பு மற்றும் தகவல் வசதிகள் அளிக்கப்படுவதுடன், தொழில்முனைவோரின் ICT மற்றும் டிஜிட்டல் அணுகுவழி திறன்களுடனும் டிஜிட்டல்மயமாக்கலுடன் தொழில்முனைவோரின் மூலோபாயங்களை முன்னேற்றுதல், IDB இன் உத்தியோகபூர்வ இணையத்தளம், உரிய உப முறைமைகள், முழு சமூக ஊடக வலையமைப்பின் அபிவிருத்தி, இற்றைப்படுத்தல், பராமரிப்பு ஆகியன மேற்கொள்ளப்படுகின்றன. அறிக்கைகள், கைந்நூல்கள், பிரசுரங்கள் உள்ளிட்ட ஆவணங்கள் அச்சீட்டு அலகினால் அச்சிடப்படுகின்றன. EDD இலங்கையினுள் புதிய முகாமைத்துவ மூலோபாயங்களை அறிமுகப்படுத்தல், தொழில்நுட்ப அறிவை வழங்குதல், மதியுரைச் சேவைகளை வழங்குதல், டிஜிட்டல் சந்தைப்படுத்தல், நடமாடும் தொழில்நுட்பம், இ-வாணிபம், IoT முதலான துறைகளில் தொழில்முயற்சியாளர்களின் ICT திறமைகளை முன்னேற்றுவதன் ஊடாக புதிய தொழில்முயற்சிக் கலாசாரமொன்றை ஏற்படுத்துவதற்கு இணைந்துள்ளது. அந்த இலக்குகளை அடைந்துகொள்வதற்கு EDDக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள பணிகளில் சில பின்வருமாறு:

## 4.2 EDD க்கு ஒப்படைக்கப்பட்டுள்ள செயற்பாடுகள்

<u>பயிற்சி அலகு</u>

- முயற்சியாண்மை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள்
- முகாமைத்துவ திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள்
- பாடசாலை கைத்தொழில் முயற்சியாண்மை வட்ட தேசிய நிகழ்ச்சித்திட்டம்
- தேசிய கைத்தொழில் சிறப்பு விருதுகள் - 2023
- பாடசாலைச் சிறார்களுக்கான தேசிய ரீதியிலான போட்டிகள்
- " Industry TV " (PEO TV 130 அலைவரிசை)
- “ சுபாரதீ ” வானொலி நிகழ்ச்சி
- SEDA Start-up and Scale-up பயிற்சிக் கைந்நூல்
- Industry-2023 கண்காட்சியில் “ One-stop-shop ”
- கைத்தொழில் கடன் வழங்கல் திட்டம்

<u>தொழில்நுட்ப அலகு</u>

- இ-வாணிப இணைய அரங்குகளின் அபிவிருத்தி, சமூக ஊடக சந்தைப்படுத்தல், YouTube சந்தைப்படுத்தல், சிறிய மற்றும் நடுத்தர அளவான தொழில்முயற்சிகளின் வினைத்திறனை உச்சமட்டமாக்குவதற்கு செயற்கை நுண்ணறிவு (AI) சாதனங்கள் பற்றி தொழில்முனைவோருக்கு டிஜிட்டல் அணுகுவழிச் செயலமர்வுகளை நடாத்துதல்.
- தொழில்முனைவோருக்கு உயர்மட்ட டிஜிட்டல் சந்தைப்படுத்தல் பற்றி TVEC பதிவு திறன்களை முன்னேற்றுவதற்கான பத்து(10) நாள் நிகழ்ச்சியை நடாத்துதல்.
- சிறிய மற்றும் நடுத்தர அளவான தொழில்முனைவோரின் தொழில்முயற்சிகளுக்கு டிஜிட்டல் மூலோபாயமொன்றை அமுல்படுத்துவதற்கு அவர்களுடன் தனியாகவும் குழுநிலையாகவும் கலந்துரையாடல்களை (one to one மற்றும் one to many discussions) நடாத்துதல்
- உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் சிறிய மற்றும் நடுத்தர அளவான தொழில்முனைவோருக்கு இணைய தோற்றவடிவங்களை (Web profiles) தயாரிப்பதற்கு Zoom அமர்வுகளை நடாத்துதல்.
- IDB இன் Zoom கணக்கை நிர்வகித்தல். (கூட்டங்களுக்கான நேரசூசிகளைத் தயாரித்தல், ஒலிப்பதிவுகளை அனுப்புதல், கொடுப்பனவுகளைத் தயார்செய்தல்)
- TSD மற்றும் RDD இனால் ஒழுங்குசெய்யப்பட்ட செயலமர்வுகளை ஊக்குவிப்பதற்காக Facebook ஊடாக சமூக ஊடக பிரச்சாரங்களை மேற்கொள்ளல்.
- IDB இன் சமூக ஊடக வலையமைப்பை (Facebook Page, Facebook Group, Twitter, LinkedIn, YouTube channel முதலியன) நிர்வகித்தல்.
- உத்தியோகபூர்வ இணையத்தளத்தை நிர்வகித்தல். உரிய உப முறைமைகளுடனான டிஜிட்டல் One Stop Shop.
- மனித வள முகாமைத்துவ முறைமை, மனக்குறைகளைக் கையாளும் முறைமை, ஆய்வுகூட முகாமைத்துவத் தகவல் முறைமை, SAGE கணக்கு பக்கேஜ் போன்ற உள்ளக தகவல் முறைமைகளின் அபிவிருத்தி மற்றும் TEC நடபடிமுறைகளில் பங்கேற்றலும் ஒத்துழைத்துச் செயலாற்றுதலும்.
- சிறிய மற்றும் நடுத்தர அளவான தொழில்முனைவோருக்காக அரசின் இ-வாணிப அரங்கான ‘Ceylon Plaza’ ஐ நிர்வகித்தல்.
- தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பப் பிரிவின் ஒருங்கிணைப்புக் குழுவைப் பிரதிநிதித்துவப்படுத்தி ஒரு கைத்தொழில் என்ற வகையில் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத்தை செயல்முனைப்பாக்குதலும் அபிவிருத்திசெய்தலும்.
- FITIS மற்றும் WIT போன்ற ICT சார்ந்த கைத்தொழிற் சங்கங்களுடன் சிறிய மற்றும் நடுத்தர அளவான தொழில்முனைவோரின் பயன்பாட்டுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திடல்.
- கைத்தொழில்களில் டிஜிட்டல் மாற்றம் (Digital Transfomation) பற்றி எடுத்து விளக்கும் கைத்தொழில் கண்காட்சிகள், தொலைக்காட்சி உரையாடல்கள் மற்றும் வானொலி நிகழ்ச்சிகளில் பங்கேற்றல்.
- IDB இன் வன்பொருள்கள், மென்பொருள்கள் மற்றும் வலையமைப்புப் பிரச்சினைகளை நிவர்த்தி செய்தல்.

<u>நூலகமும் தகவல் கூடமும்</u>

- பிரசுரங்களை விற்பனைசெய்தல்.
- நூலக நூல்களின் சேகரிப்பை முன்னேற்றுதல் (சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில)
- நிகழ்நிலை தரவுக் களஞ்சியத்தினுள் IDB சேவைநாடிகளைப் பதிவுசெய்தல்.
- கைத்தொழிலாளர்கள், வாடிக்கையாளர்கள், IDB பணியாட்குழுவினர் முதலியோருக்கு கைத்தொழில்கள் சார்ந்த தகவல்களை வழங்குதல்.
- நூல் விபரத்திரட்டுத் தரவுகள், உள்நாட்டு இயந்திர உபகரணங்கள், உற்பத்தியாளர்கள், அறிக்கைகள், இலங்கை தரநியமங்கள், ஆதரவளிக்கும் நிறுவனங்கள், சட்டங்கள் பற்றிய தரவுத் தளங்களைப் பராமரித்தலும் இற்றைப்படுத்தலும்.

<u>அச்சீட்டு அலகு</u>

- கைந்நூல்கள், பக்கேஜ்கள், பிரசுரங்கள், விபரச்சுட்டிகள், விளம்பரச் சிற்றேடுகள் முதலான வெளியீடுகளை உருவாக்குதலும் இற்றைப்படுத்தலும்.

## 4.3 பிரிவினால் நடாத்தப்படும் முக்கிய நிகழ்ச்சிகள்

### 4.3.1 SEDA கைந்நூலை வெளியிடுதல்

இன்றைய மற்றும் மூலவாய்ப்புவளமுளள தொழில்முனைவோருக்கு அறிவையும் ஒத்துழைப்பையும் வழங்கும் நோக்குடன் பேண்தகு முயற்சியாண்மை அபிவிருத்தி (SEDA) அணுகுமுறைக் கைந்நூல் தயாரிக்கப்பட்டது. அதன்படி, மூலவாய்ப்புவளமுள்ள அல்லது வளர்ந்துவரும் தொழில்முனைவோருக்கு அவர்களின் திறமைகள், புதிய தொழில்முயற்சி ஆற்றல்கள் மற்றும் கருத்துக்களை அடையாளம் காண்பதற்கு SEDA Start-up கைந்நூல் வழிகாட்டும். இன்றைய தொழில்முனைவோர் தமது பலங்களையும் பலவீனங்களையும் அடையாளம் காண்பதற்கும் தமது தொழில்முயற்சிகளை அடுத்த படிநிலைக்கு முன்னேற்றுவதற்கும் SEDA Scale-up கைந்நூல் வழிகாட்டும். இக்கைந்நூல், முயற்சியாண்மை அபிவிருத்திப் பிரிவின் பிரதிப் பணிப்பாளர் திரு. ரஞ்ஜித் பத்மலால் உள்ளிட்ட குழுவினரால் தயாரிக்கப்பட்டது.

2023 நவம்பர் 21 ஆம் திகதி கைத்தொழில் மற்றும் சுகாதார அமைச்சர் கௌரவ (வைத்தியர்) ரமேஷ் பத்திரண அவர்கள் தலைமையில் பொல்ஹேன்கொடவில் அமைந்துள்ள வெகுசன ஊடக அமைச்சின் அரசாங்க தகவல் திணைக்கள கேட்போர்கூடத்தில் இக்கைந்நூல் வெளியிட்டு வைக்கப்பட்டது.





### 4.3.2 IDB அலுவலர்களுக்கான SEDA பற்றி பயிற்றுவிப்பாளர்களைப் பயிற்றுவிக்கும் (TOT) நிகழ்ச்சித்திட்டம்



SEDA Start-up மற்றும் Scale-up கைந்நூல் பற்றி பயிற்றுவிப்பாளர்களைப் பயிற்றுவிக்கும் நிகழ்ச்சித்திட்டம், 2023 டிசம்பர் மாதம் 11–13 வரை கட்டுபெத்த CEWAS இல் நடைபெற்றது. கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் தெரிவுசெய்யப்பட்ட அலுவலர்களுக்கு SEDA பற்றி பயிற்சி அளிக்கப்பட்டது. இக்கைந்நூலை மேலும் முன்னேற்றுவதற்கான யோசனைகளைப் பெற்றுக் கொள்ள கலந்துரையாடல்கள் இடம்பெற்றன.

### 4.3.3 பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்

IDB இனால் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகள் பற்றி அறிவுறுத்துவதற்கு 2023 நவம்பர் 18 ஆம் திகதி அலுவலர்களுக்கும், 2023 டிசம்பர் 08 ஆம் திகதி முகாமைத்துவ உதவி அலுவலர்களுக்கும் என்றவாறு இரு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் ஒழுங்குசெய்யப்பட்டிருந்தது. இந்நிகழ்ச்சியை எமது திணைக்களத்தின் நிபுணர்கள் நெறிப்படுத்தினர்.



### 4.3.4 தேசிய கைத்தொழில் சிறப்பு விருது விழா - 2023

கைத்தொழில் அமைச்சினாலும் கைத்தொழில் அபிவிருத்திச் சபையினாலும் ஏற்றுமதி சார்பான உற்பத்திப் பொருளாதாரம் என்ற தொனிப்பொருளின் கீழ் "தேசிய கைத்தொழில் சிறப்பு விருது விழா - 2023" பெருமையுடன் நடாத்தப்பட்டது. இத்தேசிய விழா, கொழும்பு தாமரைத் தடாகம் (நெளும் பொக்குன) அரங்கில் 2023 நவம்பர் மாதம் 01 ஆம் திகதி பி.ப. 4.30 மணி முதல் பி.ப. 7.30 மணி வரை நடைபெற்றது. மேன்மைதங்கிய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அவர்களும், கைத்தொழில் மற்றும் சுகாதார அமைச்சர் கௌரவ (வைத்தியர்) ரமேஷ் பத்திரண அவர்களும், ஏனைய இராஜாங்க அமைச்சர்களும் இந்நிகழ்வில் கலந்து சிறப்பித்தனர்.

இலங்கையின் எல்லா மாவட்டங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் நுண், சிறிய, நடுத்தர மற்றும் பாரியளவு குழுக்களாக ஆட்களுக்காக பரந்ததொரு மதிப்பீடொன்று நடாத்தப்பட்டது. உள்நாட்டுக் கைத்தொழில் பிரிவினுள் இல. 21 மற்றும் 67 உப பிரிவுகள் இம்மதிப்பீட்டில் கலந்துகொண்டன.

முதனிலைப் பிரிவுகளிலும் உப பிரிவுகளிலும் திறமைகளைக் காட்டிய 296 நபர்களுக்கு மதிப்பீடுகள் வழங்கப்பட்டன. நுண், சிறிய, நடுத்தர மற்றும் பாரிய அளவு குழுக்களைச் சேர்ந்த ஒவ்வொரு பிரிவிலும் சிறப்பிடம் வகித்தவர்களுக்கு 4 பிளாட்டினம் விருதுகள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

| | தங்கம் | வெள்ளி | வெண்கலம் | பிளாட்டினம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| பாரிய | 17 | 15 | 12 | 1 | 45 |
| நடுத்தர | 39 | 25 | 15 | 1 | 80 |
| சிறிய | 42 | 38 | 38 | 1 | 119 |
| நுண் | 18 | 18 | 19 | 1 | 56 |
| மொத்தம் | 116 | 96 | 84 | 4 | 300 |

இவ்விழாவின் மூலம் ஈட்டப்பட்ட ரூ.5,040,000.00 தொகை வருமானம், கைத்தொழில் அபிவிருத்தி நிதியத்தில் செலவு வைக்கப்பட்டது.






### 4.3.5 பாடசாலை கைத்தொழில் முயற்சியாண்மை வட்ட தேசிய நிகழ்ச்சித்திட்டம்

கைத்தொழில் அமைச்சு, இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபை, கல்வி அமைச்சு இணைந்து முயற்சியாண்மைக் கலாசாரமொன்றைக் கட்டியெழுப்பும், தேசிய உற்பத்திக்கு முனைப்பாகவும் பயன்கூர் விதத்திலும் பங்களிப்புச் செய்யக்கூடிய மாணவர் சந்ததியொன்றை சமூகமயப்படுத்தும் அதேபோல் பாடசாலைகளை வழிப்படுத்துவதன் ஊடாக கைத்தொழில்களையும் புத்தாக்கங்களையும் ஏற்படுத்துவதற்கு அவசியமான மனோநிலையை நாட்டினுள் கட்டியெழுப்பும் நோக்குடன் பாடசாலை கைத்தொழில் முயற்சியாண்மை வட்ட நிகழ்ச்சித்திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

பாடசாலை கைத்தொழில் முயற்சியாண்மை வட்ட நிகழ்ச்சித்திட்டம் நாடெங்கிலுமுள்ள சுமார் 257 பாடசாலைகளில் தற்போது வெற்றிகரமாக அமுல்படுத்தப்படுகிறது. 473 பாடசாலை கைத்தொழில் முயற்சியாண்மை வட்டங்களுக்குரிய 11,409 பாடசாலைப் பிள்ளைகள் இந்நடவடிக்கைகளில் முனைப்பாக ஈடுபட்டு வருகின்றனர். சுமார் 814 ஆசிரியர்களுக்கு இந்நிகழ்ச்சித்திட்டம் தொடர்பாக பயிற்சியளிக்கப்பட்டுள்ளது.





### 4.3.6 பாடசாலை மாணவர்களுக்கான தேசிய ரீதியான போட்டிகள்

கல்வி நிறுவனங்களும் சமூகத்தினுள் பாடசாலை கைத்தொழில் முயற்சியாண்மை வட்ட நிகழ்ச்சித்திட்டமும் பற்றி அர்த்தபுஷ்டியான உரையாடலொன்றை ஏற்படுத்தும் நோக்குடன் சித்திரம், கட்டுரை, பாடல், குறுந்திரைப்படம் அடங்கிய பலவின போட்டியொன்று ஒழுங்கு செய்யப்பட்டது.

இப்போட்டிகளில் வெற்றியீட்டியவர்கள் தெரிவுசெய்யப்பட்டனர். பாடசாலை கைத்தொழில் முயற்சியாண்மை வட்ட நிகழ்ச்சித் திட்டத்தின் முன்னோடிப் பதக்கத்திற்கு தகுதிபெற்ற மாணவர்களுக்கு பதக்கம் அணிவிப்பதற்கான தேசிய பதக்கமளிப்பு விழாவில் இவ்விருதுகளை வழங்க எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும், போட்டியாளர்களின் பங்களிப்பை மதிப்பீடு செய்வதற்கும் இரசணைக்கும் களம் அமைத்துக்கொடுக்கும் பொருட்டு பங்குபற்றுநர்களின் படைப்புக்கள் காட்சிப்படுத்தப்படும் மூன்று நாள் சித்திரக் கண்காட்சி 2024 மார்ச் மாதத்தில் நடைபெறவுள்ளது.

### 4.3.7 "Industry TV" (PEO TV 130 அலைவரிசை)




கைத்தொழில் அமைச்சு, இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபையுடன் இணைந்து இலத்திரனியல் ஊடகங்கள் வாயிலாக கைத்தொழில்கள் பற்றிய அறிவையும் தகவல்களையும் ஊக்குவிப்பதற்காக அர்ப்பணிதது "Industry TV" தொலைக்காட்சி அலைவரிசையொன்று ஆரம்பிக்கப்பட்டது. மக்கள் அபிப்பிராயத்தை வடிவமைத்தல், கைத்தொழில் புத்தாக்கங்களுக்கு பங்களிப்புச் செய்வதற்கு கிராமப்புற சமூகத்தவர்களை வலுவூட்டுதலும் அதன் மூலம் ஏற்றுமதி சார்பான உற்பத்திப் பொருளாதாரமொன்றுக்கான தேசிய அடித்தளத்தைப் பலப்படுத்துவதும் இந்த அலைவரிசையின் நோக்கமாகும். 2023 நவம்பர் 21 ஆம் திகதி இந்த அலைவரிசை உத்தியோகபூர்வமாக நேரலை ஒளிபரப்பை மேற்கொண்டது. வெகுசன ஊடக அமைச்சின் அரசாங்க தகவல் திணைக்கள கேட்போர்கூடத்தில் அதன் அங்குரார்ப்பண நிகழ்வு இடம்பெற்றது.

Peo TV இன் அலைவரிசை இல.130 ஊடாக சிறுவர்கள், பெரியவர்கள் ஆகிய எல்லா பராயத்தவர்களையும் சேர்ந்த பிரஜைகளை இலக்கிட்டதாக இந்த ஒளிபரப்பு மேற்கொள்ளப்படுகிறது. தற்போது Industry TV அலைவரிசை ஊடாக பலதரப்பட்ட நிகழ்ச்சிகள் ஒளிபரப்பாகின்றன.

### 4.3.8 'சுபாரதீ' வானொலி நிகழ்ச்சி

'சுகாரதீ' வானொலி நிகழ்ச்சி புதன்கிழமை தோறும் மு.ப. 7.00 மணி முதல் மு.ப. 9.00 மணி வரை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் சுதேசிய சேவை அலைவரிசை ஊடாக ஒலிபரப்பு செய்யப்படுகிறது. ஒவ்வொரு நிகழ்ச்சிக்கும் உரிய சொற்பொழிவாளர்களையும் தலைப்புக்களையும் ஒருங்கிணைப்புச் செய்யும் பணியை எமது பிரிவு மேற்கொள்கிறது.

### 4.3.9 Industry-2023 கண்காட்சியில் "One-stop-shop"

Industry - 2023 கண்காட்சியின்போது (கொழும்பு, யாழ்ப்பாணம், கண்டி, காலி) எமது பிரிவினால் One-stop-shop இனை ஒருங்கிணைப்புச் செய்து நடாத்தப்பட்டது. சேவைநாடிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு

அவசியமான தீர்வுகளை வழங்குவதற்காக அனைத்துத் தகவல்களும் உரிய மாவட்டங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டன.





### 4.3.10 கைத்தொழில் கடன் வழங்கும் திட்டம்

இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபை பிரதேச அபிவிருத்தி வங்கியுடன் இணைந்து கைத்தொழில் அபிவிருத்தி நிதியத்தின் ஊடாக "கைத்தொழில் கடன்" திட்டத்தை ஆரம்பித்துள்ளது. 2023 செப்டம்பர் 14 ஆம் திகதி இரு தரப்புக்கும் (IDB – RDB) இடையில் கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தப்படி 'கைத்தொழில் கடன்' திட்டம் 2023 செப்டம்பர் 18 ஆம் திகதியிலிருந்து அமுலுக்கு வரும். 2023 இறுதியளவில் 'கைத்தொழில் கடன்' திட்டத்தின் கீழ் 33 தொழில்முனைவோருக்கு கடன் வசதியளிக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை 4.3.1 : கைத்தொழில் அபிவிருத்தி நிதியம்**

| பொழிப்பு அறிக்கை (ரு) | |
|---|---|
| **நிதி வைப்புக்கள் - 2023.09.15** | 10,000,000.00 |
| **பிணைத்தொகை** | (1,000,000.00) |
| | **9,000,000.00** |
| **நிதிய வைப்புக்கள் - 2023.09.15** | 6,948,392.92 |
| **பிணைத்தொகை** | (694,839.30) |
| | 15,253,553.62 |
| **பெற்றுக்கொண்ட கடன்** | 12,375,000.00 |
| **தற்போதைய மீதி** | **2,878,553.62** |
| **பிணைத்தொகை** | **1,694,839.30** |

அட்டவணை 4.3.2 : பிரிவின் ஆண்டிறுதி முன்னேற்றம் - 2023

| செயற்பாட்டு இலக்கம் | செயற்பாடு | திரண்ட நிதிசார் முன்னேற்றம் (ரூ) |
|---|---|---|
| 1 | **சிறிய மற்றும் நடுத்தர அளவான தொழில்முனைவோருக்கு டிஜிட்டல் அனுகுவழி பிரயோக செயலமர்வை நடாத்துதல் - தகவல் தொழில்நுட்ப அலகு** | |
| 1.1 | சமூக ஊடக சந்தைப்படுத்தல், இணையத்தள அபிவிருத்தி, ட்ரொப் சிப்பிங் பற்றி TVEC இல் பதிவுசெய்யப்பட்ட எட்டு நாள் செயலமர்வை நடாத்துதல் (Zoom தொழில்நுட்பம் ஊடாக + வளவில்) | 1,851,000 |
| 1.2 | சமூக ஊடக சந்தைப்படுத்தல், இணையத்தள அபிவிருத்தி, டிரெக்ட் சிப்பிங் பற்றி TVEC இல் பதிவுசெய்யப்பட்ட எட்டு நாள் செயலமர்வுகளை நடாத்துதல் (Zoom தொழில்நுட்பம் ஊடாக + வளவில்) | 861,000 |
| 1.3 | Zoom தொழில்நுட்பத்தின் ஊடாக எமது பிராந்திய வலையமைப்பின் ஊடாக நாடெங்கும் பரந்துள்ள தொழில்முனைவோருக்கு 8 நாள் டிஜிட்டல் சந்தைப்படுத்தல் பற்றிய பிரயோக ரீதியான நிகழ்ச்சித்திட்டத்தை நடாத்துதல் | 114,000 |
| 1.4 | மகாவலி அதிகாரசபையும் நனசல மெய்நிகர் வளாகமும் (Nanasala Virtual Campus) இணைந்து சமூக ஊடக சந்தைப்படுத்தல், Fiverr, நடமாடும் செயலியின் அபிவிருத்தி பற்றிய இளைஞர் யுவதிகளுக்கான ICT சார்ந்த பல்வகைமைப்படுத்திய செயலமர்வுகளை நடாத்துதல். | 532,000 |
| 1.5 | தொழில்முனைவோரின் வீடியோ சாட்சிகள் அடங்கிய தரவுத்தளத்தைப் பராமரித்தல் (ஊக்குவிப்புச் செயற்பாடுகள்) | 49,600 |
| 1.6 | ஏற்றுமதி நடைமுறைகள் பற்றிய தொழில்முனைவோரின் அறிவை முன்னேற்றுவதற்கான செயலமர்வு | 242,500 |
| | **தகவல் தொழில்நுட்ப அலகின் மொத்தம்** | **3,650,100** |
| 2 | **குறித்துரைக்கப்பட்ட சேவைகள்** | |
| 2.1 | தகவல் வழங்கலும் பரப்பீடும் | 369,315 |
| | **முழு மொத்தம்** | **4,019,415** |



## 5) பிராந்திய அபிவிருத்திப் பிரிவு

பிராந்திய பணியாட்குழுவினால் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களையும் விரிவாக்கல் செயற்பாடுகளையும் நெறிப்படுத்தலும் மேற்பார்வையும் பிராந்திய அபிவிருத்திப் பிரிவினால் (RDD) மேற்கொள்ளப்படுகிறது. கைத்தொழிலாளர்களுக்கும் தொழில்முனைவோருக்கும் நாட்டின் பல்வேறு பகுதிகளில் தமது தொழில்முயற்சிகளை ஆரம்பிப்பதற்கும் ஊக்குவிப்பதற்கும் உதவுவது பிரிவின் முக்கிய நோக்கமாகும். கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் கீழ் காணப்படும் இப்பிராந்திய அபிவிருத்திப பிரிவு சபையின் இலக்குகளை அடைந்துகொள்வதற்கு பங்களிப்பை வழங்கும் பொருட்டு 4 முக்கிய துறைகளின் கீழ் இயங்குகின்றது. 25 மாவட்டங்களின் கைத்தொழில்களின் பொருளாதார நிலைமை அடையாளம் காணல், புதிய கைத்தொழில்களை உருவாக்குதல், தற்போது காணப்படும் சிறிய மற்றும் நடுத்தர அளவான தொழில்முயற்சிகளை ஊக்குவித்தலும் அபிவிருத்திசெய்தலும், பிராந்திய அபிவிருத்திப் பிரிவின் பணியாட்குழுவினதும் பிராந்திய பணியாட்குழுவினதும் ஆற்றல்களை விருத்திசெய்வது அந்த நான்கு செயன்முறைகளுமாகும்.

இதுதவிர, பிராந்திய கைத்தொழில் பொருளாதார அறிக்கைகளைத் தயாரித்தல், புதிய சிறிய மற்றும் நடுத்தர அளவான தொழில்முனைவோரை உருவாக்குதல், நுண்பாக கைத்தொழில்களை நிறுவுதல், தற்போது காணப்படும் சிறிய மற்றும் நடுத்தர அளவான தொழில்முனைவோரை முன்னேற்றுதல், ஏற்றுமதிக்குத் தயாரான கம்பனிகளாக சிறிய மற்றும் நடுத்தர அளவான தொழில்முனைவோரை முன்னேற்றுதல் ஏற்றுமதிக்குத் தயாரான கம்பனிகள் என்ற வகையில் சிறிய மற்றும் நடுத்தர அளவான தொழில்முனைவோரை அடையாளம் காணலும் ஊக்குவித்தலும் இப்பிரிவினால் முன்னெடுக்கப்படும் மற்றும் முக்கிய செயற்பாடுகளில் சிலவாகும்.

### 5.1. 2023 செயல் திட்டத்தின் வெற்றிநிலை

2023 ஆம் ஆண்டுக்கான பிராந்திய அபிவிருத்திப் பிரிவின் செயல்திட்டம் 25 மாவட்டங்களிலும் அமுலாக்கப்பட்டதுடன், இலங்கைப் பொருளாதார நெருக்கடிகளையும் சவால்களையும் எதிர்நோக்கியபோதும் வழங்கப்பட்டுள்ள இலக்குகள் அடைந்துகொள்ளப்படுகிறது.

அதன்படி, இப்பிரிவுக்கு இணைக்கப்பட்டு அனைத்து அலுவலர்களதும் பணியாட்குழுவினதும் ஒத்துழைப்புடன் பிராந்திய அபிவிருத்திப் பிரிவு, ஆண்டினுள் 32.80 மில்லியன் ரூபா வருமானமொன்றை ஈட்டியுள்ளது. இப்பிரிவு அடைந்துள்ள இலக்குகள் பின்வருமாறு:-

**அட்டவணை 5.1 : பிரிவின் செயலாற்றுகை**

| # | பெறுபேறு | மு.செ.கு. (KPIs) | P/I | திரண்ட | |
|---|---|---|---|---|---|
| | | | | இலக்கு | அடைவு |
| 1 | தாபிக்கப்பட்ட புதிய கைத்தொழில்கள் (ஆரம்பநிலை) | தாபிக்கப்பட்ட புதிய கைத்தொழில்களின் (தொடக்கநிலை) எண்ணிக்கை | கைத்தொழில்களின் எண்ணிக்கை | 420 | 204 |
| 2 | தரமுயர்த்தப்பட்ட தற்போதைய கைத்தொழில்கள் | தரமுயர்த்தப்பட்ட தற்போதைய கைத்தொழில்களின் எண்ணிக்கை | கைத்தொழில்களின் எண்ணிக்கை | 700 | 465 |
| 3 | தாபிக்கப்பட்ட/ தரமுயர்த்தப்பட்ட நுண்பாகக் கைத்தொழில்கள் | தாபிக்கப்பட்ட/ தரமுயர்த்தப்பட்ட நுண்பாகக் கைத்தொழில்களின் எண்ணிக்கை | கைத்தொழில்களின் எண்ணிக்கை | 850 | 793 |
| 4 | ஏற்றுமதிக்குத் தயார்படுத்தும் கம்பனிகள் | தரமுயர்த்தப்பட்ட கம்பனிகளின் எண்ணிக்கை | கைத்தொழில்களின் எண்ணிக்கை | 50 | 31 |

## 5.2 பிரிவினால் ஒழுங்குசெய்யப்பட்ட விசேட செயற்பாடுகள்/ நிகழ்வுகள்

- **தேசிய கைத்தொழில் கண்காட்சி - 2023**

கைத்தொழில் அமைச்சின் வழிகாட்டலின் கீழ் இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபையினால் (IDB) இலங்கையின் கைத்தொழில்களை ஊக்குவிப்பதற்கும் மேம்படுத்துவதற்கும் அபிவிருத்தி செய்வதற்குமான பல்வேறு செயல்முனைப்புகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இதற்காக அர்ப்பணித்து 2023 யூன் மாதம் 22 - 25 ஆம் திகதி வரை BMICH இல் National Industry Exhibition - 2023 கண்காட்சியை ஒழுங்கு செய்திருந்தது. இலங்கையின் உற்பத்திகளை ஊக்குவிக்கும் நோக்கில் நான்கு நாட்களாக சுமார் 700 காட்சியறைகளைக் கொண்டதாக இக்கண்காட்சி விமர்சையாக நடைபெற்றது. இலங்கையின உற்பத்திகளை குறிப்பாக உணவுப் பிரிவின் உற்பத்திகள், ஆடைகள் மற்றும் தைத்த ஆடைகள் பிரிவு, இயந்திர உபகரணங்களும் படகுகளும், தோல் மற்றும் பாதணிகள் பிரிவு, மருந்துத்துறை ஆகியன கண்காட்சியில் கோடிட்டுக்கட்டத்தக்க பிரிவுகளாக விளங்கின. கண்காட்சிக்கூடங்களுக்கு மேலதிகமாக புத்தாக்குநர் மேடை, இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் மேடை ஆகியன இப்பாரிய கண்காட்சிக்கு புதுப்பொலிவை வழங்கியது.







- **வடமாகாண கைத்தொழில் கண்காட்சி - Jaffna Edition - 2023**



BMICH இல் வெற்றிகரமாக நடைபெற்ற தேசிய கைத்தொழில் கண்காட்சியைத் தொடர்ந்து பிரதேச ரீதியாக தொடர் கண்காட்சிகளை ஒழுங்குசெய்வதற்கு IDB முகாமைத்துவம் முடிவெடுத்தது. அதன்படி, வட மாகாண கைத்தொழில் கண்காட்சி 2023 செப்டம்பர் மாதம் 1 – 3 ஆம் திகதி வரை யாழ்ப்பாணம் கலாசார நிலையத்தில் நடைபெற்றது. அது, உள்நாட்டுக் கைத்தொழிலாளர்களுக்கு புதியதோர் அனுபவமாக இருந்தது. குறிப்பாக, வட மாகாணத்தைச் சேர்ந்தவர்களுக்கு தமது உற்பத்திகளைப் பிரபல்யப்படுத்துவதற்கு அரியதொரு வாய்ப்பை அது ஏற்படுத்திக் கொடுத்தது. சுமார் 300 கண்காட்சிக் கூடங்களைக் கொண்டதாக விமர்சையான ஒரு வைபவமாக இக்கண்காட்சி நடைபெற்றது. இயந்திர உபகரணங்கள், தொழில்நுட்பம், மூலப்பொருள்கள் மற்றும் தொழில்முயற்சி அபிவிருத்திச் சேவைகளில் உள்நாட்டுக் கைத்தொழிலின் சிறப்பை இக்கண்காட்சி பிரதிபலித்தது. மிக முக்கியமாக கொள்கை வகுப்பாளர்களும் ஏனைய அரச ஆதரவுச் சேவைகள் உள்ளிட்ட உரிய தரப்பினர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்திக்கொள்வதற்கு தக்கதொரு மேடையை அது அமைத்துக் கொடுத்தது. அனைத்து இலங்கைக் கைத்தொழில்களின் இயலாற்றல்களையும் திறன்களையும் எடுத்துக்காட்டும் வண்ணம் இந்நிகழ்வு திட்டமிடப்பட்டிருந்ததுடன் அது பயனுறுதிவாய்ந்த விதத்தில் அடையப் பெற்றுள்ளது.

- **மத்திய மாகாண கைத்தொழில் கண்காட்சி – Kandy Edition 2023**

மத்திய மாகாண கைத்தொழில் கண்காட்சி 2023 அக்டோபர் மாதம் 6 - 8 ஆம் திகதி வரை போகம்பறை பழைய சிறைச்சாலை வளவில் நடைபெற்றது. சுமார் 300 கண்காட்சிக் கூடங்களைக் கொண்டதாக விமர்சையாக அது நடைபெற்றது. கைத்தொழில் அமைச்சர் கௌரவ (வைத்தியர்) ரமேஷ் பத்திரண அவர்கள் உள்ளிட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள், அதிதிகள் பலரும் இந்த விமர்சையான நிகழ்வில் கலந்துகொண்டனர். இக்கண்காட்சியில் One Stop Shop நிகழ்ச்சித் திட்டம், பாடசாலை முயற்சியாண்மை வட்ட சித்திரப்போட்டி நிகழ்ச்சி என்பனவும் இடம்பெற்றன.



- **தென் மாகாண கைத்தொழில் கண்காட்சி – Galle Edition 2023**

தென் மாகாண கைத்தொழில் கண்காட்சி 2023 என்பது ஏற்றுமதியை இலக்காகக்கொண்ட உற்பத்திப் பொருளாதாரமொன்றுக்கு வலுவூட்டும் நோக்கில் கைத்தொழில் அமைச்சு, இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபை ஆகிய இணைந்து ஒழுங்குசெய்த கண்காட்சியாகும். தென் மாகாண கைத்தொழில் கண்காட்சிக்கு இலங்கையின் 20 துறைகளைச் சார்ந்த கைத்தொழில்களுக்குரிய 300க்கும் அதிகமான காட்சிக்கூடங்களில் புத்தாக்கங்களும் புதிய தொழில்நுட்பமும் உள்ளடக்கப்பட்டிருந்தது. புதிய கைத்தொழில்களுக்கும் தென் மாகாணத்திற்கு தனிச்சிறப்பானதுமான பல கைத்தொழில்களுக்கு இக்கண்காட்சியின் ஊடாக தமது உற்பத்திகளை சந்தைப்படுத்திக்கொள்வதற்கும் ஊக்குவிப்பதற்கும் அரியதொரு வாய்ப்பு ஏற்பட்டது.







- **மாவட்ட செயலாளர்களுடனான கூட்டங்கள்**

கைத்தொழில் அமைச்சின் வழிகாட்டலின் கீழ் இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் மாவட்ட அலுவலகங்கள் ஊடாக மேற்கொள்ளக்கூடிய கைத்தொழில் அபிவிருத்தி நடவடிக்கைகள் பற்றி கலந்துரையாடுவதற்கு மாவட்ட செயலாளர்களுடனான கூட்டங்கள் மாவட்ட ரீதியாக ஒழுங்கு செய்யப்பட்டன. இது கைத்தொழிலாளருக்கு, குறிப்பாக பின்தங்கிய கைத்தொழில்களுக்கு சந்தையிலுள்ள சாத்தியப்பாட்டைப் புரிந்துகொள்வதற்கும், அவர்களின் தொழில்முயற்சிகளை உயர்மட்டத்திற்கு இட்டுச்செல்வதற்கும் உறுதுணையாக அமைந்தது.



அட்டவணை 5.2 : ஆண்டிறுதி முன்னேற்றம் - 2023

| செயற்பாடு | திரண்ட பௌதிக முன்னேற்றம் |
|---|---|
| **1. புதிய கைத்தொழில்களை நிறுவுதல் (ஆரம்பநிலை) *(One to One)*** | |
| மூலவாய்ப்புவளமுள்ள தொழில்முனைவோரை அடையாளம் காணல் | 1,503 |
| சுற்றாடல்சார் உதவியை பலப்படுத்தல் (உட்கட்டமைப்பு வசதிகளும் பயன்பாடுகளும் சார்ந்த) | 87 |
| சந்தைப்படுத்தல் உதவியளித்தல் | 98 |
| பொறியியல் மற்றும் தொழில்நுட்ப உதவியளித்தல் | 884 |
| முகாமைத்துவ தொழில்நுட்ப உதவியளித்தல் | 192 |
| நிதி வசதியைப் பெற்றுக்கொள்வதற்கான ஒருங்கிணைப்பு (கடன்கள்/கொடைகள் மற்றும் அவை சார்ந்த) | 30 |
| **2. தற்போதைய கைத்தொழில்களுக்கான தொழில்முயற்சி முன்னேற்ற நிகழ்ச்சித்திட்டங்கள் - *(One to One)*** | |
| தற்போதைய கைத்தொழில்களை அடையாளம் காணல் | 828 |
| சுற்றாடல்சார் உதவியைப் பலப்படுத்தல் (உட்கட்டமைப்பு வசதிகளும் பயன்பாடுகளும் சார்ந்த) | 238 |
| சந்தைப்படுத்தல் அபிவிருத்தி உதவியளித்தல் | 677 |
| பொறியியல் மற்றும் தொழில்நுட்ப அபிவிருத்தி உதவியளித்தல் | 397 |
| முகாமைத்துவ அபிவிருத்தி உதவியளித்தல் | 203 |
| நிதி வசதியைப் பெற்றுக்கொள்வதற்கான ஒருங்கிணைப்பு (கடன்கள்/கொடைகள் மற்றும் அவை சார்ந்த) | 85 |
| **3. நுண்பாகக் கைத்தொழில்களை ஆரம்பித்தல்/ முன்னேற்றுதல் - *(One to One)*** | |
| நுண்பாகக் கைத்தொழில்களை அடையாளம் காணல் | 4,063 |
| சுற்றாடல்சார் உதவியை பலப்படுத்தல் (உட்கட்டமைப்பு வசதிகளும் பயன்பாடுகளும் சார்ந்த) | 179 |
| சந்தைப்படுத்தல் உதவியளித்தல் | 493 |
| பொறியியல் மற்றும் தொழில்நுட்ப உதவியளித்தல் | 1,413 |
| முகாமைத்துவ உதவியளித்தல் | 645 |
| நிதி வசதியைப் பெற்றுக்கொள்வதற்கான ஒருங்கிணைப்பு (கடன்கள்/கொடைகள் மற்றும் அவை சார்ந்த) | 150 |
| **4. ஏற்றுமதிக்குத் தயார்படுத்தும் கம்பனிகள் - *(One to One)*** | |
| ஏற்றுமதிக்குத் தயார்படுத்தும் நிலையிலுள்ள கைத்தொழில்களை அடையாளம் காணல் | 51 |
| சுற்றாடல்சார் உதவியை பலப்படுத்தல் (உட்கட்டமைப்பு வசதிகளும் பயன்பாடுகளும் சார்ந்த) | 3 |
| உலக சந்தையில் பிரவேசிப்பதற்கு சந்தைப்படுத்தல் உதவியளித்தல் | 37 |
| பொறியியல் மற்றும் தொழில்நுட்ப அபிவிருத்தி உதவியளித்தல் | 41 |
| முகாமைத்துவ அபிவிருத்தி உதவியளித்தல் | 8 |
| நிதி வசதியைப் பெற்றுக்கொள்வதற்கான ஒருங்கிணைப்பு (கடன்கள்/கொடைகள் மற்றும் அவை சார்ந்த) | 3 |
| **5. பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் - (குழுநிலை)** | |
| பிரிவுகளோடு ஒன்றிப்பான தொழில்நுட்பப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல் (இரசாயனப் பிரிவு, கட்டிடப் பொருள்கள், எண்ணெய் மற்றும் நார், உணவுப் பிரிவு, தொழில்நுட்பம் சார் ஏனையவை) | 763 (எண்ணிக்கை)<br>16,784 (பயனாளிகள்) |
| முயற்சியாண்மை அபிவிருத்திப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் (சந்தைப்படுத்தல், | 360 (எண்ணிக்கை) |

| | |
|---|---|
| நிதி, முகாமைத்துவம், இயல்திறன்களைக் கட்டியெழுப்புதல், தொழில்நுட்பம் சாராத முயற்சியாண்மை அபிவிருத்திக்குரிய ஏனையவை) | 12,692 (பயனாளிகள்) |
| மகளிர் முயற்சியாண்மை அபிவிருத்தி (WED) பயிற்சிகளை ஒழுங்குசெய்தல் | 38 (எண்ணிக்கை) |
| | 1,984 (பயனாளிகள்) |
| தொழில்நுட்பத்தோடு ஒன்றிப்பான விசேட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் (சமுர்த்தி, முச்சக்கர வண்டிச் சாரதிகள் - தொழில்முயற்சித் தொழில்நுட்பம், படைவீரர்) | 46 (எண்ணிக்கை) |
| | 1,361 (பயனாளிகள்) |
| **6. சந்தைப் பிரவேசமும் வேறு விசேட நிகழ்ச்சித்திட்டங்கள்/சேவைகள்** | |
| சிறிய மற்றும் நடுத்தர அளவான வியாபார ஆதரவுச் சேவைகளை நடாத்துதல் | 8 (எண்ணிக்கை) |
| | 297 (பயனாளிகள்) |
| மாகாண வாரியாக கண்காட்சிகளை ஒழுங்குசெய்தல் | 33 |
| முயற்சியாண்மை வட்டங்களை நிறுவுவதற்கு உதவுதல் | 172 (எண்ணிக்கை) |
| | 7,995 (பயனாளிகள்) |
| IDB இன் "காணி வங்கி" எண்ணக்கருவை நிறுவுவதற்கு உதவுதல் | 3 (எண்ணிக்கை) |
| | 48 (பயனாளிகள்) |
| தொடராய்வு உதவியளித்தல் | 565 |
| **7. வருமான உருவாக்குகைச் சேவைகள்** | |
| வேறு விசேட சேவைகள்/நிகழ்ச்சித்திட்டங்கள் (உதாரணமாக: மகாவலி மற்றும் அது சார்ந்த கருத்திட்டங்கள்) | 42 |
| கித்துள் சீவுவோருக்கு கெஸ்பர் போத்தல்களை விற்பனை செய்தல் | 3,718 |
| உலோகங்களை அடிப்படையாகக்கொண்ட மூலப்பொருள்களை விநியோகித்தல் | 793 |
| கருத்திட்ட அறிக்கைகளைத் தயாரித்தல் | 52 |
| நிதி பெற்றுக்கொள்வதற்காக கருத்திட்டப் பிரேரணைகளை உருவாக்குதல் | 8 |

**அட்டவணை 5.3 : வருடாந்த வருமான ஒப்பீடு**

| ஆண்டு | உள்ளபடியான வருமானம் (ரூ.மி.) |
|---|---|
| 2019 | 12.46 |
| 2020 | 15.76 |
| 2021 | 9.88 |
| 2022 | 22.04 |
| 2023 | 32.80 |

உருவரை 5.1 : உள்ளபடியான வருமானத்தின் வருடாந்த முன்னேற்றம் (ரூ.மி.)



## 6) திட்டமிடல் பிரிவு

IDB இன் செயற்பாட்டுப் பிரிவுகளினால் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகளின் முன்னேற்றத்தை மேற்பார்வை செய்தலும் பணிப்பாளர் சபை மற்றும் அமைச்சின் தகவலுக்கு அவ்வப்போது முன்னேற்ற அறிக்கைகளைச் சமர்ப்பிப்பதும் இப்பிரிவுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள முக்கிய செயற்பாடுகளாகும். மேலும், நிறுவன மூலோபாயத் திட்டத்தைத் திட்டமிடுதலும் தயாரித்தலும் பௌதிக மற்றும் நிதிசார் இலக்குகளின் அடிப்படையில் பிரிவுகளின் செயற்பாடுகளின் முன்னேற்றத்தை மதிப்பிடுதலும் இப்பிரிவுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள மற்றும் சில முக்கிய செயற்பாடுகளாகும். மீளாய்வாண்டில் அப்பொறுப்புக்கள் தொடர்ந்தும் நிறைவேற்றப்பட்டன. இதுதவிர, நிரல் அமைச்சின் தேவைகளுக்கேற்ப சபையின் செயலாற்றுகை மதிப்பீடுகளுக்குரிய தகவல்கள் அவ்வப்போது வழங்கப்பட்டன.

### 6.1 பிரிவினால் முன்னெடுக்கப்பட்ட விசேட கருத்திட்டங்கள்

#### 6.1.1 கைத்தொழில் சார்ந்த புள்ளிவிவரங்கள் தொடர்பில் வசதியளித்தலும் உரிய பிரிவின் அபிவிருத்தித் திட்டங்களைத் தயாரிப்பதற்கு உதவுதலும்

**அட்டவணை 6.1 : பிரிவுகளின் வகையீடு**

| இல. | பிரிவின் பெயர் | குறும் பெயர் (Ceylon Industry Hub Platform இல் குறிப்பிடப்படும் பெயர் - CIH பெயர்) |
|---|---|---|
| 1 | உணவு பானங்கள் | உணவு பானங்கள் |
| 2 | திட்டங்கள், பொதியிடல், கடதாசி சார்ந்த கைத்தொழில்கள் | திட்டங்களும் பொதியிடலும் |
| 3 | பலசரக்குகள் சார்ந்த கைத்தொழில்கள் | பலசரக்குகளும் மருந்துகளும் |
| 4 | தென்னை, கித்துள், பனை சார்ந்த உற்பத்திகள், நார்ப்பொருள் சார்ந்த கைத்தொழில்கள் | தெங்கு, கித்துள், பனை, நார் |
| 5 | தேயிலை, பெறுமதிசேர்க்கப்பட்ட தேயிலை மற்றும் அவை சார்ந்த கைத்தொழில்கள் | இலங்கைத் தேயிலை |
| 6 | பாதணிகள், தோல், தோல்பொருள் உற்பத்திகள் மற்றும் அவை சார்ந்த கைத்தொழில்கள் | பாதணிகளும் தோலும் |
| 7 | இறப்பர், பிளாஸ்ரிக் மற்றும் அவை சார்ந்த கைத்தொழில்கள் | இறப்பரும் பிளாஸ்ரிக்கும் |
| 8 | உலோகங்கள், டை, வார்ப்பச்சுக்கள், சாதனங்கள் மற்றும் அதனோடிணைந்த கைத்தொழில்கள் | உலோக வேலைகளும் இயந்திர சாதனங்களும் |
| 9 | மரப்பலகை, மரப்பலகை சார்ந்த கைத்தொழில்கள் மற்றும் தளபாடக் கைத்தொழில்கள் | மரப்பலகையும் தளபாடங்களும் |
| 10 | வாகனங்கள், வாகன ஒன்றுகோர்ப்பு, வாகனங்கள் சார்ந்த கைத்தொழில்கள் | மோட்டார் வாகனங்களும் வானக உதிரிப்பாகங்களும் |
| 11 | மின்சார, இலத்திரனியல் சாதனங்கள் மற்றும் அவை சார்ந்த கைத்தொழில்கள் | மின் மற்றும் இலத்திரனியல் |
| 12 | மேலைத்தேய, சுதேச மருத்துவ மற்றும் ஏனைய மருந்துகள் சார்ந்த கைத்தொழில்கள் | மருந்துகளும் ஆயுர்வேதமும் |
| 13 | கட்டுமானங்கள், கிரனைட், கூரை ஓடு, மண்பாடங்கள், பீங்கான் பாண்டங்கள், அலங்காரம் சார்ந்த கைத்தொழில்கள் | கட்டுமானங்களும் அலங்கரிப்பும் |
| 14 | கடல்சார் மற்றும் கப்பல்துறை சார்ந்த கைத்தொழில்கள் | கடல்சார் மற்றும் கப்பல்துறை சார் |
| 15 | அச்சீடு, வெளியீட்டுப் பொருள்கள் மற்றும் அது சார்ந்த கைத்தொழில்கள் | அச்சீடும் வெளியீடுகளும் |
| 16 | அழகுக்கலையும் அது சார்ந்த கைத்தொழில்களும் | களிம்புகளும் அழகுக்கலை (ஒப்பனை) கவனிப்பும் |

| | | |
|---|---|---|
| 17 | இரத்தினக்கற்களும் ஆபரணங்களும் சார்ந்த கைத்தொழில்கள் | இரத்தினக்கற்களும் ஆபரணங்களும் |
| 18 | கனியங்களும் சுரங்கம் சார்ந்த கைத்தொழில்கள் | கனியங்களும் சுரங்கக் கைத்தொழிலும் |
| 19 | ஆடைகளும், புடவைகளும் அவை சார்ந்த கைத்தொழில்களும் | ஆடைகளும் புடவைகளும் |
| 20 | இரசாயன, எரிசக்தி மற்றும் அவை சார்ந்த கைத்தொழில்கள் | இரசாயன மற்றும் எரிசக்தி |
| 21 | ICT மற்றும் உயர் தொழில்நுட்ப சேவைகள் | ICT |
| 22 | கைவினைக் கைத்தொழில் | கைவினை |
| 23 | விவசாயத்தை அடிப்படையாகக்கொண்ட கைத்தொழில்கள் | விவசாயத்தை அடிப்படையாகக்கொண்டவை |
| 24 | சேவைக் கைத்தொழில் | சேவைகள் |
| 25 | வேறு கைத்தொழில்கள் | வேறு |

### 6.1.2 "Industry Ceylon" சஞ்சிகை




இன்றைய பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில், கைத்தொழில் துறையின் துரித மேம்பாடு, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சந்தையை வெற்றிகொள்ளக்கூடிய கைத்தொழில் சமூகமொன்றை உருவாக்குவது இலங்கை மக்கள் சார்பாக சுபீட்சமான வாழ்நிலையொன்றை உருவாக்குவதற்கு அத்தியாவசிய காரணிகளாக இனங்காணப்பட்டுள்ளது. அதன்படி, 'ஏற்றுமதி சார்பான உற்பத்திப் பொருளாதாரமொன்றை நோக்கி' என்ற தொனிப்பொருளில் இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபை எதிர்வரும் சில ஆண்டுகளினுள் கைத்தொழில்துறை முன்னேற்றத்திற்கான பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தத் திட்டமிட்டுள்ளது.

அந்த அடிப்படையில், அதன் ஒரு நடவடிக்கையாக "Industry Ceylon" என்ற பெயரில் கைத்தொழில் சஞ்சிகையொன்றை காலாண்டு அடிப்படையில் வெளியிட சபை நடவடிக்கை எடுத்துள்ளது. எமது பங்கீடுபாட்டாளர்களுக்கு பெறுமதியான அறிவு, கைத்தொழில்கள் பற்றிய இற்றைப்படுத்திய தகவல்களையும் சந்தர்ப்பங்களையும் வழங்குவதே இச்சஞ்சிகையின் நோக்கமாகும். அது, இலங்கையின் கைத்தொழில்துறையின் வெற்றிகள், புத்தாக்கங்கள், இயல்பூக்கங்கள் என்பவற்றை வெளிக்கொணரும் அரங்கொன்றாக அமையும். இச்சஞ்சிகையை வெளியிடுவதன் மூலம் தாக்கமுள்ள கைத்தொழில் சூழல் தொகுதியொன்றை ஊட்டி வளர்த்தல், பல்வேறு பங்கீடுபாட்டாளர்களுக்கு மத்தியில் ஒத்துழைப்பிற்கான வசதிகளை அளித்தல் என்பன நோக்காகக் கொள்ளப்படுகின்றன.

### 6.1.3 உணவு பதனிடல் கைத்தொழிலினுள் வீடுகள் சார்ந்த ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி அலகுகளை *(In-House R & D Units)* நிறுவப்படுவதை ஊக்குவித்தலும் வசதியளித்தலும்

உள்நாட்டு உணவுக் கைத்தொழிலை அபிவிருத்திசெய்யும் நோக்குடன் இலங்கையில் ஆக்கபூர்வமான ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திக் கலாசாரமொன்றைக் கட்டியெழுப்புவதற்கான கருத்திட்டமொன்று கைத்தொழில் அபிவிருத்திச் சபையினால் முடுக்கிவிடப்பட்டது. இக்கருத்திட்டத்தின் கீழ் அனைத்து ஆராய்ச்சிகளும் நிறுவன மற்றும் தனிநபர் ஆராய்ச்சியாளர்களுக்கு தமது ஆராய்ச்சிக் கண்டுபிடிப்புக்களை 'புதிய உற்பத்திகள் மேடையில்' அரங்கேற்றுவதற்கு 2023 தேசிய கைத்தொழில் கண்காட்சியின்போது வாய்ப்பேற்படுத்திக் கொடுக்கப்பட்டது. மேலும், கண்காட்சியின்போது இடம்பெற்ற புதிய உற்பத்தியாளர் - முதலீட்டாளர் கூட்டவையில் அவர்களின் ஆராய்ச்சி உள்ளார்ந்த ஆற்றல்களை முதலீட்டாளர்களிடம்

முன்வைப்பதற்கு வாய்ப்பேற்படுத்திக் கொடுக்கப்பட்டது. தெரிவுசெய்யப்பட்ட முன்னணி உணவுக் கைத்தொழில்களுக்கு அவர்களின் கைத்தொழில்கள் உள்ளிட்ட ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி அலகுகளை நிறுவுவதுடன் பராமரித்தல் பற்றி பயிற்சியளிக்கப்பட்டது.

### 6.1.4 ஜா-எல, ஏக்கல IDB கைத்தொழிற் பேட்டையின் உற்பத்திக் கைத்தொழில்களின் எரிசக்தி வினைத்திறனை அதிகரிப்பதற்கான முன்னோடிக் கருத்திட்டம் - 2022/2023

கைத்தொழில் அபிவிருத்திச் சபை (IDB) 2022 யூன் மாதத்தில் USAID - S/L எரிசக்தி நிகழ்ச்சித் திட்டத்தின் ஒத்துழைப்புடன் ஜா-எல - ஏக்கல IDB கைத்தொழிற் பேட்டையிலுள்ள கைத்தொழில்களின் எரிசக்தி வினைத்திறனை முன்னேற்றும் முன்னோடிக் கருத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. அது, 2023 நவம்பர் மாதம் 16 ஆம் திகதி வெற்றிகரமாக நிறைவடைந்தது.

மேற்குறித்த கருத்திட்டத்திற்கு விண்ணப்பித்திருந்த 19 கம்பனிகளில், எரிசக்தி வினைத்திறனுக்கான அவர்களின் ஆற்றல்களையும் உத்தேச எரிசக்தி வினைத்திறன் சார்ந்த தீர்வுகளையும் அமுல்படுத்துவதற்கு அக்கம்பனிகளுக்கு இருக்கின்ற ஆற்றலின் அடிப்படையில், அதனை அமுல்படுத்துவதற்காக Finagle Lanka (Pvt) Ltd, Michelin Lanka (Pvt) Ltd ஆகிய கம்பனிகள் தெரிவுசெய்யப்பட்டன. Michelin Lanka – சில்லு உற்பத்திப் பிரிவு, பொருள்களைக் கையாளுதல், கட்டுமானங்கள், விவசாயம் மற்றும் ஓட்டப்பந்தயம் சார் கைத்தொழில்களுக்காக கரடுமுரடான பாதைகளுக்கு உகந்த ரயர்கள் (off-road tires), சில்லுகள், இறப்பர் பீலிகள், ஓட்டப் பாதைகளை உருவாக்குவதில் சிறப்பிடம் வகிப்பதுடன், Finagle Lanka (Pvt) Ltd இலங்கையின் மிக முக்கிய தொழில்நுட்பம் சார்ந்த வெதுப்பக உற்பத்திகளை மேற்கொள்ளும் ஒரு நிறுவனமாகும். அதன்படி, USAID SL Energy நிகழ்ச்சித்திட்டம், IDB மற்றும் மேற்குறிப்பிட்ட கைத்தொழில்களுக்கு இடையில் முத்தரப்பு புரிந்துணர்வு ஒப்பந்தமொன்று (MoU) 2023 மே மாதம் 18 ஆம் திகதி கட்டுபெத்த, கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் பணிப்பாளர் சபை கூடும் மண்டபத்தில் கைச்சாத்திடப்பட்டது. புரிந்துணர்வு ஒப்பந்தப்படி, கருத்திட்டத்தின் கீழ் நடாத்தப்படும் முழுமையான எரிசக்திக் கணக்காய்வுகள் மூலம் பெற்றுக்கொண்ட மின்சார வினைத்திறன் மாற்றுவழிகளை முன்னேற்றுவதற்கு இலவசமாக தொழில்நுட்ப மதியுரைச் சேவைகளை வழங்குவதன் மூலம் தெரிவுசெய்யப்பட்ட கைத்தொழில்கள் நன்மைகளைப் பெற்றுக்கொண்டுள்ளன.

### 6.1.5 இலங்கையின் கைத்தொழில்களின் காலனிலைப் பிரதிபலிப்பை துரிதப்படுத்துதல்

கைத்தொழில்துறையில் இலங்கையின் தோற்றப்பாடுகளை உருவாக்கிய பங்களிப்பை (NDC) அமுல்படுத்த உதவுவதன் ஊடாக காலனிலை மாற்றத்தைத் தணிப்பதற்கு பங்களிப்புச் செய்வதே கருத்திட்டத்தின் முழுதுமளாவிய நோக்கமாகும். காலனிலை மாற்றங்களுக்கு பிரதிபலிப்பைக் காட்டுவதில் உலகின் மிகவும் ஆபத்தை எதிர்நோக்கக்கூடிய நாடுகளுக்கு உதவுவதை நோக்காகக்கொண்ட EU GCCA + செயல்முனைப்பின் உதவியுடன் இக்கருத்திட்டம் அமுல்படுத்தப்படுகிறது. “கைத்தொழில் செயற்பாட்டுக் குழு” (Industry working group) செயற்பாடுகளை அமுலுக்கிட தலைமைத்துவம் வழங்கும். EO4 இன் கீழ்: கைத்தொழில்துறையில் காலனிலை மாற்றங்களைத் தணிக்கும் நிலைப்பாடுகளுக்குரிய இயல்திறனைக் கட்டியெழுப்புதல் அத்துடன் EO5: மேம்படுத்திய எரிசக்தி வினைத்திறனையும் பச்சைவீட்டு வாயுக்களின் (GHG) விடுவிப்பைக் குறைப்பதற்கு தூண்டுதலளிக்கும் முன்னோடி தொழில்நுட்பங்களையும் முறைமைகளையும் மீளுருவாக்கம் செய்வதற்கான சோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

### 6.1.6 கைத்தொழில்களைப் பதிவுசெய்யும் சான்றிதழ்கள், முயற்சியாண்மை அடையாள அட்டை, மோட்டார் வாகன அனுமதிப்பத்திரமொன்றை வழங்குவதன் மூலம் தொழில்முனைவோரை மதிப்பீட்டுக்கு உட்படுத்தும்போதே வரவேற்பொன்றை உருவாக்குதல்.

தற்கால சமூகம் முயற்சியாண்மை மீது குறைந்த கவனம் செலுத்துவதால், வரையறுத்த எண்ணிக்கையான நபர்களே இத்துறையில் ஈடுபடுகின்றனர். முயற்சியாண்மை மூலம் பெரும் எண்ணிக்கையான வேலைவாய்ப்புகளையும் வருமான உருவாக்குகை மார்க்கங்களையும் வழங்குவதற்கு மாத்திரமன்றி, தனிநபரின் வாழ்க்கைத்தரத்தை முன்னேற்றுவதற்கும் அது இயலுமை பெறும். இந்நாட்டின் தொழில்முனைவோரின் சதவீதத்தை அதிகரிப்பதற்காக அவர்களை ஊக்குவித்தல், மதித்தல், சமூகத்தில்

உயர் அந்தஸ்தையும் வரவேற்பையும் பெற்றுக்கொடுப்பதன் மூலம் பொருளாதார வளர்ச்சியின் முக்கிய ஊக்கியொன்றாக முயற்சியாண்மையை எப்பொழுதும் ஏற்றிவிட வேண்டும். ஆகையால், பதிவுச் சான்றிதழொன்றை, முயற்சியாண்மை அடையாள அட்டையொன்றை, மோட்டார் வான அனுமதிப் பத்திரமொன்றை வழங்குவதன் மூலம் தொழில்முனைவோருக்கு வரவேற்பொன்றைப் பெற்றுக்கொடுக்க சபை உரிய நடவடிக்கை எடுத்துள்ளது.









### 6.1.7 பிரிவினால் மேற்கொள்ளப்படும் உப செயற்பாடுகள்

- நிதி பெற்றுக்கொள்வதற்கு IDB இன் வரவுசெலவுத்திட்ட முன்மொழிவுகளை அமைச்சிற்கு சமர்ப்பித்தல்.
- எதிர்வரும் ஆண்டுக்கு நிறுவன வரவுசெலவுத்திட்டம், முழுதுமளாவிய செயல் திட்டத்திற்கு இணங்க மூலதன வரவுசெலவுத்திட்டம் மற்றும் மீண்டெழும் செலவினத் தேவைகளைத் தயாரிப்பதற்கு வசதியளித்தல்.
- IDB இற்கு பெறுகைத் திட்டமொன்றைத் தயாரித்தல்.
- ஆண்டிற்குரிய செயல் திட்டத்தைத் தயாரித்தல்.
- ஆண்டிற்கான செயல் திட்டம் பற்றிய மாதாந்த, காலாண்டு மற்றும் வருடாந்த முன்னேற்ற அறிக்கைகளைத் தயாரித்தல்.
- மாதாந்த முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்களை ஒழுங்குசெய்தல்.
- ஆண்டறிக்கையை (2022) தயாரித்தல்.
- IDB இன் கட்டாயமான நோக்கங்களுக்கு அமைவான கொள்கைகளையும் மூலோபாயங்களையும் உருவாக்குதல்.
- வெளிநாட்டு நிதி பெறுவதற்காக அபிவிருத்திக் கருத்திட்ட முன்மொழிவுகளையும் கருத்துருத் தாள்களையும் தயாரித்தல்.
- நடப்பு கைத்தொழில்கள் சார்ந்த கொள்கை வகுப்பு குழுக்களுக்கு IDB பங்கேற்பை உறுதிசெய்தலும் தேவையேற்படின் கொள்கைத்தாள்களைத் தயாரித்தலும்.
- ஒவ்வொரு நிதியாண்டுக்கும் உரிய ஆண்டு செயலாற்றுகை அறிக்கைகள்.
- அமைச்சின் செயற்பாடுகள் பற்றி மும்மொழிகளிலும் காலாண்டு மீளாய்வை மேற்கொள்ளல்.

## 7) தொழில்நுட்ப சேவைப் பிரிவு (TSD)

தொழில்நுட்ப சேவைப் பிரிவு(TSD), IDB இன் முக்கிய ஒரு பிரிவாகும். இலங்கையின் முழுதுமளாவிய கைத்தொழிலாளர் சமூகம் உள்ளிட்ட எதிர்கால தொழில்முனைவோருக்கு கைத்தொழிலை விஸ்தரிப்பதற்கும் நவீனமயப்படுத்துவதற்கும் விளைதிறனை முன்னேற்றுவதற்கும் தேவையான தொழில்நுட்ப உதவி அதன் மூலம் வழங்கப்படுகிறது. இது தவிர, தொழில்முனைவோரின் தேவைகளுக்கு ஏற்ற உணவுகள், இரசாயனப் பதார்த்தங்கள், எண்ணெய் வகை மற்றும் நார்கள், கட்டிடப் பொருள்கள், கனினித் தொழில்நுட்பம் ஆகிய 5 பிரிவுகள் மீதமைந்த பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களையும் மதியுரைச் சேவைகளையும் வழிகாட்டல்களையும் இப்பிரிவு வழங்குகிறது. இயலுமான ஆகக்கூடிய வினைத்திறனான, பயன்கூர், புது முறைகளினால் பௌதிக மற்றும் மெய்நிகர் தகவல் வளங்களை அடைந்துகொள்ளல், ஒழுங்கமைத்தல், பாதுகாத்தல், பராமரித்தல், அணுகுமுறையை வழங்குதல் ஆகியவற்றின் மூலம் மூலவாய்ப்புவளமுள்ள தொழில்முனைவோருக்கு உதவுவதன் மீது தொழில்நுட்ப சேவைகளின் கவனம் ஈர்க்கப்பட்டுள்ளது. தொழில்முனைவோருக்கு புதிய கைத்தொழில்களின் எண்ணக்கருவிலிருந்து ஆரம்பித்து அமுல்படுத்துவதற்கும் தற்போதுள்ள கைத்தொழில்களை விஸ்தரித்தல், நவீனமயப்படுத்தல், பல்வகைப்படுத்தல், பண்புத்தரம் மற்றும் விளைதிறனை முன்னேற்றுவதற்குத் தேவையான தொழில்நுட்ப ஒத்துழைப்பை வழங்குதல் TSD இன் முக்கிய குறிக்கோளாகும்.

- உணவுகள், இரசாயனப் பதார்த்தங்கள், எண்ணெய் மற்றும் நார்கள், கட்டிடப் பொருள்கள், கனியங்கள் ஆகிய துறைகளில் தொழில்நுட்ப பயிற்சிச் சான்றிதழ் கற்கைநெறிகளை நடாத்துதல்.
- தொழில்நுட்ப ரீதியான ஒத்துழைப்பை/ மதியுரையை வழங்குதல்.
- உகந்த வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு தொழில்நுட்பத்தை அடைந்துகொள்ளலும் விநியோகித்தலும்.
- தரச் சான்றிதழ்களை (GMP, SLS, ISO முதலான) பெற்றுக்கொள்வதற்கு தொழிற்சாலைகளுக்கு உதவுதல்.
- உற்பத்திகள் பொதியிடலையும் லேபலிடுதலையும் முன்னேற்றுவதற்கான வசதிகளை அளித்தல்.
- மேம்படுத்துவதற்குரிய உற்பத்திகளை அடையாளம் காணல்.
- தொழில்முயற்சித் தகவல்களும் தொடர்புகளும்.
- உணவுப் பரிசோதனையும் அறிக்கையிடலும்.

### 7.1 2023 ஆம் ஆண்டில் TSD இனால் முன்னெடுக்கப்பட்ட முக்கிய செயற்பாடுகள்

#### 7.1.1 பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல்

#### 7.1.2 தொழில்நுட்ப நிகழ்ச்சித்திட்டங்கள்/ செயலமர்வுகள்/ செய்துகாட்டல்கள்

தொழில்நுட்ப சேவைப் பிரிவிலும் அதற்கு வெளியிலுமு உணவுகள், இரசாயனப் பதார்த்தங்கள், எண்ணெய் மற்றும் நார்கள், கட்டிடப்பொருள்கள் ஆகிய உப பிரிவுகளின் கீழ் 77 தொழில்நுட்பப் பரிமாற்ற பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்/ செயலமர்வுகள்/ செய்துகாட்டல்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இச்செயலமர்வுகளின் ஊடாக மொத்தமாக 1,677 பேருக்கு பயிற்சியளித்து உதவியதன் மூலம் இருபத்தொரு மில்லியன் ரூபா வருமானம் ஈட்டப்பட்டுள்ளது.

#### 7.1.3 உணவு பானங்கள் ஏற்றுமதி பற்றிய விழிப்பூட்டல் நிகழ்ச்சித்திட்டம்

2023 சனவரி 28 ஆம் திகதி 110 கைத்தொழிலாளர்களுக்கு யூனியன் பிளேஸ் கொமர்ஷல் வங்கியினால் ஒழுங்குசெய்யப்பட்ட உணவு பானங்களின் ஏற்றுமதி பற்றி விழிப்பூட்டுவதற்கான நிகழ்ச்சித்திட்டத்தில் TSD பங்கேற்றது. கைத்தொழிலாளர்கள் மத்தியில் உணவு பானங்கள் பிரிவின் நேரில் ஏற்றுமதியாளர்களும் ஏற்றுமதித் தயார்நிலையிலுள்ள கைத்தொழில்களும் சிறிய மற்றும் நடுத்த அளவான தொழில்முயற்சிகளும் காணப்பட்டன. இலங்கையின் விவசாய நுகர்வுப் பொருள்களுக்கு கூடுதல் பெறுமதி சேர்க்கும் நோக்குடன் உணவு பானங்கள் கைத்தொழில் துறையில் உலகளாவிய போக்குகளையும் பாணிகளையும் அறிமுகப்படுத்துவதற்காக "உணவு பானங்கள் ஏற்றுமதிக் கைத்தொழில்கள் பற்றிய பருமட்டான பகுப்பாய்வு" என்ற தலைப்பில் TSD இனால் விரிவுரையொன்று நிகழ்த்தப்பட்டது.

### 7.1.4 கேள்விக்கு ஏற்றவாறு தயாரிக்கப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல்

- பனாகொட தரைப்படை முகாமின் 10 இராணுவ அதிகாரிகள் குழுவொன்றுக்கு 'மரவள்ளி பதனிடல் தொழில்நுட்பம்', 'கழிவுநீர் சுத்திகரிப்புத் தொழில்நுட்பம்' ஆகியன இரு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன.
- பனாகொட தரைப்படை முகாமின் 09 தரைப்படை அதிகாரிகள் குழுவொன்றுக்கு 'துரித பழச்சாற்றுப் பானம், பழப்பாகு(ஜாம்) மற்றும் கோடியல்' தயாரித்தல் பற்றிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன.
- லஸ்ஸன எக்ரி தனியார் கம்பனிக்கு அவர்களின் சேதன விவசாயத்தை முன்னேற்றுவதற்காக 'மூங்கில் மர பரிகரிப்பு' (Bamboo Softwood Treatment) பற்றிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டமொன்று நடாத்தப்பட்டது.
- மேல் மாகாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையின் நிதியுதவியின் கீழ் மேல் மாகாண தொழில்முனைவோருக்கு 'பலசரக்குகள் தயாரிப்புத் தொழில்நுட்பம்' பற்றிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டமொன்று நடாத்தப்பட்டது.

### 7.1.5 துறைவாரியான அபிவிருத்திக் கூட்டங்கள்

அடையாளம் காணப்பட்ட சில முன்னுரிமைத் துறைகளுக்கு 2023 ஆம் ஆண்டில் கைத்தொழில் அமைச்சினால் ஒழுங்குசெய்யப்பட்ட துறைவாரியான சில அபிவிருத்திக் கூட்டங்களில் TSD அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

### 7.1.6 A & B Solutions (கரைசல்) தயாரித்தலும் விற்பனைசெய்தலும்

மரப்பலகை பரிகரிக்கப்பட்டுள்ளதா என்பதை சோதிப்பதற்காக தொழில்நுட்ப சேவைப் பிரிவினால் A & B Solutions தயாரிக்கப்படுகிறது. இது, மரப்பலகை சார்ந்த கைத்தொழில்துறைக்கு பயன் மிக்கது. இதன்மூலம் பண்ட ஏற்றுமதிக்குப் பயன்படுத்தப்படும் மரப்பலகையாலான பெட்டிகளுக்குரிய தரச் சான்றிதழ்களை எளிதில் பெறலாம். இத்தயாரிப்புக்கான ஆக்கவுரிமை IDB வசமுள்ளது.

### 7.1.7 தேசிய கைத்தொழில் வாரம் - 2023 ஐ பிரகடனப்படுத்துவதற்கு இணையாக IDB விசேட கருத்தரங்கு - "துரித கைத்தொழில் அபிவிருத்தி மூலோபாயங்கள்" பற்றிய கருத்தரங்கு

கைத்தொழில் அபிவிருத்திச் சபையினால் (IDB) 2023 யூன் மாதம் 22-28 வரை பிரகடனம் செய்யப்பட்ட "தேசிய கைத்தொழில் வாரம்-2023' இற்கு இணையாக இலங்கையின் முக்கிய 200 உள்ளூர்க் கைத்தொழிலாளர்களுக்கு கருத்தரங்கொன்று ஒழுங்குசெய்யப்பட்டது. இக்கருத்தரங்கின் மூலம் முக்கிய அரச அதிகாரிகள், கொள்கை வகுப்பாளர்கள், கைத்தொழில் பிரதானிகள் அடங்கிய உயர்மட்டக் குழாமொன்றின் மூலம் கைத்தொழில்களில் நிலவும் பிரச்சினைகளைத் தெளிவுபடுத்திக்கொள்வதற்கு கைத்தொழில்களுக்கு அரங்கொன்று ஏற்பாடுசெய்து கொடுக்கப்பட்டது. மேலும், கைத்தொழில்துறை அபிவிருத்தி பற்றிய அரச திட்டங்களும் இலங்கையின் முதலீட்டு வாய்ப்புகளும் குறித்தும் கலந்துகொண்ட கைத்தொழிலாளர்களுக்கு விழிப்பூட்டப்பட்டது.

கைத்தொழில் அமைச்சர் கௌரவ (வைத்தியர்) ரமேஷ் பத்திரண அவர்களும், இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க அவர்களும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

### 7.1.8 தேசிய மோட்டார் வாகன கருத்தரங்கு - 2023
2035 ஆம் ஆண்டளவில் இலங்கையை ஆசியாவின் மோட்டார் வாகன வழங்கற் சங்கிலியின் மையக்கருவாக மாற்றுதல்

கைத்தொழில் அபிவிருத்திச் சபை (IDB) கைத்தொழில் அமைச்சுடன் இணைந்து 2023 யூலை மாதம் 25 ஆம் திகதி கொழும்பு 'மெரீனோ பீச்' ஹோட்டலில் ஒழுங்குசெய்த தேசிய மோட்டார் வாகன கருத்தரங்கு -

2023 சிறப்பாக நடைபெற்றது. "2035 அளவில் இலங்கையை ஆசியாவின் மோட்டார் வாகன வழங்கற் சங்கிலியின் மையக்கருவாக மாற்றுதல்" என்ற தொனிப்பொருளில் உள்நாட்டு மற்றும் உலகளாவிய அளவுகள் இரண்டியிலும் ஒத்துழைப்பை ஊட்டி வளர்க்கும் அதேவேளை, இலங்கையின் மோட்டார் வாகன மற்றும் வாகன உதிரிப்பாகங்களை உற்பத்திசெய்யும் தொழிற்சாலைகளின் வளர்ச்சிக்கும் அபிவிருத்திக்கும் அவசியமான ஒரு சூழலை உருவாக்கும் நோக்குடன் இவ்வைபவம் நடைபெற்றது. இந்த மாநாட்டின் மூலம் இலங்கையின் மோட்டார் வாகனங்கள் மற்றும் வாகனங்களோடு இணைந்த கைத்தொழிற் துறைகளில் முக்கிய பங்கீடுபாட்டாளர்கள் தமது இலக்கை அடைந்துகொள்வதற்கான பாதையைப் பலப்படுத்திக் கொள்வதற்கு இணைத்துக்கொள்ளப்பட்டனர்.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட கைத்தொழில் அமைச்சர் கௌரவ (வைத்தியர்) ரமேஷ் பத்திரண அவர்கள், மோட்டார் வாகனத் துறைக்கு துணையாக அமையும் அரசாங்கத்தின் அர்ப்பணிப்பை வலியுறுத்திப் பேசினார். போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் கௌரவ அமைச்சர் (கலாநிதி) பந்துல குணவர்தன அவர்கள் இந்நிகழ்வில் சிறப்பு அதிதியொருவராகக் கலந்துகொண்டார்.

"மோட்டார் வாகன கருத்தரங்கு-2023" இலங்கையில் மோட்டார் வாகனத்துறையின் எதிர்காலத்திற்காக பரந்ததொரு வழிகாட்டலை வழங்குவதுடன், கைத்தொழிலின் எதிர்காலத்தை வடிவமைத்துக்கொள்வதற்கு தீர்மானகரமான சில சிபார்சுகளையும் முன்வைத்தது. மூலப்பொருள்களை அல்லது பூர்த்தியற்ற பொருள்களை வழங்குவதற்கு உள்ளூர்க் கைத்தொழில்களை அபிவிருத்திசெய்தல், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி வசதிகளைக்கொண்ட மோட்டார் வாகனங்கள் சார்ந்த நிறுவனமொன்றை நிறுவுதல், பரிசோதனை மற்றும் சான்றுறுதிப்படுத்தும் ஆய்வுகூடம், கைத்தொழிலின் மிக்குயர் பண்புத்தரத்தை உறுதிப்படுத்துவதற்காக சர்வதேச மட்டக்குறிகளுக்கும் பிரமாணங்களுக்கும் அமைய இலங்கையின் தரநியமங்களை வகுத்தல் என்பன மாநாட்டில் கலந்தாலோசித்து பொது உடன்பாடு எட்டப்பட்ட சில விடயங்களாகும்.

### 7.1.9 தேசிய உணவு பானங்கள் கருத்தரங்கு - 2023

**உலக சந்தையில் நோக்கம் ஈடேறப்பெறுவதற்கு இலங்கையின் உணவு பானங்கள் பிரிவைப் பலப்படுத்துதல்**

கைத்தொழில் அபிவிருத்திச் சபையினால் (IDB) கைத்தொழில் அமைச்சு, ஐக்கிய நாடுகள் கைத்தொழில் அபிவிருத்தி அமைப்பின் (UNIDO) DESPA-FOOD கருத்திட்டத்துடன் ஒத்துழைத்து ஐரோப்பிய ஒன்றியத்தின் (EU) பங்களிப்போடு 2023 ஆகஸ்ட் மாதம் 25 ஆம் திகதி தேசிய உணவு பானங்கள் கருத்தரங்கு - 2023 ஒழுங்கு செய்யப்பட்டது. சர்வதேச சந்தையில் இலங்கையின் பதப்படுத்திய, புது விவசாய உற்பத்திகளை முன்னேற்றுவதற்காக வசதியளிப்பதற்கான இக்கருத்தரங்கு கைத்தொழில்துறை சிறப்பு நிபுணர்களையும் கொள்கை வகுப்பாளர்களையும் பங்கீடுபாட்டாளர்களையும் ஒன்றிணைத்தது. கைத்தொழில் அமைச்சர் கௌரவ (வைத்தியர்) ரமேஷ் பத்திரண அவர்கள் இந்நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார்.

### 7.1.10 தேசிய இறப்பர் மற்றும் பிளாஸ்ரிக் கருத்தரங்கு - 2023

**நவீன தொழில்நுட்பத்தின் உதவியோடு இலங்கையில் இறப்பர் மற்றும் பிளாஸ்ரிக் கைத்தொழிலுக்கு தூண்டுதளித்தல்**

கைத்தொழில் அபிவிருத்திச் சபை (IDB) கைத்தொழில் அமைச்சுடனான ஒத்துழைப்போடு 2023 செப்டம்பர் மாதம் 26 ஆம் திகதி தேசிய இறப்பர் மற்றும் பிளாஸ்ரிக் கருத்தரங்கு – 2023 ஐ வெற்றிகரமாக நடாத்தியது. இலங்கையின் இறப்பர் மற்றும் பிளாஸ்ரிக் கைத்தொழில்களை கைத்தொழில்மயமாக்கத்தை இலக்காகக்கொண்ட துறைகளாக அபிவிருத்திசெய்யும் நோக்குடன் "நவீன தொழில்நுட்பத்தின் ஒத்துழைப்போடு இலங்கையின் இறப்பர் மற்றும் பிளாஸ்ரிக் கைத்தொழிலுக்குத் தூண்டுதலளித்தல்' என்ற தொனிப்பொருளில் இந்நிகழ்வு இடம்பெற்றது.

அட்டவணை 7.1 : பிரிவுகளின் வருமானப் பொழிப்பு - 2023

| இல. | செயற்பாடு | வருமானம் (ரு) |
|---|---|---|
| 01 | தொழில்நுட்பப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்/ செயலமர்வுகள்/ செய்துகாட்டல்கள் | 19,616,000.00 |
| 02 | கைத்தொழில்கள்/ அமைப்புக்கள்/ நிறுவனங்களின் கோரிக்கையின் பேரில் வடிவமைக்கப்பட்ட பிரிவுகளை அடிப்படையாகக்கொண்ட தொழில்நுட்பப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் | 241,712.00 |
| 03 | கைத்தொழில் சான்றிதழ் பயிற்சிப் பாடநெறிகள் | 1,370,000.00 |
| 04 | மூங்கில மரம் பதனிடல் தொழில்நுட்பம் பற்றிய விழிப்பூட்டல்கள்/ தொழில்நுட்பப் பரிமாற்ற நிகழ்ச்சித் திட்டங்கள் | 56,520.00 |
| 05 | உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுத் தொழில்நுட்பங்களை கொள்ளலும் பரப்பீடு செய்தலும் | 284,500.00 |
| 06 | நுண்ணுயிரி ஆய்வுகூடத்தில் உணவு மாதிரிகளின் சோதனை | 8,716,570.13 |
| 07 | பகுப்பாய்வு ஆய்வுகூடத்தில் உணவு மாதிரிகளின் சோதனை | 89,661.70 |
| | **மொத்தம்** | **30,374,963.83** |







அட்டவணை 7.2 : வருடாந்த உள்ளபடியான வருமான ஒப்பீடு (2019-2023)

| ஆண்டு | உள்ளபடியான வருமானம் (ரூ) |
|---|---|
| 2019 | 18,607,832 |
| 2020 | 8,107,910 |
| 2021 | 3,788,750 |
| 2022 | 20,071,900 |
| 2023 | 30,374,963 |



உருவரை 7.1 : வருடாந்த உள்ளபடியான வருமான ஒப்பீடு

## 8) சந்தைப்படுத்தல் பிரிவு

பண்டங்களையும் சேவைகளையும் மேம்படுத்தும் அதேபோல் நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவான கைத்தொழிலாளர்களுக்கு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சந்தையில் போட்டியிட வசதியை ஏற்படுத்திக் கொடுக்கும் பொறுப்பு IDB சந்தைப்படுத்தல் பிரிவுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேலும், சந்தைப்படுத்தல் மூலோபாயங்களை நிறுவுவதற்கு கைத்தொழில்களை அல்லது MSMEsகளை ஊக்குவிப்பதற்கும் அபிவிருத்திசெய்வதற்கும் சந்தைப்படுத்தல் உதவியும் மதியுரைச் சேவைகளும் இப்பிரிவினால் வழங்கப்படுகிறது.

### 8.1 பிரிவினால் ஆற்றப்படும் சேவைகள்

- கைத்தொழில் கண்காட்சிகளை ஒழுங்குசெய்தலும் நடாத்துதலும்/ தேசிய கண்காட்சிகளிலும் வர்த்தகக் கண்காட்சிகளிலும் பங்குபற்றுதலும்.
- நாடெங்குமுள்ள தெரிவுசெய்யப்பட்ட நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவான தொழில்முனைவோருக்கு/ கைத்தொழிலாளர்களுக்கும் சுயதொழில்புரிவோருக்கும் தேசிய விருது விழாவை ஒழுங்குசெய்தல்.
- ''லக்கம்'' விற்பனை நிலையத்தின் விற்பனை வசதிகளை வழங்குதல்.
- உப ஒப்பந்தப் பரிமாற்றங்களுக்கான வசதிகளை வழங்குதல்.
- வார்ப்பட, இலகு பொறியியல், கொல்லர் மற்றும் ஏனைய உலோக வார்ப்பட மற்றும் கைவினைக் கைத்தொழில்களில் ஈடுபட்டிருக்கும் கைத்தொழிலாளர்களுக்கு சகாய விலையின் கீழ் மூலப்பொருள்களை/ உடைந்த உலோக துண்டுப்போருள்களை வழங்குதல்.
- கைத்தொழில்களை/ MSMEsகளை ஊக்குவிப்பதற்கும் அபிவிருத்தி செய்வதற்கும் சந்தைப்படுத்தல் உதவியையும் உசாவுகைச் சேவைகளையும் வழங்குதல்.

### 8.2 சந்தைப்படுத்தல் உதவி

''லக்கம்'' விற்பனை நிலையத்தின் ஊடாக கைத்தொழிலாளர்களுக்கு சந்தைப்படுத்தல் ஆதரவை வழங்குவதற்கு சந்தைப்படுத்தல் பிரிவு அர்ப்பணிப்புடன் செயலாற்றுகிறது.

**''லக்கம்'' விற்பனை நிலையம்**: மரபு ரீதியான இலங்கை உற்பத்திகள் ''லக்கம்'' தரக் குறியீட்டின் கீழ் உள்நாட்டு மற்றும் சர்வதேச சந்தைக்குள் பிரவேசிக்கின்றன. கடந்த மூன்று தசாப்த காலத்தினுள் கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் ''லக்கம்'' விற்பனை நிலையம் நாடெங்கும் பரந்துள்ள சிற்றளவு கைத்தொழிலாளர்களினால் உற்பத்தி செய்யப்படும் பாரம்பரிய மற்றும் ஏனைய உற்பத்திகளின் முன்னணி விற்பனையாளரொருவராக சேவையை வழங்கியுள்ளது. இந்த உற்பத்திகள் பாரம்பரியமான கலவைச் சரக்கைக் கூட்டும் முறைகளின் கீழ் தயாரித்த உணவு உற்பத்திகள், பாரம்பரியமான மருந்து உற்பத்திகள், SME இயந்திர சாதனங்கள், கைத்தறி மற்றும் பாரம்பரிய ஆடை மற்றும் கைவினைக் கைத்தொழில்கள், அலங்காரப் பண்டங்கள் என்ற வகுதிகளின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

சிறிய மற்றும் நடுத்தர அளவான உற்பத்தியாளர்களின் விற்பனை செய்யக்கூடிய உற்பத்திகளை அடையாளம் கண்டு அவற்றை ஊக்குவித்தலும், சுமக்கக்கூடிய விலையில் ஒரே இடத்தில் அவற்றை விற்பனைசெய்வதற்கு வாய்ப்பை ஏற்படுத்திக்கொடுப்பதும் ''லக்கம்'' சந்தைப்படுத்தல் நிலையத்தின் நோக்கமாகும்.

### 8.3 உசாவுகை

பொதுவாக, மிகவும் கிரய பயனுறுதிவாய்ந்த மூலோபாயங்கள் நீண்டகாலத்திற்கு திட்டமிடப்பட்டவையாகும். இது தவிர பிராந்திய மூலோபாயத் திட்டங்கள் நிறுவனத்தின் ஒட்டுமொத்த மூலோபாயத் திட்டங்களுடனும் ஏனைய பிரிவுகளின் திட்டங்களுடனும் ஒன்றிப்பானதாதல் வேண்டும். அதன்படி, சந்தை மற்றும் போட்டிநிலை தொடர்பில் கம்பனியின் நிலைப்பாட்டை அறிந்துகொள்வது முக்கியமானதாகும். ஆகையால், சந்தைப்படுத்தல்

பிரிவினால் சந்தை அறிக்கைகளை எழுதுதல், சந்தை அளவைகளை நடாத்துவதற்கு அடையாளம் காணப்பட்ட சாத்தியமான உற்பத்திகள் பற்றிய சந்தை சாத்தியவள அறிக்கைகளைத் தயாரிப்பதற்கு வசதியளித்தல், கோரிக்கையின் பேரில் உற்பத்திகளின் தரம், சந்தைப் பெயர், பொதியிடல், சந்தை பற்றிய தகவல்களை முன்னேற்றுவதற்காக மதியுரைகளை வழங்குவதற்கு தொடர்புபடுகின்றன. மேலும், புதிய சந்தை அபிவிருத்தி பற்றி அவ்வப்போது செயலமர்வுகளை ஒழுங்குசெய்தல், கைத்தொழில் அளவைகளை மேற்கொள்ளல், அடையாளம் காணப்பட்ட கட்புலனாகும் உற்பத்திகள் பற்றிய சந்தை சாத்தியவள அறிக்கைகளைத் தயாரித்தல் என்பன மேற்கொள்ளப்பட்டன.

## 8.4 சந்தைப்படுத்தல் ஊக்குவிப்பு

மூலவாய்ப்புவளமுள்ள வாடிக்கையாளர்களை நெருங்குவதற்கு, அவர்களைக் கவர்வதற்கு மற்றும் அவர்களுடன் இடைத்தொடர்புகளைப் பேணுவதற்கு, கைத்தொழிலாளர்களுக்கு வசதியளிப்பதற்கு மாவட்ட, மாகாண மற்றும் தேசிய ரீதியில் நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவான தொழில்முனைவோருக்கான கண்காட்சிகளை IDB ஒழுங்கு செய்கிறது.

மேலும், வெளிநிலை அமைப்புகளினால் ஒழுங்குசெய்யப்பட்ட கண்காட்சிகளில் IDB பங்கேற்பதுடன், கைத்தொழில் கண்காட்சிகளில் பங்கேற்பவர்களுடன் தொடர்புகளைக் கட்டியெழுப்பிக் கொள்கிறது. தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் பங்கேற்பவர்களுடன் வாங்குநர்-விற்பவர் கூட்டங்களை நெறிப்படுத்துவதற்கும் அத்துடன் கைத்தொழிலாளர்களை ஊக்குவிப்பதற்கும் தேசிய, மாகாண மற்றும் மாவட்ட மட்டத்தில் பிரிவுகளின்படி போட்டிகளையும் செயற்பாடுகளையும் மேற்கொள்வது மற்றுமுண்டான சந்தைப்படுத்தல் ஊக்குவிப்புச் செயற்பாடுகளில் சிலவாகும்.

**அட்டவணை 8.1 : முன்னேற்றப் பொழிப்பறிக்கை - 2023**

| செயற்பாட்டு இல. | செயற்பாடு | செயலாற்றுகைக் குறிகாட்டி | பௌதிக முன்னேற்றம் திரண்ட |
|---|---|---|---|
| 1 | கைத்தொழில்களுக்கான மூலப்பொருள்களை வழங்குதல் | கைத்தொழில்களின் எண்ணிக்கை | 401 |
| | | மின்மாற்றிகளின் எண்ணிக்கை | 210 |
| | | அளவு (மெட்ரிக் தொன்) | 598 |
| 2 | "லக்கம்" காட்சியறைகளின் ஊடாக சந்தை வாய்ப்புகளை வழங்குதல் | கைத்தொழில்களின் எண்ணிக்கை/ வழங்கப்பட்ட வாய்ப்புகளின் எண்ணிக்கை | 11 |
| 3 | வேறு நிறுவனங்களினால் ஒழுங்கு செய்யப்படும் வர்த்தக சந்தைகளிலும் கண்காட்சிகளிலும் பங்கேற்றல் | பங்கேற்ற வர்த்தக சந்தைகளின்/ கண்காட்சிகளின் எண்ணிக்கை | 4 |
| 4 | கைத்தொழில் கண்காட்சிகளை ஒழுங்குசெய்தலும் நடாத்துதலும். | கைத்தொழில்களின் எண்ணிக்கை | 1 |

**அட்டவணை 8.2 : பிரிவின் திரண்ட நிதிசார் முன்னேற்றம்**

| செயற்பாட்டு இலக்கம் | செயற்பாடு | செயலாற்றுகைக் குறிகாட்டி | செயலாற்றுகை |
|---|---|---|---|
| 1 | கைத்தொழில்களுக்கு மூலப்பொருள்களை வழங்குதல் | அளவு (மெட்ரிக் தொன்) | 165,166,000 |
| 2 | "லக்கம்" காட்சியறையின் ஊடாக சந்தை வாய்ப்புகளை வழங்குதல் | (விற்பனை வருமானம்) | 21,987,856 |
| | **மொத்தம் (ரு)** | | **187,153,856** |


உருவரை 8.1 : உள்ளபடியான வருமான ஒப்பீடு
வருமானம் (மி.ரூ.)
400
350
300
250
200
150
100
50
0
2019
2020
2021
2022
2023
உள்ளபடியான வருமானம் (மி.ரூ.)
.)
281.1
259.6
272.3
361.9
187.2

# 9) இறப்பர் உற்பத்திகள் அபிவிருத்தி மற்றும் சேவை நிலையம்

## 9.1 அறிமுகம்

உள்நாட்டு இறப்பரை அடிப்படையாகக்கொண்ட கைத்தொழில்களுக்கு, குறிப்பாக SMI களுக்கு உதவுமுகமாக உலக வங்கியின் ஆலோசனை மற்றும் நிதியுதவியின் கீழ் 1980 ஆம் ஆண்டில் பேலியகொட இறப்பர் உற்பத்திகள் அபிவிருத்தி மற்றும் சேவை நிலையம் (RPD & SC) ஆரம்பிக்கப்பட்டது. அதுமுதல் இந்நிலையம் உள்நாட்டு இறப்பர் உற்பத்திகளைத் தயாரிப்பவர்களுக்கு சேவைகளை வழங்குகிறது. நிரந்தர வாடிக்கையாளர்களான நீண்டகால இறப்பரை ஆதாரமாகக்கொண்ட சுமார் 200 கைத்தொழிலாளர்கள் எமது கீழ்க்காணும் சேவைகளைப் பெற்றுக்கொள்கின்றனர்.

- உற்பத்தி மற்றும் செயன்முறை அபிவிருத்தி.
- சோதனை வசதிகளும் தரச் சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்ளல்.
- தொழில்நுட்ப மதியுரை மற்றும் விரிவாக்கல் சேவைகளை வழங்குதல்.
- பகுதியளவு வர்த்தக சேவைகளை வழங்குதல்.
- கல்வி, ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனங்களுக்கும் கைத்தொழில்களுக்கும் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

**அட்டவணை 9.1 : 2023 ஆம் ஆண்டில் நிலையத்தின் செயலாற்றுகை**

| | சேவைகள் | அளக்கும் குறிகாட்டி | எண்ணிக்கை |
|---|---|---|---|
| அ) | தொழில்நுட்பப் பரிமாற்றம்<br>1. பிரயோக ரீதியாக செய்துகாட்டல்கள்<br>2. செயலமர்வுகள்: இறப்பர் கயிறு தயாரிப்பு பற்றி அறிவுறுத்தும் நிகழ்ச்சித்திட்டங்கள் | நிகழ்ச்சித்திட்டங்களின்/ சேவைநாடிகளின் எண்ணிக்கை | (15/50)<br>01 |
| ஆ) | சோதனை வசதிகள் (ஏற்றுமதிச் சந்தைக்கு இறப்பர் உற்பத்தி செய்யும் கைத்தொழிலாளர்களுக்கான பரிசோதனை வசதிகளை வழங்குவது இதில் அடங்கும்.) | சோதனை அறிக்கைகளின் எண்ணிக்கை | 168 |
| இ) | உற்பத்தியும் செயன்முறை அபிவிருத்தியும் | வேலைகளின் எண்ணிக்கை | 18 |
| ஈ) | இறப்பர் சார் உற்பத்திகளும் உற்பத்திச் செயன்முறையின் தரத்தை மேம்படுத்தல் பற்றிய உசாவுகையும் | வேலைகளின் எண்ணிக்கை | 10 |

## 9.2 அபிவிருத்திச் செயற்பாடுகள்

2023 ஆம் ஆண்டில் பின்வரும் சேர்மானங்களை உருவாக்குதலும் அபிவிருத்தி செய்தலும், தர மேம்பாடு, உற்பத்தி அபிவிருத்தி நடவடிக்கைகள் என்பவற்றை முடிக்கும் பணி நிலையத்தினால் மேற்கொள்ளப்பட்டது.

| (அ) | **சேர்மானங்களை திட்டமிட்டு வடிவமைத்தலும் அபிவிருத்தி செய்தலும்** |
|---|---|
| | **விசேட வேலைகளுக்காக மேற்கொள்ளப்பட்ட உற்பத்திகள்** |
| i | குறைந்த தடிப்புள்ள பொலித்தீனுடன் முடி கலந்த சேர்மானம் (LDPE/Hair Fiber compound) |
| ii | அதிர்வுகளுக்கும் தாக்குப்பிடிக்கக்கூடிய புஷ் (Vibration Bush) |
| iii | இறப்பர் தடையி (Rubber Damper) |
| iv | இயந்திரங்களுக்குப் பயன்படுத்தப்படும் இறப்பர் கெஸ்கெற் (Rubber gasket machine application) |
| v | சேற்றுச் சில்லு (Mud wheel) |
| vi | நிரப்பும் இயந்திர மூடி (Filling machine guard) |
| vii | சாடிகளுகளுக்குப் பயன்படுத்தப்படும் அடைப்பு (Jar Seal) |
| viii | நீர் அடைப்பு (Water seal) |
| (ஆ) | **தர முன்னேற்றச் செயற்பாடுகள் - 168 சான்றிதழ்கள்** |
| | **விசேட உற்பத்திகள்** |
| i | ஹொக்கீ ஆட்டத்திற்கான மடிப்பமைப்பு மட்டை (Hockey puck) |
| ii | இறப்பர் ரெயில் பேட் (Rail Pad) |
| iii | தேய்வடைவதற்கு தாக்குப்பிடிக்கும் பேட் (Bearing Pad) |
| iv | Cow mat |
| v | Tread Compound |
| vi | Tube compound |
| vii | இறப்பர் பீடிங் பட்டி (Rubber Beadings Fenders) |
| ix | (குஷன் ஒட்டுவதற்கான பசை (Cushion gum) |
| (இ) | **பிரதான உற்பத்தி அபிவிருத்தி வேலைகள்** |
| | **உற்பத்திகள்** |
| i | றயர் பட்டி (Tyre tread liner) |
| ii | சப்பாத்து அடி (Baby shoe sole) |
| iii | பாதுகாப்புக் கோப்பை (Manses cup) |
| iv | முச்சக்கர வண்டி எக்சல் ஆணிக்குரிய இறப்பர் குமிழ் (Rubber Knob for three-wheel axel) |
| v | இறப்பர் சக்கரம் (Rubber wheel) |
| vi | ஸ்பொஞ்சு சப்பாத்து அடி (Sponge sole) |
| vii | பெரிய இறப்பர் புஷ் (Large rubber Bush) |
| viii | ஜெக் சீல் (Jack seal) |

புதிய தொழில்முயற்சிகளை ஊக்குவிப்பதற்கும் தற்போதுள்ள தொழில்முயற்சிகளினால் உற்பத்தி செய்யப்படும் உற்பத்திகளின் தரத்தை அதிகரிப்பதற்காக உலர் இறப்பர் மற்றும் இறப்பர் மரப்பால் சார்ந்த உற்பத்திகள் பற்றிய 15 தொழில்நுட்ப மாதிரிகளும் 01 செயலமர்வும் நிலையத்தினால் நடாத்தப்பட்டுள்ளது.

### 9.3 வருடாந்த வருமானம்

கீழ்க்காணுமாறு பிரதான நான்கு துறைகளின் கீழ் வருடாந்த வருமான உருவாக்குகைக்கு நிலையத்தின் செயற்பாடுகள் உதவின. ஆண்டினுள் இந்நிலையம் சுயமாக நிதியை ஏற்பாடுசெய்யும் அலகொன்றாக மாறும் நோக்கை எய்துமுகமாக திருப்திகரமாக முன்னேற்றமொன்றை அடைந்துகொண்டுள்ளது. தொழில்நுட்ப மற்றும் வர்த்தக செயற்பாடுகளின் மூலம் 36.2 மி.ரு. வருமானம் ஈட்டப்பட்டுள்ளது. பண்ட உற்பத்தியும் விற்பனையும் பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

| | அளவு (கி.கி.) | விற்பனைப் பெறுமதி (ரு) | மொத்தம் (ரு)) |
|---|---|---|---|
| **விற்பனைகள்** | | | |
| **பகுதியளவான வர்த்தக செயற்பாடு** | 41,581 | 35,518,178 | |
| | | | **35,518,178** |
| **சேவைகள்** | | | |
| i. விரிவாக்கல் மற்றும் உசாவுகை (302) (செய்துகாட்டல்/ செயமலர்வு/ உப ஒப்பந்தம்) | | 160,000 | |
| ii. தரக் கட்டுப்பாடும் ஆய்வுகூடப் பரிசோதனையும் | | 429,988 | |
| iii. உற்பத்தி அபிவிருத்தி | | 130,076 | **720,064** |
| **மொத்தம்** | | | **36,238,242** |

உருவரை 9.1 : வருடாந்த உள்ளபடியான வருமான ஒப்பீடு (ரு.மி.)



## 10) தோல்பொருள் உற்பத்தி மற்றும் பாதணிகள் அபிவிருத்தி நிலையம்

### 10.1 அறிமுகம்

இலங்கையின் தோல்பொருள் உற்பத்தி மற்றும் பாதணிக் கைத்தொழிலின் முன்னேற்றத்திற்காக தோல்பொருள் உற்பத்திகள் மற்றும் பாதணிகள் அபிவிருத்தி நிலையம் 1998 இல் ஆரம்பிக்கப்பட்டது. இந்நாட்டின் தோல்பொருள் கைத்தொழிலின் அபிவிருத்திக்கு இருக்கின்ற பாரிய உள்ளார்ந்த ஆற்றலை கவனத்திலெடுத்து, இந்த நிலையத்தினால் பாதணிகள் மற்றும் தோல்பொருள் பிரிவின் குறுகியகால, நீண்டகால பாடநெறிகள் நடாத்தப்படுவதுடன், பயிற்றப்பட்ட உழைப்பாளர்கள், சம்பந்தப்பட்ட தகவல்கள் மற்றும் பண்ட உற்பத்திக்கு வசதியளித்தல் முதலியன மேற்கொள்ளப்படுகிறது. மேலும், தோல்பொருள் உற்பத்தி மற்றும் பாதணிகள் பிரிவில் இருக்கின்ற கைத்தொழிலாளர்களுக்கு பொதுவான சேவை வசதிகளை வழங்குவதுடன், ஏற்றுமதிக்காக தரமான உற்பத்திகளை தயாரிக்கும் தொழில்நுட்பமும் பயிற்சியும் இந்த நிலையத்தினால் வழங்கப்படுகிறது. கட்டுபெத்த தலைமை அலுவலகத்தின் (CDLPF) ஊடாகவும் வாரியப்பொல பிரதேச நிலையத்தின் ஊடாகவும் இவ்வனைத்துச் சேவைகளும் வழங்கப்படுகின்றன.

**நிலையத்தினால் வழங்கப்படும் சேவைகள்**

- பாதணிகள் மற்றும் தோல்பொருள்கள் பற்றிய தொழில்நுட்ப பரிமாற்று பயிற்சிப் பட்டறைகளை ஒழுங்குசெய்தல்.
- பாதணிகளின் வடிவாக்கத்தையும் உருவமைப்பையும் தயாரிக்கும் (Design and Pattern Making) பயிற்சி.
- வர்த்தகம் மற்றும் இயந்திர உபகரணங்கள் பற்றிய தகவல்களை வழங்குதல்.
- சீர்வெப்ப இன்கியூபேட்டர் வசதியை வழங்குதல்.
- கைத்தொழில்களுக்கான பயிற்றப்பட்ட உழைப்பு.
- அரச மற்றும் தனியார் துறைக்கு இடையில் தொடர்புகளை ஏற்படுத்துவதற்கு உதவுதல்.
- இயந்திர உபகரண சேவைகளையும் பதனிடல் வசதிகளையும் வழங்குதல்.
- விற்பனை மற்றும் ஊக்குவிப்பு நிகழ்ச்சிகளை ஒழுங்குசெய்தல்.
- கொள்கை வகுப்பின்போது பாதணிகள் பிரிவைப் பிரதிநிதித்துவப்படுத்தல்.

### 10.2 2023 ஆம் ஆண்டிற்கான விசேட நடவடிக்கைகள்

1) அமைச்சுக்கள், மாகாண சபைகள் மற்றும் கலந்துகொள்பவர்களின் நிதிப் பங்களிப்பு மூலம் நாடுபூராவும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் ஒழுங்குசெய்யப்பட்டன.

அ) பாதணி உற்பத்தி பற்றிய 12 அடிப்படைப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் ஒழுங்குசெய்யப்பட்டன. பாதணி உற்பத்திப் பிரிவுக்காக 135 தொழில்முனைவோருக்கு பயிற்சியளிக்கப்பட்டது.

ஆ) கைப்பை உற்பத்தி சம்பந்தமான 03 அடிப்படைப் பயிற்சிகள் ஒழுங்குசெய்யப்பட்டன. கைப்பை உற்பத்திப் பிரிவுக்காக 34 தொழில்முனைவோருக்கு பயிற்சியளிக்கப்பட்டது.

இ) ஏனைய தோல் உற்பத்திகள் பற்றிய 03 பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தி 40 தொழில்முனைவோருக்கு பயிற்சியளிக்கப்பட்டது.

ஈ) தனிப்பயனாக்கிய 04 பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தி 68 கைத்தொழிலாளர்களுக்கு பயிற்சியளிப்பதன் மூலம் ரூ.1,941,444/- தொகை ஈட்டப்பட்டுள்ளது.

உ) மேற்குறித்த நிகழ்ச்சித்திட்டங்களின் ஊடாக துறையில் புதுமுகங்களின் திறமைகள் வளர்க்கப்பட்டுள்ளது. அதன்மூலம ரூ.2,824,052 வருமானமொன்று ஈட்டப்பட்டுள்ளது.

ஊ) 4 தர மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தி பாதணி வடிவமைப்பாளர்களின் திறமைகளை மேம்படுத்துவதற்காக துறையிலுள்ள 77 பேருக்கு பயிற்சியளித்து ரூ.852,155/- தொகை ஈட்டப்பட்டுள்ளது.

எ) மேற்குறித்த பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களின் மூலம் ஆண்டுபூராவுமுள்ள மொத்தம் 276 பேர் பயிற்சிகளைப் பெற்றுள்ளனர்.

2) பாதணிகள் மற்றும் தோல்பொருள் கைத்தொழிலும் அரசாங்கத்துடன் ஒருங்கிணைப்பும். இதன் கீழ் இறக்குமதிக் கொள்கைகளை உருவாக்குதல், செஸ் வரித் திருத்தம், வரவுசெலவுத்திட்டம் போன்ற நடவடிக்கைகளில் தலையிடுதல். பாதணிகள் மற்றும் தோல்பொருள் உற்பத்தியாளர்களின் சங்கத்துடனும் வயம்ப பாதணிகள் மற்றும் தோல்பொருள் உற்பத்தியாளர்கள் சங்கத்துடனும் செயலூக்கமுடன் செயலாற்றுதல்.

3) இன்றைய மூலப்பொருள் பற்றாக்குறைக்கும் அதிகரிக்கும் விலைக்கும் பதிலாக, பாதணிகள் மற்றும் தோல்பொருள் உற்பத்தியாளர்கள் சங்கத்தின் சிபார்சின் பேரில் IDB இனால் இந்திய கடன் மார்க்கத்தின் ஊடாக மூலப்பொருள்களை இறக்குமதிசெய்வதற்கு இறக்குமதியாளர் ஒருவருக்குத் தேவையான ஒருங்கிணைப்பு வழங்கப்பட்டது.

4) இந்திய அரசினால் அமோனியம் சல்பேற்று (Ammonium Sulphate) ஏற்றுமதிசெய்வது தடை செய்யப்பட்டதன் காரணமாக உள்ளூர் தோல் பதனிடல் கைத்தொழில் (Tannery industry) பாரிய நெருக்கடியைச் சந்தித்தது. ஆதலால், தாய்லாந்திலிருந்து அமோனியம் சல்பேற்றை இறக்குமதி செய்வதற்கு தனியார் துறையின் ஒத்துழைப்பு பெறப்பட்டது. இலங்கையில் தோல் பதனிடல் பிரிவுக்கு நீண்டதொரு வரலாறுள்ளது. உள்ளூர் உற்பத்தியாளர்களினால் உலகின் அங்கீகாரம் பெற்ற மட்டத்தில் சிறந்த, பூர்த்தியான தோல்பொருள்கள் பதனிடப்படுகின்றன. 1980 தசாப்தம் முதல் அவர்கள் அனைத்து தோல்பொருள் உற்பத்தியாளர்களுக்கும் தமது உற்பத்திகளுக்குப் பொருத்தமான ஓரிடத்தைத் தேடி வந்தனர். IDB இதில் தலையிட்டு வாழைச்சேனை பிரதேசத்தில் காணித்துண்டுகளை விடுவித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்து வருகிறது.

5) சமகால நிலைமைகள் பற்றிய அறிவைப் பரிமாறிக்கொள்வதற்கு குறித்த சங்கங்களுடன் அடிக்கடி கூட்டங்கள் ஒழுங்கு செய்யப்பட்டன.

6) பாதணி மற்றும் தோல்பொருள் தேவைகளைக் கொள்வனவுசெய்வதற்கு பல்வேறு அரச நிறுவனங்களின் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுக்களில் (TECs) பங்கேற்றல்.

7) அழகியல் பல்கலைக்கழகத்திலும் மொறட்டுவைப் பல்கலைக்கழகத்திலும் நவீன பாணியிலான வடிவமைப்பாக்க பாடத்திட்டத்தை (Fashion Designing Curriculum) கற்கும் மாணவர்களின் இறுதியாண்டு கருத்திட்டத்திற்கு வசதியளித்தல்.

8) கைத்தொழிலாளர்களுக்குத் தேவைப்படும் இயந்திர சேவை வசதிகளை வழங்குவதன் மூலம் அவர்களின் உற்பத்தித் தரத்தை முன்னேற்றுதலும், உற்பத்தி இயலளவை அதிகரித்தலும். குறித்த காலப்பகுதியில் மாதாந்தம் 147 கைத்தொழிலாளர்களுக்கு சேவைகள் வழங்கப்பட்டுள்ளன. அதன்மூலம் ரூ.290,212 தொகை வருமானமீட்டப்பட்டது.

9) கைத்தொழிலுக்குத் தேவைப்படும் ஆட்களும் நிறுவனங்களும் பற்றிய தகவல்களைச் சேகரித்தலும் பராமரித்தலும். இதன் ஊடாக தேவையான ஆட்களுக்கு உரிய தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும். 540 நிறுவனங்களின்/ஆட்களின் தகவல் முறைமையொன்று இற்றைப்படுத்தப்பட்டு வருகிறது.

10) இலங்கை தொழில்நுட்பக் கல்லூரிகளில் கற்கும் மாணவர்களின் அரையாண்டு மற்றும் ஆண்டிறுதிப் பரீட்சைகளுக்கு உரிய வினாத்தாள்களைத் தயாரித்தலும் விடைத்தாள்களைப் பரிசோதித்தலும்.

11) RPL ஊடாக தேசிய தொழில் தகைமைகளை (NVQ சான்றிதழ்) பெற்றுக்கொள்வதற்கு தொழில் முயற்சியாளர்களுக்கு வசதியளிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் 18 பேர் NVQ சான்றிதழ் பெற்றுக் கொண்டனர்.

12) 2023 ஆம் ஆண்டில் நிலையம் ரூ.6,377,412.00 மொத்த வருமானமீட்டியது.

## 10.3 பிரிவின் நிதிசார் முன்னேற்றம்

அட்டவணை 10.1 : 2023 ஆம் ஆண்டின் முன்னேற்றப் பொழிப்பு

| இல. | செயற்பாடு | நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை | பயனாளிகளின் எண்ணிக்கை | நிதிசார் முன்னேற்றம் (ரூ) |
|---|---|---|---|---|
| 1 | **புதிய தொழில்முயற்சிகளின் உருவாக்கம்** | | | |
| 1.1 | பாதணித் தொழில்நுட்பப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல் | 12 | 135 | 1,658,292 |
| 1.2 | கைப்பை உற்பத்தித் தொழில்நுட்பப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல் | 3 | 34 | 855,760 |
| 1.3 | தோல் பாண்ட தொழில்நுட்பப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல் | 3 | 40 | 310,000 |
| 2 | **தற்போதுள்ள கைத்தொழில் முயற்சிகளை ஊக்குவித்தல்** | | | |
| 2.1 | தர மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல் | 4 | 77 | 852,155 |
| 2.2 | **கைத்தொழிலாளர்களுக்கு பதனிடல் வசதிகளை வழங்குதல்** | | 147 | 290,212 |
| 2.3 | தொழில்முயற்சியாளர்கள்/ கைத்தொழிலாளர்கள்/ வெளிநிலை ஒழுங்கமைப்புகளுக்கு தயார்செய்த பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல் | 4 | 68 | 1,941,444 |
| 3 | **விசேட சேவைகள்** | | | |
| 3.1 | பாதணி வர்த்தகக் கண்காட்சியை ஒழுங்குசெய்தலும் நடாத்துதலும் | 1 | | 469,549 |
| | **மொத்தம்** | | | **6,377,412** |

உருவரை 10.1 : பிரிவின் நிதிசார் முன்னேற்றம்



**அட்டவணை 10.2 : உள்ளபடியான வருமானத்தின் வருடாந்த ஒப்பீடு**

| ஆண்டு | **VAT, NBT** ஆகியன நீங்கலான உள்ளபடியான வருமானம் (ரூ) |
|---|---|
| 2019 | 6,476,884 |
| 2020 | 5,200,839 |
| 2021 | 4,892,789 |
| 2022 | 3,200,136 |
| 2023 | 6,377,412 |




உருவரை 10.2 : வருடாந்த வருமான ஒப்பீடு

# நிதிசார் மீளாய்வு

1. விரிவான நிதிநிலைக் கூற்று
2. விரிவான வருமானக் கூற்று
3. உரிமை மாற்றக் கூற்று
4. காசுப்பாய்ச்சல் கூற்று
5. முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்களும்

# இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபை
**விரிவான நிதிநிலைக் கூற்று**
**2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கானது.**

(அனைத்துத் தொகைகளும் இலங்கை ரூபாவில் காட்டப்பட்டுள்ளன.)

| | குறிப்பு | 2023 | 2022 மீள வெளிப்படுத்திய |
|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | |
| **நடைமுறை அல்லாத சொத்துக்கள்** | | | |
| ஆதனங்கள், பொறித்தொகுதிகள் மற்றும் சாதனங்கள் | **14** | 514,399,739 | 502,155,629 |
| முதலீட்டு ஆதனம் | **15** | 1,199,665,852 | 1,184,286,002 |
| நடைபெற்றுவரும் மூலதன வேலை | **16** | 58,024,100 | 38,614,504 |
| | | **1,772,089,691** | **1,725,056,135** |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | |
| பண்டங்கள் கையிருப்பு | **17** | 78,085,026 | 46,718,615 |
| வர்த்தக மற்றும் பிற கிடைத்தற்பாலன | **18** | 39,999,292 | 23,567,675 |
| பிற நடைமுறைச் சொத்துக்கள் | **19** | 57,899,539 | 45,914,025 |
| வைப்புக்களும் முற்கொடுப்பனவுகளும் | **20** | 126,763,984 | 78,001,365 |
| கிடைக்கப்பெற வேண்டியவை - விசேட கருத்திட்டங்கள் | **21** | 14,629,625 | 9,348,448 |
| காசும் காசுக்கு நிகரானவையும் | **22** | 423,674,387 | 343,300,457 |
| | | **741,051,852** | **546,850,584** |
| **மொத்த சொத்துக்கள்** | | **2,513,141,544** | **2,271,906,719** |
| **உரிமையாண்மையும் பொறுப்புக்களும்** | | | |
| **மூலதனமும் ஒதுக்குகளும்** | | | |
| பிற்போடப்பட்ட மூலதனக் கொடைகள் | **23** | 314,264,535 | 258,785,672 |
| மூலதன ஒதுக்குகள் | | 6,243,013 | 6,243,013 |
| உரிமைமாற்றப்பட்ட சொத்துக்களின் பெறுமதி | **24** | 13,447,061 | 13,447,061 |
| நிலையான சொத்து மீள்கணிப்பீடு மீதான மிகை | **25** | 960,696,320 | 960,696,320 |
| பிற்போடப்பட்ட கொடை - மூலதனக் கருத்திட்டங்கள் | **26** | 643,854,473 | 581,577,397 |
| | | **1,938,505,402** | **1,820,749,463** |
| திரண்ட நட்டங்கள் | **27** | (32,682,441) | (60,791,523) |
| **மொத்த உரிமையாண்மை** | | **1,905,822,961** | **1,759,957,940** |
| **நடைமுறை அல்லாத பொறுப்புக்கள்** | | | |
| பணிக்கொடை ஏற்பாடுகள் | **28** | 188,634,080 | 206,829,087 |
| விசேட கருத்திட்டங்களுக்கான கொடைகள் | **29** | 30,630 | 661,300 |
| | | **188,664,710** | **207,490,387** |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | | | |
| அரசுக்குச் செலுத்த வேண்டிய நிலுவைகள் | **30** | 40,994 | 54,929 |
| கூட்டுத்தாபனத்துக்கு செலுத்த வேண்டிய நிலுவைகள் | **31** | 15,060,823 | 7,759,526 |
| திரண்ட செலவுகளும் ஏற்பாடுகளும் | **32** | 403,552,056 | 296,643,936 |
| | | **418,653,873** | **304,458,392** |
| **மொத்த உரிமையாண்மையும் பொறுப்புக்களும்** | | **2,513,141,544** | **2,271,906,719** |

பக்க இல. 05 முதல் 33 வரையுள்ள கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் குறிப்புகள் இந்நிதிக்கூற்றுக்களின் கட்டமாயமான ஓர் அங்கமாகும்.

சபையின் நிதிக்கூற்றுக்களினால் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலைமையும் அன்றைய தினம் முடிவடைந்த காலப்பகுதிக்கான அதன் மிகை பற்றிய உள்ளபடியானதும் நியாயமானதுமான நோக்கொன்று வழங்கப்படுகிறது என்பதை அத்தாட்சிப்படுத்துகின்றேன்.

ஜே.எம்.ஆர்.எஸ்.ஜயசிங்க

**பணிப்பாளர் (நிதி)**

இந்நிதிக்கூற்றுக்களைத் தயாரித்து சமர்ப்பிக்கும் பொறுப்பு பணிப்பாளர் நாயகத்திற்கு உரியதாகும். இந்நிதிக் கூற்றுக்கள் சபையினால் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன், அவர்கள் சார்பாக 2024 அக்டோபர் மாதம் 27 ஆம் திகதி கையொப்பமிடப்பட்டது.

| | | |
|---|---|---|
| வைதிதியர் சாரங்க அலஹப்பெரும | எச்.எம்.எஸ்.சமரகோன் | சுரங்க மெண்டிஸ் |
| **தவிசாளர்** | **பணிப்பாளர் நாயகம்** | **பணிப்பாளர் சபை உறுப்பினர்** |

# இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபை

## விரிவான வருமானக் கூற்று

**2023 திசெம்பர் மாதம் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கானது.**

அனைத்துத் தொகைகளும் இலங்கை ரூபாவில் காட்டப்பட்டுள்ளன.

| | குறிப்பு | 2023 | 2022 (மீள் வெளிப்படுத்திய) |
|---|---|---|---|
| வருமானம் | 05 | 544,248,359 | 513,989,237 |
| விற்பனை மற்றும் சேவைக் கிரயம் | 06 | (358,869,304) | (322,580,951) |
| **மொத்த இலாபம்** | | **185,379,056** | **191,408,285** |
| வட்டி வருமானம் | 07 | 24,622,036 | 14,955,664 |
| பிற வருமானங்கள் | 08 | 282,321,681 | 169,466,895 |
| அரச மீண்டெழும் கொடைகள் | 09 | 598,195,000 | 505,400,000 |
| நிர்வாகச் செலவுகள் | 10 | (732,020,710) | (694,238,619) |
| விற்பனை மற்றும் விநியோகச் செலவுகள் | 11 | (340,618,701) | (59,189,699) |
| **நடவடிக்கைச் செயற்பாடுகளின் பெறுபேறுகள்** | | **17,878,362** | **127,802,526** |
| நிதிக் கிரயம் | 12 | (1,281,878) | (1,070,001) |
| **வரிக்கு முந்திய தேறிய வருமானம்/(நட்டம்)** | | **16,596,485** | **126,732,525** |
| பிற விரிவான வருமானம் | 13 | 11,768,860 | 15,052,636 |
| **ஆண்டுக்குரிய தேறிய வருமானம்/ (நட்டம்)** | | **28,365,345** | **141,785,161** |

## இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபை

### நிதி மற்றும் ஒதுக்கு மாற்றல் கூற்று

(அனைத்துத் தொகைகளும் இலங்கை ரூபாவில் காட்டப்பட்டுள்ளன.)

| | பிற்போப்பட்ட மூலதனக் கொடைகள் | மூலதனமும் ஒதுக்குகளும் | உரிமை மாற்றிய சொத்துக்களின் பெறுமதி | மீள் மதிப்பீட்டு மேன்மிகை | பிற்போடப்பட்ட அரச கொடைகள் - கருத்திட்டங்கள் | திரண்ட மேன்மிகை/ பற்றாக்குறை | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| **2022 சனவரி 01 இலுள்ளவாறான மீதி** | **304,455,732** | **6,243,013** | **13,447,061** | **960,696,321** | **556,547,142** | **(204,371,533)** | **1,637,017,736** |
| முன்னைய ஆண்டின் சீராக்கங்கள் (27.1) | - | - | - | - | - | 1,794,849 | 1,794,849 |
| ஆண்டுக்குரிய இலாபம் | - | - | - | - | - | 141,785,161 | 141,785,161 |
| அரச கொடைகள் | 24,000,000 | - | - | - | 48,251,112 | - | 72,251,112 |
| அரச கொடைகள் இலதாக்கல் | (69,670,060) | - | - | - | (23,220,857) | - | (92,890,917) |
| **2022 திசெம்பர் 31 இலுள்ளவாறான மீதி** | **258,785,672** | **6,243,013** | **13,447,061** | **960,696,321** | **581,577,397** | **(60,791,523)** | **1,759,957,942** |
| | | | | | | | |
| **2023 சனவரி 01 இலுள்ளவாறான மீதி** | **258,785,672** | **6,243,013** | **13,447,061** | **960,696,321** | **581,577,397** | **(60,791,523)** | **1,759,957,942** |
| முன்னைய ஆண்டின் சீராக்கங்கள் (27.1) | - | - | - | - | - | (256,263) | (256,263) |
| ஆண்டுக்குரிய இலாபம் | - | - | - | - | - | 28,365,345 | 28,365,345 |
| அரச கொடைகள் | 98,990,000 | - | - | - | 86,101,943 | - | 185,091,943 |
| அரச கொடைகள் இலதாக்கல் | (43,511,138) | - | - | - | (23,824,867) | - | (67,336,004) |
| **2023 திசெம்பர் 31 இலுள்ளவாறான மீதி** | **314,264,535** | **6,243,013** | **13,447,061** | **960,696,321** | **643,854,473** | **(32,682,441)** | **1,905,822,962** |

## இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபை
### காசுப் பாய்ச்சல் கூற்று

**2023 திசெம்பர் 31 இல் முடிவடையும் ஆண்டுக்கானது**

*(அனைத்துத் தொகைகளும் இலங்கை ரூபாவில் காட்டப்பட்டுள்ளன.)*

| | 2023 | 2022 (மீள் வெளிப்படுத்திய) |
|---|---|---|
| **நடவடிக்கைச் செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்கள்** | | |
| ஆண்டுக்குரிய தேறிய இலாபம்/ (நட்டம்) | 16,596,485 | 126,732,525 |
| **சீராக்கல்கள்:** | | |
| கையுதிர்ப்பு இலாபம் | (1,384,755) | (348,249) |
| பெறுமானத் தேய்வு | 67,105,801 | 64,234,191 |
| கடனுக்கும் முற்பணங்களுக்குமான ஏற்பாடுகள | - | - |
| தொழில் வழக்குகளுக்கான ஏற்பாடுகள் | - | - |
| பணியாட்குழு மிகையூதியக் கொடுப்பனவுக்கான ஏற்பாடுகள் | - | 9,860,000 |
| பதிவழிக்கப்பட்ட நீண்டகால கடன்படுநர் மீதிகள் | - | - |
| மூலதனக் கொடை இலதாக்கல் | (66,611,004) | (92,861,917) |
| அறவிடமுடியாக் கடனும் ஐயக்கடனும் | 451,965 | (312,089) |
| வட்டி வருமானம் | (26,335,629) | (16,464,444) |
| ஓய்வூதிய நன்மைக் கடப்பாடுகள் | 46,031,731 | 30,802,998 |
| | 35,854,594 | 121,643,016 |
| செலுத்திய ஓய்வூதிய நன்மைக் கடப்பாடுகள் | (34,262,871) | (15,052,670) |
| **தொழிற்படு மூலதன மாற்றல்களுக்கு முந்திய நடவடிக்கை இலாபம்/ (நட்டம்)** | **1,591,723** | **106,590,346** |
| கையிருப்பு (அதிகரிப்பு)/ (குறைப்பு) | (31,366,411) | (20,770,643) |
| கடன்படுநர்களும் பெறப்படற்பாலவையும் (அதிகரிப்பு)/ குறைப்பு | (16,883,582) | 1,290,483 |
| ஏனைய நடைமுறைச் சொத்துக்கள் (அதிகரிப்பு)/ குறைப்பு | (11,985,514) | 2,712,654 |
| முற்கொடுப்பனவுகள் (அதிகரிப்பு)/ குறைப்பு | (48,762,619) | (9,388,618) |
| கடன்கொடுநர்களும் செலுத்தப்படற்பாலவையும் அதிகரிப்பு/ (குறைப்பு) | 116,802,995 | 24,793,636 |
| கூட்டுத்தாபனங்களுக்குச் செலுத்த வேண்டிய தொகைகள் அதிகரிப்பு/ (குறைப்பு) | 7,287,361 | (456,163.92) |
| முன்னைய ஆண்டின் சீராக்கங்கள் | 256,263 | (1,794,849) |
| **நடவடிக்கைச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப்பாய்ச்சல்** | **16,940,215** | **102,976,845** |
| **முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்கள்** | | |
| நிலையான வைப்புக்களின் முதலீடுகள் | - | - |
| நடைபெற்றுவரும் மூலதன வேலைகள் மீது முதலீடு செய்த தொகை | (52,513,688) | (16,842,388) |
| முதலீட்டுச் சொத்துக்களின் பேரில் முதலீடுசெய்த தொகைகள் | (28,072,696) | (22,919,159) |
| வட்டி வருமானம் | 26,335,629 | 16,464,444 |
| கையுதிர்ப்புச் சொத்துக்களிலிருந்தான காசு | 1,384,755 | 348,975 |
| ஆதனம், பொறித்தொகுதி மற்றும் சாதனங்கள் கையகப்படுத்தல்/நிர்மாணித்தல் | (59,887,990) | (33,864,485) |
| **முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல்கள்** | **(114,631,440)** | **(56,812,613)** |
| **நிதிச் செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்கள்** | | |
| கிடைத்த கொடைகள் - மூலதன/விசேட கருத்திட்டங்கள் | 93,078,964 | 63,554,716 |
| கிடைத்த கொடைகள் - மூலதன | 98,990,000 | 24,000,000 |
| விசேட கருத்திட்டங்களில் முதலீடு | (14,003,810) | (10,463,612) |
| **நிதிச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல்கள்** | **178,065,155** | **77,091,104** |
| காசும் காசு மற்றும் காசுக்கு நிகரானவற்றினதும் தேறிய அதிகரிப்பு/குறைப்பு | 80,373,930 | 123,255,335 |
| ஆண்டின் ஆரம்பத்தில் காசு மற்றும் காசுக்கு நிகரானவை | 343,300,457 | 220,045,122 |
| ஆண்டின் இறுதியில் காசு மற்றும் காசுக்கு நிகரானவை (தொடர்புக் குறிப்பு 22) | **423,674,387** | **343,300,457** |

# இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபை
## முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளும் நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்களும்

### 1. பொதுவான தகவல்கள் (சட்ட வடிவமும் நிரந்தர முகவரியும்)

இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபை, 1969 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட ஒரு நியதிச்சட்ட சபையாகும். சபையின் தலைமை அலுவலகம் இல.615, காலி வீதி, கட்டுபெத்த, மொறட்டுவை என்ற முகவரியில் அமைந்துள்ளது.

இலங்கையில் கைத்தொழில்களை ஊக்குவித்தல், மேம்படுத்தல் மற்றும் அபிவிருத்தி செய்வதில் உதவுதல் கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் முதன்மைப் பணிகளாகும்.

### 2. முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு

#### 2.1 தயாரிப்பதற்கான அடிப்படையும் இலங்கை நிதி அறிக்கையிடல் நியமங்களைப் பின்பற்றுதலும்

இலங்கை பட்டயப்பெற்ற கணக்காளர் நிறுவனத்தினால் வெளியிடப்பட்ட இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கும் (SLFRS) இலங்கை நிதிசார் அறிக்கையிடல் நியமங்களுக்கும் (SLFRS) அமைய சபையின் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. இந்நிதிக்கூற்றுக்கள் தொடர்ந்துசெல்லும் அடிப்படையொன்றின் பேரில் தயாரிக்கப்பட்டுள்ளதுடன், வேறு வகையில் வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டாலொழிய, இக்காலப்பகுதி முழுவதற்கும் ஏற்புடையவாறு இக்கணக்கீட்டுக் கொள்கைகள் ஏற்புடைத்தாக்கிக் கொள்ளப்பட்டுள்ளன. சம்பந்தப்பட்ட கூற்றுக்களின் கீழான நியாயமான பெறுமதி தொடர்பில் தகுந்த வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்படும் சந்தர்ப்பங்கள் தவிர்ந்தவிடத்து, நிதிக்கூற்றுக்கள் அட்டுறு அடிப்படையிலும், வரலாற்றுக் கிரய அடிப்படையிலும் தயாரிக்கப்பட்டுள்ளன.

சபையின் நிதிசார் காலக்கெடு, சனவரி மாதம் 01 ஆம் திகதியில் இருந்து திசெம்பர் மாதம் 31 ஆம் திகதி வரையான பன்னிரண்டு (12) மாத காலப்பகுதியை உள்ளடக்கும்.

#### 2.2 ஆதனங்கள், பொறித்தொகுதிகள் மற்றும் சாதனங்கள்

##### 2.2.1 சொத்துக்களின் பெறுமதி

அனைத்து ஆதனங்கள், பொறித்தொகுதிகள் மற்றும் சாதனங்கள் தொடக்க கட்டத்தில் கிரயத்தில் அறிக்கையிடப்படுவதுடன், தொடர்ந்து வரலாற்றுக் கிரயத்திலிருந்து பெறுமானத் தேய்வைக் கழித்து காட்டப்படுகின்றன. குறித்த உருப்படியை கையகப்படுத்துவதற்கு நேரடியாக உறப்பட்ட கிரயம் வரலாற்றுக் கிரயத்தில் சேர்க்கப்படுவதுடன், உருப்படியை கையகப்படுத்தும் சந்தர்ப்பத்தில் அல்லது குறித்தவொரு காலக்கெடுக்குள் கையிருப்புகளின் உருவாக்கம் தவிர்ந்த வேறு கருமங்களுக்காக அக்காலக்கெடுவினுள் குறித்த உருப்படியை பயன்படுத்தியிருப்பதன் பெறுபேறாக நிறுவனமொன்றினால் உறப்படும் கடப்பாடான அவ்வுருப்படியை கழற்றி அகற்றிவிட்டு அவ்வுருப்படி இருந்த இடத்தை மீண்டும் வழமைக்குக் கொண்டுவருவதற்கான அடிப்படை மதிப்பீடுகளை மேற்கொள்ளும் செலவும் வரலாற்றுக் கிரயத்தைச் சாரும்.

சொத்தொன்றை மீள்கணிப்பீடு செய்யும்போது எடுத்துச்செல்லப்படும் பெறுமதியில் அதிகரிப்பு ஏதும் ஏற்படுமாயின், அது முன்பு செலவொன்றாக ஏற்றங்கீகரிக்கப்பட்ட அச்சொத்துக்குரிய முந்திய மீள் கணிப்பீட்டுக் குறைவொன்றுக்கு மறுதலையாக அமையாதெனில், அது நேரடியாகவே மீள்கணிப்பீட்டு மிகைக்கு செலவு வைக்கப்படும். இவ்வாறான சந்தர்ப்பங்களில், அதிகரிப்பு முன்னரே எழுதப்பட்டுள்ள அளவிற்கு வருமானமொன்றாக ஏற்றங்கீகரிக்கப்பட்டுள்ளது. மீள்கணிப்பீட்டின் பெறுபேறொன்றாக சொத்தொன்றின் எடுத்துச்செல்லப்படும் பெறுமதி குறைவடையும்போது அக்குறைவு அச்சொத்துக்குரிய முந்திய அதிகரிப்பொன்றை மறுதலையாக மாற்றியமைக்கவில்லையெனில் அது செலவொன்றாக ஏற்றங்கீகரிக்கப்படுவதுடன், அவ்வாறான ஒரு சந்தர்ப்பத்தில் அக்குறைவு அச்சொத்துக்கு ஏற்புடைய மீள்கணிப்பீட்டு மிகையில் உறப்படும் தொகையைத் தாண்டிச் செல்லாத மட்டத்திற்கு குறித்த மீள்கணிப்பீட்டு மேன்மிகையொன்று காணப்படுமாயின், அம்மேன்மிகையிலிருந்து அது அறவிடப்படும். சொத்துக்குரிய மீள்கணிப்பீட்டு மேன்மிகையில் யாதேனுமொரு மீதி நிலுவையாக இருப்பின், அது அச்சொத்தை அகற்றும்போது அல்லது கையாளும்போது நேரடியாகவே திரண்ட இலாபத்திற்கு/ (நட்டத்திற்கு) மாற்றப்படும்.

# இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபை
## நிதிச்சார் கூற்றுக்களுக்கான குறிப்புகள் (எஞ்சிய பகுதி)

### 2.2.1 எஞ்சிய பகுதி…..

உருப்படியுடன் சம்பந்தப்பட்ட எதிர்கால பொருளாதார அனுகூலங்கள் கைத்தொழில் அபிவிருத்திச் சபைக்கு பாய்ச்சப்படுதல் இடம்பெறுமாயின் அத்துடன் உருப்படியின் கிரயத்தை நம்பகமான முறையில் அளவிட முடியுமாயின் மாத்திரம், அதனைத் தொடர்ந்து உறப்படும் கிரயம் உகந்தவாறு சொத்துக்களின் எடுத்துச்செல்லப்படும் பெறுமதியில் சேர்க்கப்படும் அல்லது தனியான ஒரு சொத்தாக ஏற்றங்கீகரிக்கப்படும். மீள்நிறுவப்பட்ட பகுதியின் எடுத்துச்செல்லப்படும் பெறுமதி நீக்கப்படும். அனைத்து திருத்த வேலைகளும் பராமரிப்புச் செலவுகளும், அச்செலவுகள் உறப்பட்ட நிதிசார் காலப்பகுதியில் வருமானக் கூற்றில் சேர்க்கப்படும்.

### 2.2.2. பெறுமானத் தேய்வுகள்

ஆதனங்கள், பொறித்தொகுதிகள் மற்றும் சாதனங்கள் என்ற உருப்படியைப் பயன்படுத்துவதற்கு தயாராக இருத்தல் ஆரம்பித்த திகதியிலிருந்தே பெறுமானத் தேய்வுக் குறைப்பு ஆரம்பமாகிறது. அந்த உருப்படியை அகற்றும் வரை அக்காலக்கெடுவுக்குள் அச்சாதனம் பயன்படுத்தப்படாதிருந்தபோதும், தொடர்ச்சியாக பெறுமானத் தேய்வு குறைக்கப்படுகிறது. பெறுமானத் தேய்வு, எளிய நேர்கோட்டு அடிப்படையொன்றினால் ஆதனங்கள், பொறித்தொகுதிகள் மற்றும் சாதனங்கள் உருப்படியின் மதிப்பீடு செய்யப்பட்டுள்ள பயனுள்ள ஆயுட்காலம் முழுவதும் வருமானக் கூற்றிற்கு அறவிடப்படும். காணிகளுக்கு பெறுமானத் தேய்வு செய்யப்படுவதில்லை. மதிப்பீடுசெய்யப்பட்ட பயனுள்ள ஆயுட்காலங்கள் பின்வருமாறாகும்:-

| | |
|---|---|
| 1. காணி முன்னேற்றல்களும் கட்டிடங்களும் | 2.5% (40 ஆண்டுகள்) |
| 2. கணினி மென்பொருள்கள் | 07% (14 ஆண்டுகள்) |
| 3. பொறித்தொகுதிகள், இயந்திரங்கள், அச்சீட்டுப் பொறிகள், அலுவலக உபகரணங்கள், ஆய்வுகூட உபகரணங்கள், தளபாடங்களும் பொருத்திகளும், மிதிவண்டிகள், நானாவித சொத்துக்கள், பயன்பாட்டுச் சேவைகள், PABX முறைமைகள், வேறு சொத்துக்கள் | 10%, (10 ஆண்டுகள்) |
| 4. கணினிகளும் மோட்டார் வாகனங்களும் | (20%, 05 ஆண்டுகள்) |
| 5. சாதனங்கள், புத்தகங்கள் மற்றும் பயணப் பொதிகள் | (25%, 04 ஆண்டுகள்) |

சொத்துக்களின் எஞ்சியிருக்கின்ற பெறுமானங்களும் பயனுள்ள ஆயுட்காலங்களும் ஒவ்வொரு கணக்கீட்டுக் காலப்பகுதியின் இறுதியிலும் மீளாய்வுசெய்யப்பட்டு ஏற்றதாயிருப்பின், சீராக்கங்கள் செய்யப்படும்.

சொத்தொன்றின் எடுத்துச்செல்லப்படும் பெறுமதி, அதன் மதிப்பீடுசெய்யப்பட்ட, மீள அறவிட்டுக் கொள்ளக்கூடிய பெறுமதியை விட அதிகமானதாக இருப்பின், உடனே அச்சொத்தின் எடுத்துச்செல்லப்படும் பெறுமதி அதன் மீள அறவிட்டுக்கொள்ளக்கூடிய பெறுமதிக்கு எழுதப்படும்.

கையுதிர்ப்புச் செய்வதன் மூலம் பெறப்படும் தொகையை எடுத்துச்செல்லப்படும் பெறுமதியுடன் ஒப்பிடுவதன் மூலம் கையுதிர்ப்பின்போது ஏற்படும் இலாபம்/நட்டம் தீர்மானிக்கப்படும். அவ்வாறான இலாப/நட்ட வருமானக் கூற்றில் சேர்க்கப்படும்.

**குறிப்பு:-** 1997 ஆம் ஆண்டில் கொடையொன்றாகக் கிடைக்கப்பெற்ற உயர் அதிர்வெண் தூண்டு (கிளர்மின்) உலை (High frequancy Induction Furnance) சேதமடைந்து முழுமையாக பெறுமானத்தேய்வு அடைந்துள்ளதுடன், ஆண்டினுள் ரூ.1.356,000 தொகைக்கு கையுதிர்ப்புச் செய்யப்பட்டுள்ளது.

## 2.3 மூலதனமாக்கப்படாத காணிகள் பற்றிய விபரங்கள்

பின்வரும் காணிகள் கைத்தொழில் அபிவிருத்திச் சபையினால் பயன்படுத்தப்படுகின்ற போதிலும், அக்காணிகளின் சட்டரீதியான உரித்து சபை வசம் காணப்படாமையால், சபை அவற்றை மூலதனமாக்கவில்லை.

| இல. | காணி அமைந்துள்ள மாவட்டம் | விஸ்தீரணம் (பரப்பளவு) | | | பயன்படுத்தும் நோக்கம் | ஆட்சியைப் பெற்றுக் கொண்ட திகதி | கையகப்படுத்தாமைக்குரிய காரணம் | கையகப்படுத்திக்கொள்வதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | ஏக்கர் | றூட். | பர்சஸ் | | | | |
| 1 | அநுராதபுரம் | | 1 | 20 | பிராந்திய அலுவலகம் | 1971 முதல் | ஓர் அரச காணியாகும். | ஆட்சி (Possession) வழங்கப்பட்டுள்ளபோதும், உரிமை (Ownership) மாற்றம் செய்யப்படவில்லை. |
| | | | | | பொதுச் சேவை நிலையம் | | ஓர் அரச காணியாகும். | ஆட்சி (Possession) வழங்கப்பட்டுள்ளபோதும், உரிமை (Ownership) மாற்றம் செய்யப்படவில்லை. |
| 2 | பொலன்னறுவை | | 3 | 26.6 | பிராந்திய அலுவலகமும் சுற்றுலா பங்களாவும் | 1992 முதல் | ஓர் அரச காணியாகும். | மாவட்ட செயலாளருக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. |
| 3 | மாத்தறை | 1 | 1 | 6.2 | பிராந்திய அலுவலகமும் பொதுச் சேவை நிலையமும் | | | கடிதமொன்றின் மூலம் மேலதிக காணிப் பதிவாளரினால் (மாத்தறை) சபைக்கு ஆட்சி (Possession) மாற்றப்பட்டுள்ளது. |
| 4 | அம்பாந்தோட்டை | | | | பிராந்திய அலுவலகம் | 2006 முதல் | காணியை அபிவிருத்தி செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. | |
| 5 | குருணாகல் | | | | தோல்பொருள் நிலையம், வாரியப்பொல | | | காணியை கையகப்படுத்துவதற்கு பிரதேச செயலகத்திற்கு கோரிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. |
| 6 | மொணராகலை | | | 48 | பிராந்திய அலுவலகம் | | ஓர் அரச காணியாகும். | காணியை பயன்படுத்துவதற்காக கடிதமொன்றின் மூலம் சபைக்கு ஆட்சி (Possession) வழங்கப்பட்டுள்ளது. |
| 7 | பதுளை | | | 50 | "கம்உதா" நிலையம் - மஹியங்கனை | 1997 முதல் | | NADA க்கு கையளிக்கப்பட்டுள்ளது. |
| 7<br>8 | கொழும்பு | 1.2953 ஹெக்டயர் | | | தலைமை அலுவலகம் | | ஓர் அரச காணியாகும்.<br>(மொறட்டுவை பிரதேச செயலகம்) | காணியை கையகப்படுத்துவதற்காக குறித்த நிறுவனங்களுக்கு கடிதம் மூலம் கோரிக்கைகள் விடுக்கப்பட்டுள்ளன. |
| | | | | | நவபிம நிலையம் | | | |
| 9 | கொழும்பு | 0.4046 ஹெக்டயர் | | | இறப்பர் அபிவிருத்தி நிலையம் | 1980 முதல் | 99 வருட குத்தகை அடிப்படையில். | |
| 10 | அம்பாறை | | | | பிராந்திய அலுவலகம் | | ஓர் அரச காணியாகும். | கடிதம் மூலம் உரிமைமாற்றம் செய்யப்பட்டுள்ளது. |
| 11 | கொழும்பு | 13 | 2 | 6 | கைத்தொழிற் பேட்டை, பானலுவ | 2006 முதல் | | சுதந்திர அளிப்புப்பத்திரமொன்றின் மூலம் உரித்து (Ownership) IDB க்கு வழங்கப்பட்டுள்ளது. (2023 பெப்புருவரி மாதம் 23 ஆம் திகதி கையகப்படுத்தப்பட்டது.) |
| 12 | பத்தேகம | 1 | 2 | 0.5 | கைத்தொழிற் பேட்டை | 1992 முதல் | | காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவுக்கு காணிகளை உரிமைமாற்றம் செய்வதற்கு கைத்தொழில் அபிவிருத்திச் சபைக்கும் காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவுக்கும் இடையில் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றுள்ளன. |
| 13 | பெலிஅத்த | 10 | 0 | 29.2 | கைத்தொழிற் பேட்டை | 1995 முதல் | | |

# இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபை
## நிதிச்சார் கூற்றுக்களுக்கான குறிப்புகள் (எஞ்சிய பகுதி)

### 2.4 முதலீட்டு ஆதனங்கள்

முதலீட்டு ஆதனங்கள் முதலில் கிரயத்திற்கு ஏற்றங்கீகரிக்கப்படுகின்றன. முக்கிய புதுப்பித்தல்களுக்கும் மேம்படுத்தல்களுக்குமான கிரயம் மூலதனமாக்கப்பட்டுள்ளது. பராமரிப்புகள், திருத்த வேலைகள் மற்றும் சிறு மேம்படுத்தல்களுக்கான கிரயம், அது இடம்பெற்ற சந்தர்ப்பத்தில் இலாபங்களிலும் நட்டங்களிலும் ஏற்றங்கீகரிக்கப்படுகின்றன. முதலீட்டு ஆதனமொன்றைக் கையாளும்போது, அவ்வாறு கையாள்வதன் மூலம் கிடைக்கின்ற தொகைக்கும் எடுத்துச்செல்லப்படும் பெறுமதிக்கும் இடையிலான வித்தியாசம் இலாபங்கள் மற்றும் நட்டங்களில் ஏற்றங்கீகரிக்கப்படுகின்றன.

அனைத்து ஆதனங்களின் கிரயம் அல்லது மதிப்பீட்டின் அடிப்படையில் எளிய நேர்கோட்டு அடிப்படையொன்றைப் பயன்படுத்துவதன் மூலம் பெறுமானத் தேய்வு ஏற்பாடு கணிப்பிடப்படுகிறது. வருடாந்த பெறுமானத் தேய்வு விகிதம் பின்வருமாறாகும்:-

காணி மேம்படுத்தல்களும் கட்டிடங்களும் - 2.5%

### 2.5 நிதிசார் சொத்துக்கள்

#### 2.5.1 வகையீடு

கைத்தொழில் அபிவிருத்திச் சபை நிதிசார் சொத்துக்களை கையகப்படுத்திய நோக்கத்தின் அடிப்படையில் அதன் நிதிசார் சொத்துக்களை கடன் மற்றும் பெறப்படற்பாலதான தொகை என்று வகையீடு செய்துள்ளது.

**கடன்கள் மற்றும் பெறப்படற்பாலவை**

கடன்கள் மற்றும் பெறப்படற்பாலவை, செயலூக்கமுள்ள ஒரு சந்தையில் விலைகள் தெரிவிக்கப்படாத, நிலையான அல்லது நிச்சயிக்கத்தக்க கொடுப்பனவுகளுடன்கூடிய வருவிக்கப்பட்டவை அல்லாத நிதிசார் சொத்துக்களாகும். அவை, ஐந்தொகைத் திகதிக்குப் பின்னர், 12 மாதங்களுக்குக் கூடுதலான முதிர்ச்சிகள் தவிர வர்த்தக மற்றும் வேறு பெறப்படற்பாலவை என்ற அடிப்படையில் நடைமுறைச் சொத்துக்களில் சேர்க்கப்பட்டுள்ளன.

#### 2.5.2 நிதிசார் சொத்துக்களை ஏற்றங்கீகரித்தல்

கடன்கள் மற்றும் பெறப்படற்பாலதான தொகைகள், ஆரம்ப கட்டத்தில் நியாயமான பெறுமதிக்கு கொடுக்கல்வாங்கல் கிரயம் சேர்க்கப்பட்ட பெறுமதிக்கு ஏற்றங்கீகரிக்கப்படுவதோடு, அதனையடுத்து பயன்கூர் வட்டி முறையைப் பயன்படுத்தி இலதாக்கிய கிரயத்திற்கு எடுத்துச் செல்லப்படுகிறது.

#### 2.5.3 நிதிசார் கருவிகளை ஒதுக்கிவைத்தல்

ஏற்றங்கீகரிக்கப்பட்ட பெறுமானங்களை ஒதுக்கிவைப்பதற்காக சட்டரீதியாக செயல்வலுப்படுத்தக்கூடிய உரித்தொன்று காணப்படுமிடத்தும், தேறிய அடிப்படையொன்றில் தீர்ப்பதற்கு அல்லது சமகாலத்தில் சொத்தை தீர்த்து பொறுப்புக்களை செலுத்தித் தீர்க்கும் எண்ணம் உள்ளபோதும், சொத்துக்களையும் பொறுப்புக்களையும் ஒதுக்கிவைத்து தேறிய பெறுமதிக்கு ஐந்தொகையில் அறிக்கையிடப்படுகிறது.

# இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபை
## நிதிச்சார் கூற்றுக்களுக்கான குறிப்புகள் (எஞ்சிய பகுதி)

### 2.5.4 நிதிசார் சொத்துக்களின் பாதிப்பு (மதிப்பிழப்பு)

**இலதாக்கிய கிரயத்திற்குக் எடுத்துச்செல்லப்படும் சொத்துக்கள் (கடன் மற்றும் பெறப்படற்பாலவை)**

எல்லா அறிக்கையிடும் காலப்பகுதியின் இறுதியிலும் கைத்தொழில் அபிவிருத்திச் சபை அதன் நிதிச் சொத்தொன்றுக்கு பாதிப்பு ஏற்பட்டிருப்பதற்கான புறவயமான சான்றுகள் உள்ளனவா என்பதை மதிப்பீடு செய்யும். கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் நிதிசார் சொத்தொன்று முக்கியமாக ஏற்றங்கீகரிக்கப்பட்ட பின் ஏற்பட்ட நிகழ்வு ('நட்ட நிகழ்வு') ஒன்றின் அல்லது அதற்குக் கூடுதலானவற்றின் பெறுபேறாக அச்சொத்துக்கள மதிப்பிழப்பு ஏற்பட்டிருப்பதாக புறவயமான சான்றுகள் இருப்பின் மாத்திரம் அத்துடன் அத்தகைய இழப்பு நிகழ்வை (நிகழ்வுகளை) நம்பத் தகுந்த விதத்தில் மதிப்பீடு செய்யக்கூடியவாறு கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் மதிப்பீடு செய்த எதிர்கால காசுப் பாய்ச்சல்களுக்கு பாதிப்பொன்றை ஏற்படுத்துமாயின் கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் நிதிசார் சொத்தொன்று அல்லது சொத்துக்கள் சேதமடைந்திருப்பதாகக் கருதப்படுவதோடு, மதிப்பிழப்பு நட்டங்களை சபை சுமக்கின்றது. உரிய புறவயமான சான்றுகள் காணப்படுகின்றனவா என்பதை கைத்தொழில் அபிவிருத்திச் சபை முதலில் மதிப்பீடு செய்யும்.

கடன் மற்றும் பெறப்படற்பாலதான தொகைகளுக்கு நட்டத்தொகை சொத்தின் எடுத்துச்செல்லப்படும் பெறுமதியிலும் சொத்தின் மூல பயன்கூர் வட்டி வீதத்திற்கு கழிவுசெய்த மதிப்பீடு செய்யப்பட்ட எதிர்கால காசுப் பாய்ச்சல்களின் (தற்போது நட்டத்தைச் சுமக்காத எதிர்கால கடன் நட்டங்கள் தவிர) இன்றைய பெறுமதிக்கு இடையிலான வித்தியாசமாகக் கணிக்கப்படும். சொத்தின் எடுத்துச்செல்லப்படும் பெறுமதி குறைக்கப்படுவதோடு, நட்டத்தின் பெறுமதி விரிவான வருமானக் கூற்றில் ஏற்றங்கீகரிக்கப்படுகிறது.

அடுத்தமைந்த காலப்பகுதியொன்றில் மதிப்பிழப்பு நட்டத்தின் பெறுமதி குறைவடையுமாயின் அத்துடன் அத்தகைய குறைவு புறவயமான மதிப்பிழப்பை ஏற்றங்கீகரித்த பின் ஏற்பட்ட சம்பவமொன்று (கடன்படுநரின் கடன் தரவரிசைப்படுத்தலின் முன்னேற்றமொன்று போன்ற) தொடர்பிலானதாக அமையுமாயின், முன்னரே ஏற்றங்கீகரிக்கப்பட்ட மதிப்பிழப்பு நட்டத்தை மறுதலையாக்குவதற்கு விரிவான வருமானக் கூற்றில் ஏற்றங்கீகரிக்கப்படுகின்றன.

வர்த்தக பெறப்படற்பாலவற்றின் மதிப்பிழப்புகளின் பரிசோதிப்பு 2.8 ஆம் குறிப்பில் விபரிக்கப்பட்டுள்ளது.

### 2.6 நிதிசார் பொறுப்புக்கள்

நிதிசார் பொறுப்புக்களில் வர்த்தக மற்றும் வேறு செலுத்தப்படற்பாலனவும் கடன் பெறல்களும் அடங்கும். கடன் தவிர்ந்த ஏனைய அனைத்து நிதிசார் பொறுப்புக்களும் தொடக்கத்தில் அவற்றின் நியாயமான பெறுமதிக்கு ஏற்றங்கீகரிக்கப்படுவதோடு, அதன் பின்னர் கழிவுசெய்தலின் பெறுபேறு குறிப்பிடத்தக்கதல்லாத மட்டத்தில் காணப்படவில்லையெனில், பயன்கூர் வட்டி முறையைப் பயன்படுத்தி இலதாக்கிய கிரயத்திற்கு அவை அளவிடப்படுவதோடு, அப்போது அவை கிரயத்தில் குறிப்பிடப்படுகின்றன.

### 2.7 இருப்புக்கள்

இருப்புப் பெறுமதி கிரயம் அல்லது தேறிய கைகூடக்கூடிய பெறுமதி ஆகிய இரண்டில் எப்பெறுமதி குறைவானதோ அப்பெறுமதிக்கு இருப்புக்கள் மதிப்பீடு செய்யப்படுகின்றன. சராசரி கிரய முறையை (AVCO Method) பயன்படுத்தி கிரயம் நிர்ணயிக்கப்படுகிறது. தேறிய கைகூடக்கூடிய பெறுமதி என்பது சாதாரண வியாபார நடபடிமுறையில் கையிருப்புக்களை விற்கக்கூடிய விலையில் மதிப்பீடுசெய்த கிரயத்தையும் விற்றலை மேற்கொள்வதற்காக மதிப்பீடுசெய்யப்பட்ட கிரயத்தையும் குறைக்கும்போது கிடைக்கும் விலையாகும். இருப்புக்களை அவற்றின் இன்றைய இடஅமைவிற்கும் நிலைக்கும் கொண்டுவருவதற்கு உறப்பட்ட கிரயம், பின்வருமாறு கணக்கீட்டில் உட்படுத்தப்படுகிறது:-

| | | |
|---|---|---|
| மூலப்பொருள்கள் | --- | கிரயம் அல்லது தேறிய கைகூடக்கூடிய பெறுமதி ஆகியவற்றில் எது குறைவானதாக உள்ளதோ அப்பெறுமதிக்கு. |
| முடிவுப்பொருள்கள் | --- | கிரயம் அல்லது தேறிய கைகூடக்கூடிய பெறுமதி ஆகியவற்றில் எது குறைவானதாக உள்ளதோ அப்பெறுமதிக்கு. |
| நடைபெற்றுவரும் வேலைகள் | --- | நேரடிப் பொருள், நேரடி உழைப்பு மற்றும் பொதுவான செயற்பாட்டு இயலளவை அடிப்படையாகக்கொண்ட உற்பத்திப் பொதுப் பணிகளில் உகந்ததொரு பகுதியின் கிரயத்திற்கு. |

# இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபை
## நிதிச்சார் கூற்றுக்களுக்கான குறிப்புகள் (எஞ்சிய பகுதி)

### 2.8 வர்த்தக பெறப்படற்பாலவை

வர்த்தக பெறப்படற்பாலவை என்பது பொதுவான வியாபார நடபடிமுறையில் விற்கப்பட்ட பண்டங்களுக்கு அல்லது நிறைவேற்றப்பட்ட சேவைகளுக்கு வாடிக்கையாளர்களிடமிருந்து வர வேண்டிய தொகைகளாகும். ஓராண்டு அல்லது அதற்குக் குறைவான ஒரு காலத்துள் அறவிட்டுக் கொள்ள எதிர்பார்ப்பதாயின், (அல்லது வியாபாரத்தின் பொதுவான செயற்பாட்டு வட்டத்தில் அதற்கும் கூடுதலான ஒரு காலமாயின்), அத்தொகைகள் நடைமுறைச் சொத்துக்களாக வகையீடு செய்யப்படுகிறது. அவ்வாறன்றேல், அவை நடைமுறையல்லாத சொத்துக்களாக முன்வைக்கப்படுகின்றன.

கைத்தொழில் அபிவிருத்திச் சபைக்கு பெறப்படற்பாலனவற்றுக்குரிய ஆரம்ப நிபந்தனைகளுக்கமைய அறவிடப்பட வேண்டிய அனைத்துப் பெறுமதிகளையும் அறவிட்டுக்கொள்ள முடியாதென்று புறவயமான சான்றுகள் இருக்கும்போது, வர்த்தக பெறப்படற்பாலனவற்றின் பாதிப்புக்கான ஏற்பாடொன்று நிறுவப்படுகிறது. கடன்படுநரின் குறிப்பிடத்தகு நிதிசார் சிரமங்கள், கடன்படுநர் வங்கிமுறிவுநிலைக்கு அல்லது நிதிசார் மீள் அமைப்பிற்கு உள்ளாவதற்கு வாய்ப்பிருத்தல், கொடுப்பனவுகளைத் தவற விடுதல் அல்லது மீறுதல் முதலிய வர்த்தக பெறப்படற்பாலவை பாதிப்பு உள்ளாகியிருப்பதாகச் சுட்டிக்காட்டும் காரணிகளாகும். ஏற்பாட்டின் பெறுமதிக்கும், சொத்தின் எடுத்துச்செல்லப்படும் பெறுமதிக்கும், தொடக்க பயன்கூர் வட்டி வீதத்திற்கு மட்டந்தட்டிய, மதிப்பீடு செய்யப்பட்ட எதிர்கால காசுப்பாய்ச்சல்களின் இன்றைய பெறுமதிக்கும் இடையிலான வித்தியாசமாகும். 2018 ஆம் ஆண்டு முதல் பின்வருமாறு ஏற்பாடுகள் கணிப்பிடப்படுகின்றன:-

| வயது | | ஏற்பாடு % |
|---|---|---|
| நடப்பு ஆண்டு | - | 0% |
| 01 – 02 ஆண்டுகள் | - | 10% |
| 03 – 05 ஆண்டுகள் | - | 25% |
| 05 ஆண்டுகளுக்கு மேல் | - | 100% |

### 2.9 காசு மற்றும் காசுக்கு நிகரானவை

கையிலுள்ள காசும், வங்கிகளிலுள்ள அழைப்பு வைப்புக்களும், 03 மாதங்கள் அல்லது அதற்குக் குறைவான தொடக்க முதிர்வு காலம் கொண்ட ஏனைய குறுகிய கால உயர் திரவத்தன்மையுள்ள முதலீடுகளும், வங்கி மேலதிகப் பற்றுக்களும் காசு மற்றும் காசுக்கு நிகரானவற்றில் அடங்கும். நிதிநிலைக் கூற்றில் நடைமுறைப் பொறுப்புக்களின் கீழ் வங்கி மேலதிகப் பற்றுக்கள் எதிர்மறை மீதிகளாகக் காட்டப்பட்டுள்ளன.

### 2.10 ஏற்பாடுகள்

கைத்தொழில் அபிவிருத்திச் சபைக்கு கடந்த கால சம்பவமொன்றின் பயனாக இன்றைய சட்ட அல்லது ஆக்கச்சார்பான கடப்பாடொன்று காணப்படும்போது, அத்தகைய கடப்பாட்டை இணக்கப்படுத்துவதற்காக பொருளாதார அனுகூலங்கள் அடங்கிய வளப் பாய்ச்சலொன்று இடம்பெறுவது தேவையாக அமையுமிடத்தும் கடப்பாட்டின் பெறுமதியை நம்பத்தகுந்த விதத்தில் மதிப்பீடு செய்யக்கூடியதாக இருக்குமிடத்து அதற்கான நிதி ஏற்பாடுகள் ஏற்றங்கீகரிக்கப்படுகின்றன.

### 2.11 வர்த்தக மற்றும் வேறு செலுத்தப்படற்பாலவை

கோரப்படும்போது அல்லது ஐந்தொகைத் திகதியிலிருந்து ஓராண்டு காலத்துள் செலுத்தப்படவுள்ள செலுத்தப்படற்பாலவை நிதிநிலைக் கூற்றில் வேறு செலுத்தப்படற்பாலவையாக வகைப்படுத்தப்பட்டுள்ள பொறுப்புக்களாகும். ஐந்தொகைத் திகதியிலிருந்து ஓராண்டுக்குக் கூடுதலான காலப்பகுதியில் செலுத்தப்படவுள்ள பொறுப்புக்கள் நடைமுறைப் பொறுப்புக்களாக வகைப்படுத்தப்பட்டுள்ள உருப்படியாகும்.

# இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபை
## நிதிச்சார் கூற்றுக்களுக்கான குறிப்புகள் (எஞ்சிய பகுதி)

### 2.12 வரையறுக்கப்பட்ட நன்மைத் திட்டம்

ஊழியரொருவர் ஓய்வு பெறும்போது குறித்த ஊழியருக்கு கிடைக்கின்ற நன்மையின் பெறுமதி வரையறுக்கப்பட்ட நன்மைத் திட்டம் என்பதனால் கருதப்படுகிறது. பொதுவாக பணியாற்றிய வருடங்களின் எண்ணிக்கை மற்றும் இழப்பீட்டுத் தொகை (வேதனம்) போன்ற ஒன்று அல்லது அதற்குக் கூடுதலான காரணிகள் மீது அது தங்கியுள்ளது. வரையறுக்கப்பட்ட நன்மைத் திட்டம், 1983 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்கச் சட்டத்தின் கீழ் வழங்கப்படும் பணிக்கொடையை உள்ளடக்கியது. வரையறுக்கப்பட்ட நன்மைத் திட்டத்தின் நீண்டகால இயல்பு காரணமாக அவ்வாறான மதிப்பீடுகள் குறிப்பிடத்தக்க உறுதிப்பாடற்ற நிலையில் காணப்படும்.

வரையறுக்கப்பட்ட நன்மைத் திட்டம், உத்தேசிக்கப்பட்ட அலகுக் கடன் (PUC) திட்டத்தைப் பயன்படுத்தி வருடாந்தம் கணக்கிடப்படுகிறது. நன்மை செலுத்தப்படும் புழக்கப் பணத்தினால் செயல்வலுப்பெறும் அரசாங்க முறிகளின் வட்டி வீதங்களைப் பயன்படுத்தி மதிப்பீடுசெய்யப்பட்ட மற்றும் முதிர்வுக்குரிய ஓய்வூதிய கடப்பாட்டின் நியதிகளுக்கு அண்ணளவாக்க நிபந்தனைகளுடன்கூடிய எதிர்கால காசு வெளிப்பாய்ச்சல்களை மட்டப்படுத்தி வரையறுக்கப்பட்ட நன்மைகள் கடப்பாட்டின் இன்றைய பெறுமதி நிர்ணயிக்கப்படுகிறது.

அனுபவ சீராக்கங்கள் மற்றும் காப்பீட்டுக் கணிப்பு அனுமானங்களின் மாற்றங்களின் மூலம் எழக்கூடிய காப்பீட்டு இலாபங்களும் நட்டங்களும் குறித்த இலாபங்கள் அல்லது நட்டங்கள் எழக்கூடிய காலப்பகுதியில் முழுமொத்த வருமானத்தின் ஒப்புரவு அறவிடப்படுகிறது அல்லது செலவு வைக்கப்படுகிறது.

திட்டத்தில் மேற்கொள்ளப்படுகின்ற மாற்றங்கள் குறித்துரைக்கப்பட்ட ஒரு காலப்பகுதிக்கு (உரித்தாக்கும் காலப்பகுதி) சேவையிலீடுபடுகின்ற ஊழியர்களுக்கு ஒரு நிபந்தனையாக இல்லாவிடில், கடந்தகால சேவைக் கிரயம் உடனடியாகவே விரிவான வருமானக் கூற்றில் ஏற்றங்கீகரிக்கப்படுகிறது. இவ்வாறு செய்யும்போது கடந்த சேவைக் கிரயம் உரித்தாக்கும் காலப்பகுதி முழுவதற்கும் எளிய நேர்கோட்டு அடிப்படையொன்றில் இலதாக்கல் செய்யப்படுகிறது.

### 2.13 குறித்துரைக்கப்பட்ட உதவுதொகைத் திட்டம்

கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் அனைத்து நிரந்தர மற்றும் ஒப்பந்த அடிப்படையிலான ஊழியர்களும் ஊழியர் சேமலாப நிதியத்தினதும் (EPF) ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தினதும் (ETF) ஊழியர்களாக இருப்பதோடு, அதற்கு கைத்தொழில் அபிவிருத்திச் சபையினால் முறையே அவ்வூழியர்களின் அடிப்படை வேதனம் அல்லது சம்பளம் மற்றும் வாழ்க்கைச் செலவுப் படிகளில் 12%, 3% என்ற வீதங்களில் உதவுதொகை செலுத்தப்படுகிறது.

### 2.14 முதலீடுகள்

முதலீடுகள், தனிப்பட்ட முதலீட்டு அடிப்படையில் தீர்மானிக்கப்பட்ட கிரயத்தில் எடுத்துச் செல்லப்படுகிறது.

### 2.15 அரச கொடைகள்

அரசாங்கத்திடமிருந்து கிடைக்கும் கொடைகள் அவற்றின் எடுத்துச்செல்லப்படும் பெறுமதிக்கு ஏற்றங்கீகரிக்கப்படுவதோடு இங்கு கொடை கிடைக்குமென்றும் குழு அது சம்பந்தமான அனைத்து நிபந்தனைகளுக்கும் இணங்குமென்றும் நியாயமான உத்தரவாதமொன்றுள்ளது.

கிரயத்திற்கு ஏற்புடைய அரச கொடைகள் மூலம் ஈடுசெய்வதற்கு எதிர்பார்க்கப்படும் கிரயத்துடன் சீராக்கம் செய்வதற்கு தேவைப்படும் காலப்பகுதி முழுவதும் அக்கொடைகள் வருமானக் கூற்றில் பிற்போடப்பட்டு ஏற்றங்கீகரிக்கப்படுகின்றன.

ஆதனங்கள், பொறித்தொகுதிகள் மற்றும் சாதனங்களுக்கு ஏற்புடைய அரச கொடைகள், பிற்போடப்பட்ட அரச கொடைகளாக நடைமுறை அல்லாத சொத்துக்களில் சேர்க்கப்பட்டுள்ளதோடு, குறித்த சொத்துக்களின் எதிர்பார்த்த ஆயுட்காலம் முழுவதும் எளிய நேர்கோட்டு அடிப்படையொன்றில் வருமானக் கூற்றில் செலவு வைக்கப்படுகின்றது.

# இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபை
## நிதிச்சார் கூற்றுக்களுக்கான குறிப்புகள் (எஞ்சிய பகுதி)

### 2.16 நன்கொடைகள்

நன்கொடைகள் என்பது பொதுவாக பரிமாற்றமற்ற மாற்றல்களாகும். இருப்பினும், கைத்தொழில் அபிவிருத்திச் சபையினால் பங்களிப்பாளருக்கு பெயரளவிலான பிரதிப்பயனை வழங்கும் சந்தர்ப்பங்கள் காணப்படலாம். அவ்வாறான நன்கொடைகளுக்காக பங்களிப்பாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ள பிரதிப் பயன் நியாயமற்ற பரிமாற்றக் கொடுக்கல் வாங்கலொன்றின் பெறுபேறாக அமையுமளவுக்கு, கிடைக்கப்பெற்ற நன்கொடையின் பிரதிப் பயனை விட குறிப்பிடத்தக்க அளவு குறைவாயின், அவை கிடைக்கப்பெற்ற நன்கொடைகளாக ஏற்றங்கீகரிக்கப்படல் வேண்டும்.

### 2.17 வருமானங்களை ஏற்றங்கீகரித்தல்

#### 2.17.1 விற்கப்பட்ட பண்டங்களும் ஆற்றப்பட்ட சேவைகளும்

உரிமையாண்மையின் குறிப்பிடத்தக்க ஆபத்துக்களும் நன்மைகளும் வாங்குநருக்கு மாற்றப்பட்டிருக்கும் போது பண்டங்களை விற்பனை செய்வதன் மூலம் ஈட்டப்பட்ட வருமானம் வருமானக் கூற்றில் ஏற்றங்கீகரிக்கப்படுகிறது. அறவிடுவதற்குள்ள பிரதிப்பயன் சார்ந்த கிரயத்தை அறவிட்டுக்கொள்ளல் அல்லது பண்டங்களை மீள அனுப்பக்கூடியதாக இருத்தல் பற்றி குறிப்பிடத்தக்க நிச்சயமற்ற தன்மைகள் காணப்படுமாயின், எந்தவொரு வருமானமும் ஏற்றங்கீகரிக்கப்பட மாட்டா.

#### 2.17.2 வட்டி வருமானம்

வட்டி வருமானம் கால விகிதாசார அடிப்படையொன்றில் ஏற்றங்கீகரிக்கப்படுவதோடு, அவ்வாறான வருமானம் கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் சாதாரணமான செயற்பாடுகளை மேற்கொள்ளும்போது விற்கப்படும் பண்டங்களுக்கு அல்லது நிறைவேற்றப்படும் சேவைகளுக்கு கிடைக்கின்ற அல்லது கிடைக்க வேண்டிய பிரதிப்பயனின் நியாயமான பெறுமானத்தைக் கொண்டதாகும். பெறுமதிசேர் வரி (VAT), திரும்பல்கள், நியாயமான தோராயம், வர்த்தக தள்ளுபடிகள் இருப்பின், அவற்றின் தேறிய பெறுமதியின் மூலம் வருமானம் காட்டப்படுகிறது.

### 2.18 செலவுகளை ஏற்றங்கீகரித்தல்

#### 2.18.1 செயற்பாட்டுச் செலவுகள்

செலவுகள் அட்டுறு அடிப்படையில் ஏற்றங்கீகரிக்கப்படுகின்றன. காலப்பகுதிக்கு உரிய இலாபத்தைக் கணக்கிடும்போது பொதுவான வியாபார நடபடிமுறையிலும் அத்துடன் வினைத்திறனான நிலையில் ஆதனங்கள், பொறித்தொகுதிகள் மற்றும் சாதனங்களைப் பராமரிக்கும்போது உறப்பட்ட அனைத்துச் செலவுகளும் வருமானத்துடன் சேர்க்கப்படுகின்றன.

#### 2.18.2 தேறிய நிதிக் கிரயம்

தேறிய நிதிக் கிரயமானது வருமானக் கூற்றில் ஏற்றங்கீகரிக்கப்படுகின்ற கடன் பெறல்களுக்காக செலுத்தப்பட வேண்டிய வட்டி, முதலீடுசெய்யப்பட்ட நிதிகளிலிருந்து கிடைக்க வேண்டிய வட்டி, அந்நியச் செலாவணி இலாபங்கள் மற்றும் நட்டங்கள் என்பவற்றை உள்ளடக்கியதாகும்.

கடன் பெறல்கள் தொடர்பில் உறப்பட்ட அனைத்து வட்டிகளும் ஏனைய கிரயமும் தேறிய நிதிக் கிரயத்தின் ஒரு பகுதியாக செலவிடப்பட்டுள்ளது.

# இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபை
## நிதிச்சார் கூற்றுக்களுக்கான குறிப்புகள் (எஞ்சிய பகுதி)

## 3. நிதிசார் இடர் முகாமைத்துவம்

### 3.1 நிதிசார் இடர்க் காரணிகள்

கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் முக்கிய நிதிக் கருவிகள் வங்கிக் கடன், குறுகிய கால வைப்புக்கள், காசு என்பவற்றை உள்ளடக்கியதாகும். கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் செயற்பாடுகளின் திரவத்தன்மையை மேம்படுத்துவதும் பேணிச் செல்வதும் கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் ஒதுக்குகள் மீது கிடைக்கின்ற நன்மையை உயர்ந்தபட்சமாக்குவதும் இந்நிதிக் கருவிகளின் முக்கிய நோக்கமாகும். கைத்தொழில் அபிவிருத்திச் சபைக்கு அதன் வியாபார செயற்பாடுகளிலிருந்து நேரடியாகவே ஏற்படக்கூடிய கிடைத்தற்பாலதான வர்த்தக மற்றும் செலுத்த வேண்டிய வர்த்தக முதலான வேறு பல்வேறு நிதிக் கருவிகள் உள்ளன.

| | தரச் சான்றுறுதி பெற்ற உணவு ஆய்வுகூடம் - கட்டம் I | 15,302,374 | 18,499,830 |
| | தரச் சான்றுறுதி பெற்ற உணவு ஆய்வுகூடம் - கட்டம் II | 66,275,633 | 69,554,952 |
| | அச்சுவேலி 100 மில்லியன் கருத்திட்டம் - 2018 | 7,259,371 | 7,259,371 |
| | கிராம அபிவிருத்திக் கருத்திட்டம் | 2,722,356 | 2,722,356 |
| | அமைச்சு நிதியம் - "நங்வமு லங்கா" | 5,117,669 | 5,117,669 |
| | கொதிகலன் நிலையம் | 8,493,975 | - |
| | SVA சூத்திரமொன்றைத் தயாரித்தல் | 675,000 | - |
| | | **643,854,473** | **581,577,397** |

| 27 | திரண்ட இலாபம்/ (நட்டம்) | 2023 | 2022 (மீள் வெளிப்படுத்திய) |
|---|---|---|---|
| | முன் கொணரப்பட்ட திரண்ட நட்டம் | (60,791,523) | (204,371,533) |
| | முந்திய ஆண்டின் சீராக்கங்கள் (தொடர்புக் குறிப்பு 27.1) | (256,263) | 1,794,849 |
| | காலப்பகுதிக்குரிய மேன்மிகை | 28,365,345 | 141,785,161 |
| | முன் கொண்டுசென்ற திரண்ட நட்டம் | **(32,682,441)** | **(60,791,523)** |

| 27.1 | முந்திய ஆண்டின் சீராக்கங்கள் | 2023 | 2022 (மீள் வெளிப்படுத்திய) |
|---|---|---|---|
| | 2021.01.01 ஆம் திகதி மேலதிக கொடுப்பனவுகள்/ மீதிகளை சீர்செய்தல் | - | 0 |
| | 2021 மேலதிக மதிப்பீடு | - | 1,290 |
| | 2021 க்கான மேலதிக மதிப்பீடு | - | 1,320 |
| | நிராகரிக்கப்பட்ட காசோலை - கொவிட் செலவுகள் - பன்னல | - | 2,900 |
| | 2021 க்கான மேலதிக மதிப்பீடு | - | 3,332 |
| | நிராகரிக்கப்பட்ட காசோலை (வளவாளர்கள் TSD) | - | 5,000 |
| | நிராகரிக்கப்பட்ட காசோலை - லக்கம் மீளளிப்பு | - | 5,475 |
| | நிராகரிக்கப்பட்ட காசோலை - உரிமக் கட்டணம் | - | 6,000 |
| | நிராகரிக்கப்பட்ட காசோலை | - | 7,500 |
| | நிராகரிக்கப்பட்ட காசோலை (கண்காட்சி - பதுளை) | - | 8,490 |
| | நிராகரிக்கப்பட்ட காசோலை - ஹேமா கமகே போனஸ் - 2020 | - | 13,500 |
| | இ.பத்மராணி 3138 | - | 15,831 |
| | கோரப்படாத அலுவலக வாடகை - கொழும்பு மாவட்ட அலுவலகம் | - | 15,972 |
| | 2019.01.01 - 2019.12.31 காலத்திற்குரிய வாடகை | - | 30,000 |
| | நிராகரிக்கப்பட்ட காசோலை - கொவிட் செலவு - குருணாகல் | - | 54,420 |
| | 2021.12.31 இல் உள்ளவாறான மிகை மதிப்பீடு | - | 503,014 |
| | நிராகரிக்கப்பட்ட காசோலை (மூங்கில் மரக் கருத்திட்டம்) | - | 877,500 |

| 27.1 எஞ்சிய பகுதி….. | 2023 | 2022 (மீள் வெளிப்படுத்திய) |
|---|---|---|
| கணக்காய்வாளர் தலைமையதிபதி - கணக்காய்வுக் கட்டணம் - 2020 | - | (112,800) |
| பண்டிகை முற்பணம் - பிணைதாரர்கள் - மன்னார் - ஜே.எம்.ஏ.லெம்பர்ட் | - | (1,875) |
| பண்டிகை முற்பணம் - பிணைதாரர்கள் - மன்னார் - எம்.ரி.எம்.பர்சத் | - | (1,875) |
| ஆர்.எம்.எம்.என்.கே.ரத்நாயக்க TSD மீளளிப்பு | - | (35,000) |
| விலைக் குழு அங்கத்துவக் கட்டணம் - பீ.ஜ.யூ.ரத்னமலல இரும்பல்லாத | - | (5,000) |
| பயணம் - பொருள் இருப்புக் கணிப்பீடு | - | (3,951) |
| போனஸ்-2020 டப்ளியு.ஜீ.ஹேமா கமகே | - | (13,500) |
| பயணம் - பொருளிருப்புக் கணிப்பீடு - யாழ்ப்பாணம் | - | (1,100) |
| பயணம் - பிலிமத்தலாவை | - | (2,320) |
| 2021 க்கான குறைமதிப்பீடு/கொவிட்-19 செலவு | - | (8,000) |
| குறைமதிப்பீடு/2021க்கான செலவுகள் (பழுதுப்பட்ட உலோக துண்டுப்பொருள் | - | (6,000) |
| 2021.12.31 திகதிக்கு குறைமதிப்பீட்டுக்கான ஏற்பாடுகள் | - | (200) |
| குறை மதிப்பீடுகள்/2021க்கான செலவுகள் (பழுதுப்பட்ட உலோக துண்டுப்பொருள் கருத்திட்டம்) | - | (7,800) |
| 2021 அட்டுறு செலவுகள்/ மீளளிப்புகள் | - | (6,247) |
| மேலதிக ஏற்பாடு - பிரயாணங்கள் | - | 100,521 |
| மீளத் திருப்பிய பற்றுச்சீட்டு | - | (3,000) |
| மீளத் திருப்பிய பற்றுச்சீட்டு | - | (1,500) |
| மீளத் திருப்பிய பற்றுச்சீட்டு | - | (3,240) |
| மேலதிக ஏற்பாடு - மிகையூதியம் | - | 352,125 |
| மேலதிக ஏற்பாடு (பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்) | - | 4,068 |
| விற்பனைக் கிரயம் (2019)-W/06/19,W/30/19 | (11,400) | - |
| குறை மதிப்பீடுகள் | (174,798) | - |
| விற்பனைக் கிரயத்திற்கான சீராக்கல் - பழுதுப்பட்ட உலோக துண்டுப்பொருள் கருத்திட்டம் | (70,065) | - |
| | **(256,263)** | **1,794,849** |

## 28 ஓய்வூதிய நன்மைக் கடப்பாடுகள்

நிதிநிலைக் கூற்றில் ஏற்றங்கீகரிக்கப்பட்டுள்ள தொகைகள் கீழ் காட்டப்பட்டுள்ளவாறு தீர்மானிக்கப்படும்.

| | 2023 | 2022 (மீள் வெளிப்படுத்திய) |
|---|---|---|
| நிதியளிக்கப்படாத கடப்பாடுகளின் இன்றைய பெறுமதி | 188,634,080 | 206,829,087 |
| நிதிநிலைக் கூற்றில் பொறுப்பு | **188,634,080** | **206,829,087** |

ஆண்டினுள் குறித்துரைக்கப்பட்ட நன்மைக் கடப்பாடுகளின் அசைவு பின்வருமாறு:

| | 2023 | 2022 (மீள் வெளிப்படுத்திய) |
|---|---|---|
| சனவரி 01 இல் உள்ளவாறு | 206,829,087 | 206,131,395 |
| தற்போதைய சேவைக் கிரயம் | 11,282,050 | 12,630,367 |
| வட்டிக் கிரயம் | 16,554,674 | 18,172,631 |
| பின்னைய தொழில் நன்மைக் கடப்பாடுகள் மீதான ஆயுட்கணக்கர் நட்டம்/(இலாபம்) | (11,768,860) | (15,052,636) |
| | 222,896,950 | 221,881,757 |
| செலுத்திய நன்மைகள் | (34,262,871) | (15,052,670) |
| திசெம்பர் 31 இல் உள்ளவாறு | **188,634,080** | **206,829,087** |

பயன்படுத்தப்பட்ட பிரதான ஆயுட்கணக்கர் முற்கோள்கள் பின்வருமாறு அமைந்தது.

| | 2023 | 2022 (மீள் வெளிப்படுத்திய) |
|---|---|---|
| தள்ளுபடி விகிதம் | 9.50% | 9.50% |
| எதிர்கால சம்பள அதிகரிப்பு | 5.00% | 5.00% |
| ஓய்வுபெறும் வயது | 60 | 60 |

| 29 விசேட கருத்திட்டக் கொடைகள் | 2023 | 2022 (மீள் வெளிப்படுத்திய) |
|---|---|---|
| அமைச்சு நிதியம் Robot Arm (CERA கருத்திட்டம்) | - | 661,300 |
| தாய்லாந்து அறக்கட்டளை நிறுவனங்கள் பொனென்சா - வெளிநாட்டலுவல்கள் அமைச்சு | 30,630 | - |
| | **30,630** | **661,300** |

(அனைத்துத் தொகைகளும் இலங்கை ரூபாவில் காட்டப்பட்டுள்ளன.)

| 30 | அரசாங்கத்துக்கு செலுத்த வேண்டியவை | 2023 | 2022 (மீள் வெளிப்படுத்திய) |
|---|---|---|---|
| | உண்ணாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம் | 28,879 | 28,879 |
| | உண்ணாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம் (முத்திரைத் தீர்வை) | 12,115 | 26,050 |
| | | **40,994** | **54,929** |

| 31 | சபைகளுக்கும் கூட்டுத்தாபனங்களுக்கும் செலுத்த வேண்டியவை | 2023 | 2022 (மீள் வெளிப்படுத்திய) |
|---|---|---|---|
| | இலங்கை மத்திய வங்கி (EPF) | 13,253,524 | 6,891,980 |
| | ஊழியர் நம்பிக்கைப்பொறுப்பு நிதியம் (ETF) | 1,807,299 | 867,546 |
| | | **15,060,823** | **7,759,526** |

| 32 | வர்த்தக மற்றும் பிற கடன்கொடுநர்கள், ஏற்பாடுகள், அட்டுறு செலவுகள் | 2023 | 2022 (மீள் வெளிப்படுத்திய) |
|---|---|---|---|
| | வர்த்தகக் கடன்கொடுநர்கள் (தொடர்புக் குறிப்பு 32.1) | 132,979,090 | 79,446,049 |
| | செலுத்தற்பாலவை "SGS லங்கா தனியார் கம்பனி" | 2,820,737 | 6,635,504 |
| | RPD & SC - MOU செயல் திட்டம் - பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு | 3,498,000 | 3,498,000 |
| | கைத்தொழில் கடன் நிதியம் - யுனிலீவர் லங்கா | 10,000,000 | - |
| | தேசத்தைக் கட்டியெழுப்புவதற்கான வரி 2% | 3,706,617 | 3,706,617 |
| | செலுத்தற்பாலதான பணியாட்குழு குறைப்புக்கள் | 12,387 | 12,387 |
| | செலுத்தற்பாலதான உழைக்கும்போது செலுத்தும் வரிகள் | - | 11,479 |
| | நானாவித கடன்கொடுநர்கள் | 399,453 | 399,453 |
| | பிற கடன்கொடுநர்கள் | 40,883 | 40,883 |
| | சில்லறைக் கடன்கொடுநர்கள் - தலைமையகம் | 2,047,780 | 1,946,480 |
| | செலுத்தற்பாலதான பெறுமதிசேர் வரி (VAT) | 16,870,579 | 9,583,175 |
| | சமூகப் பாதுகாப்பு பங்களிப்பு வரி 2.5% | 1,060,745 | 969,555 |
| | செலுத்தித் தீர்க்கப்பட வேண்டிய வைப்புக்கள் | 11,535,511 | 4,464,752 |
| | லக் நிப்பயும் சந்தைப்படுத்தல் மற்றும் கண்காட்சி நிலையம் - கடன்கொடுநர்கள் | 89,753 | 89,753 |
| | வாடிக்கையாளர்களிடமிருந்து கிடைத்த முற்பணங்கள் | 46,677,588 | 26,785,591 |
| | பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்கான முற்பணங்கள் | - | 775,070 |
| | பிணை வைப்புக்கள் | 337,853 | 330,229 |
| | மீளளிப்பதற்கான வைப்புக்கள் - கைத்தொழிற் பேட்டைகள் | 91,169,520 | 83,615,560 |
| | மீளளிப்பதற்கான வைப்புக்கள் - கைத்தொழிற்பேட்டைகள் அல்லாத | 12,423,771 | 3,145,629 |
| | செலுத்தப்பட வேண்டிய நிறுத்திவைத்தற் தொகைகள் | 4,951,615 | 4,512,355 |
| | முன்கூட்டி செலுத்திய 30 வருட நிலவாடகை | 1,777,361 | 1,841,028 |
| | வைத்திய உதவித் திட்டம் | 4,833,048 | 4,429,240 |
| | நலன்புரிச் சங்கம் | 71,329 | 68,931 |
| | சிக்கனச் சங்கம் | - | 4,418 |
| | தொழிற்சங்கம் | - | 200 |
| | தொழில் வழக்குகளுக்கான ஏற்பாடுகள் | 4,294,311 | 4,294,311 |
| | உப ஒப்பந்த கடன்கொடுநர்கள் | 95,046 | 95,046 |
| | திரண்ட செலவுகள் (தொடர்புக் குறிப்பு 32.2) | 46,007,396 | 53,338,915 |
| | லக்கம் கடன்கொடுநர்கள் | 4,513,236 | 1,746,255 |
| | பொருள் விற்பனை நிலையம் - தோல்பொருள் | (632,300) | (632,300) |
| | செலுத்தற்பாலதான சம்பளங்கள் | 90,750 | 1,489,344 |
| | MOU-RPD மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு | 1,880,000 | - |
| | செலுத்தற்பாலதான சதக் கட்டுப்பாடு | - | 30 |
| | | **403,552,056** | **296,643,936** |

| 32.1 | வர்த்தகக் கடன்படுநர்கள் | 2023 | 2022 (மீள் வெளிப்படுத்திய) |
|---|---|---|---|
| | கட்டுமானங்கள் | 20,308,187 | 10,090,303 |
| | பழுதப்பட்ட உலோக துண்டுப்பொருள் கருத்திட்டம் | 9,161,255 | 11,112,797 |
| | பிற வழங்கல்கள் | 65,632,084 | 23,555,765 |
| | அட்டுறு கொள்வனவுகள் | 37,877,564 | 34,687,184 |
| | | **132,979,090** | **79,446,049** |

| 32.2 அட்டுறு செலவுகள் | 2023 | 2022 (மீள் வெளிப்படுத்திய) |
|---|---|---|
| அட்டுறு பதில் லீவுக் கொடுப்பனவு | 1,759,772 | 1,310,378 |
| வர்த்தக விளம்பரச் செலவுகள் | 26,163 | 26,163 |
| பணிக்கொடைக் கொடுப்பனவு | 0 | 9,894,875 |
| செலுத்த வேண்டிய அமய கூலி | 2,014,452 | 2,444,803 |
| மின் கட்டணம் | 25,314 | 16,316 |
| நீர்க் கட்டணம் | 5,208 | 2,248 |
| லீவு நாள் கொடுப்பனவு | 851,809 | 442,482 |
| தங்குமிட செலவுகள் | 1,800 | 9,900 |
| பத்திரிகைகளும் சஞ்சிகைகளும் | 12,560 | 46,460 |
| பிற பொருள்கள் | (2,210) | (2,210) |
| மேலதிக நேரம் | 5,277,808 | 3,107,866 |
| நலன்புரி | 6,100 | - |
| வீதவரிகளும் வரிகளும் | 12,754,603 | 12,926,586 |
| எழுதுகருவிகள் | 111,648 | 111,648 |
| பயிலுநர் கொடுப்பனவுகளும் நாட் சம்பளமும் | 268,350 | 201,484 |
| பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் | 7,021 | 234,783 |
| பிரயாணச் செலவுகளும் உதவிப்பணமும் | 3,134,805 | 790,821 |
| புரள்வு வரி | 246,728 | 246,728 |
| பயன்படுத்தாத மருத்துவ விடுமுறைகளுக்கு செலுத்தப்பட வேண்டிய வாகன காப்புறுதி உரிமைக்கோரிக்கைகள் | 19,286,410 | 21,490,451 |
| வாகன காப்புறுதி உரிமைக்கோரிக்கை | - | 37,134 |
| நானாவித | 154,094 | - |
| கண்காட்சிகள் | 64,960 | - |
| | **46,007,396** | **53,338,915** |

# 2022 நிதிக் கூற்றுக்களில் உருப்படிகளுக்காக செய்யப்பட்ட திருத்தங்கள்

2022 ஆம் ஆண்டில் SAGE 200 ERP முறைமைக்கு தரவுகளைச் சேர்க்கும் கட்டத்தில் கற்றல்களும் பயிற்சிகளும் இடம்பெற்று வந்தமையால், முறைமையில் பல தவறுகளும் விடுபாடுகளும் இடம்பெற்றதுடன், 2023 ஆம் ஆண்டில் சீரசெய்யப்பட்டது. பின்வரும் கணக்குகளைத் தயாரித்து 2022 ஆம் ஆண்டின் ஒப்பீட்டு ரீதியான எண்ணிக்கைகள் அதன்படி மாற்றப்பட்டன. துறைகளும் மாற்றத்தின் தாக்கங்களும் பின்வருமாறு:-

**நிதியாண்டு - 2021**

| குறியீடு | விபரம் | மாற்றப்பட முந்திய தொகை | | மாற்றப்பட்டதற்கு பிந்திய தொகை | | மாற்றப்பட்ட தொகை | |
|---|---|---|---|---|---|---|---|
| 70000 | வர்த்தகக் கடன்படுநர்கள் | 27,190,036 | - | 29,898,876 | 2,696 | (2,708,840) | (2,696) |
| 79000 | வர்த்தகக் கடன்கொடுநர்கள் | 1,044,679 | 28,498,260 | 1,270,177 | 28,190,798 | (225,497) | 307,462 |
| 30048 | கணினிகள் மற்றும் துணையுறுப்புகள் பராமரிப்பு | 8,000 | - | 65,500 | - | (57,500) | - |
| 30056 | அலுவலக உபகரணங்கள் பராமரிப்பு | 16,214 | - | 51,464 | - | (35,250) | - |
| 10000 | விற்பனைகள் | - | 16,003,752 | - | 18,028,260 | - | (2,024,509) |
| 80027 | மீளளிக்கக்கூடிய வைப்புக்கள் - கைத்தொழிற் பேட்டைகள் | - | 73,867,694 | - | 74,375,294 | - | (507,600) |
| 80102 | விற்பனைகள் மீதான பெறுமதிசேர் வரி | - | 8,656,093 | - | 8,838,921 | - | (182,828) |
| 25010 | நொத்தாரிசுக் கட்டணம் | - | - | - | 32,400 | - | (32,400) |
| 10008 | மிகைக் கட்டணம் - கைத்தொழிற் பேட்டைகள் | - | 742,244 | - | 741,466 | - | 778 |
| 10005 | நில வாடகை - கைத்தொழிற் பேட்டைகள் | - | 8,013,196 | - | 8,005,418 | - | 7,778 |
| 10012 | கருத்திட்ட அறிக்கைகள் | - | 55,496 | - | 44,850 | - | 10,646 |
| 60027 | கையிருப்பு - பொறியியல்- EPC- மூலப்பொருள்கள் | 1,526,860 | - | 1,516,290 | - | 10,570 | - |
| 60103 | கையிருப்பு - பொது - அச்சீட்டு - மூலப்பொருள்கள் | 53,546 | - | 39,796 | - | 13,750 | - |
| 60101 | கையிருப்பு - பொது - எழுதுகருவிகள் - மூலப்பொருள்கள் | 2,233,704 | - | 2,154,704 | - | 79,000 | - |
| 58040 | முதலீட்டுச் சொத்துக்கள் மீதான காணி முன்னேற்றல்கள் | 931,135,635 | - | 930,910,137 | - | 225,497 | - |
| 58011 | ஆய்வுகூட உபகரணங்கள் கிரயம் | 91,575,823 | - | 91,300,923 | - | 274,900 | - |

**நிதியாண்டு - 2022**

| குறியீடு | விபரம் | மாற்றப்பட முந்திய தொகை | | மாற்றப்பட்டதற்கு பிந்திய தொகை | | மாற்றப்பட்ட தொகை | |
|---|---|---|---|---|---|---|---|
| 10000 | விற்பனை | - | 32,226,219 | - | 38,799,193 | - | (6,572,974) |
| 10003 | வாடகை - கைத்தொழிற் பேட்டைகள் | - | 7,647,175 | - | 7,249,876 | - | 397,298 |
| 10005 | நில வாடகை - கைத்தொழிற் பேட்டைகள் | - | 23,912,258 | - | 24,703,815 | - | (791,556) |
| 10006 | மேலதிக நில வாடகை - கைத்தொழிற் பேட்டைகள் | - | 2,030,475 | - | 2,007,193 | - | 23,281 |
| 10007 | நீர்க் கட்டணம் - கைத்தொழிற் பேட்டைகள் | - | 3,565,432 | - | 3,490,499 | - | 74,934 |
| 10008 | மேலதிக வரவு - கைத்தொழிற் பேட்டைகள் | - | 864,980 | - | 838,393 | - | 26,586 |
| 10011 | விற்பனை - கெஸ்பர் | - | 35,875 | - | 51,875 | - | (16,000) |
| 10016 | சேவைக் கட்டணம் - ஆய்வுகூட சோதனைகள் | - | - | - | 32,826 | - | (32,826) |
| 10019 | வெளியீடுகள் விற்பனை | - | - | - | 500 | - | (500) |
| 10021 | பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் | - | 11,664,890 | - | 20,753,581 | - | (9,088,691) |
| 20000 | விற்பனைக் கிரயம் - நேரடிப் பொருள்கள் | 11,345,391 | - | 11,960,148 | - | (614,757) | - |

| குறியீடு | விபரம் | மாற்றப்பட முந்திய தொகை | | மாற்றப்பட்டதற்கு பிந்திய தொகை | | மாற்றப்பட்ட தொகை | |
|---|---|---|---|---|---|---|---|
| 20010 | விற்பனைக் கிரயம் - பழுதுப்பட்ட உலோக துண்டுப்பொருள் கருத் | 193,317,401 | - | 193,339,535 | - | (22,134) | - |
| 20014 | விற்பனைக் கிரயம் - கெஸ்பர் | 1,596,500 | - | 1,349,205 | - | 247,295 | - |
| 20015 | விற்பனைக் கிரயம் - நேரடி உழைப்பு | 4,900,620 | - | 5,497,845 | - | (597,225) | - |
| 20026 | பொது மேந்தலை | 1,387,776 | - | 1,799,914 | - | (412,138) | - |
| 20027 | இயந்திரங்கள் பொது மேந்தலை | 1,066,268 | - | 1,346,257 | - | (279,988) | - |
| 20065 | பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் | 12,487,459 | - | 12,729,704 | - | (242,245) | - |
| 20100 | கொள்வனவுகள் அட்டுறு | - | 16,019,322 | - | - | - | 16,019,322 |
| 20101 | கொள்வனவுக் கிரய மாறி | 23,030 | - | - | - | 23,030 | - |
| 25008 | நானாவித வருமானம் | - | - | - | 240,386 | - | (240,386) |
| 25030 | ஆய்வுகூட சோதனைகளுக்கான சேவைக் கட்டணம் | - | 683,115 | - | 1,635,359 | - | (952,244) |
| 25066 | கைத்தொழில் கண்காட்சி வருமானம் | - | 28,635,000 | | 29,635,000 | | (1,000,000) |
| 25081 | பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்கான அனுசரணை-TSD | - | - | - | 600,000 | - | (600,000) |
| 30034 | பொருள் இருப்புக் கணிப்பு செலவுகள் | 807,308 | - | 872,239 | - | (64,931) | - |
| 30035 | சுற்றுலா (உள்நாடு) | 2,198,724 | - | 2,356,946 | - | (158,222) | - |
| 30039 | எழுதுகருவிகளும் அலுவலகத் தேவைகளும் | 46,086 | - | 47,566 | - | (1,480) | - |
| 30046 | கட்டிடங்கள் பராமரிப்பு | 57,000 | - | 117,045 | - | (60,045) | - |
| 30052 | வாகனங்கள் பராமரிப்பு | 466,331 | - | 353,931 | - | 112,400 | - |
| 30055 | அலுவலக பராமரிப்புச் செலவுகள் | 1,975 | - | 3,335 | - | (1,360) | - |
| 30056 | அலுவலக உபகரணங்கள் பராமரிப்பு | - | - | 102,500 | - | (102,500) | - |
| 30070 | மின்சாரம் | 121,511 | - | 138,821 | - | (17,311) | - |
| 30074 | அஞ்சல் கட்டணமும் தந்திகளும் | 2,885 | - | 5,045 | - | (2,160) | - |
| 30075 | நீர்க் கட்டணம் | 37,845 | - | 40,093 | - | (2,248) | - |
| 30086 | பத்திரிகைகளும் சஞ்சிகைகளும் | 364,840 | - | 411,300 | - | (46,460) | - |
| 30097 | நலன்புரி | 113,001 | - | 124,245 | - | (11,244) | - |
| 30102 | சபை ஊழியர்களுக்கான உள்நாட்டுப் பயிற்சி | 44,187 | - | 78,434 | - | (34,247) | - |
| 30122 | நானாவித செலவுகள் | 16,642 | - | 29,646 | - | (13,004) | - |
| 30131 | பெறுமானத் தேய்வு - ஆய்வுகூட உபகரணங்கள் | 7,242,658 | - | 7,214,415 | | 28,243 | - |
| 30134 | பெறுமானத் தேய்வு - அலுவலக உபகரணங்கள் | 78,897 | - | 79,300 | - | (403) | - |
| 40002 | 2022 "கைத்தொழில்" கண்காட்சிக்கான செலவுகள் | - | - | 57,067,560 | - | (57,067,560) | - |
| 58011 | ஆய்வுகூட உபகரணங்கள் கிரயம் | 97,096,330 | - | 96,821,430 | - | 274,900 | - |
| 58012 | ஆய்வுகூட உபகரணங்கள் - திரண்ட பெறுமானத ̀தேய்வு | 41,612,117 | - | 41,583,874 | - | 28,243 | - |
| 58018 | அலுவலக உபகரணங்கள் கிரயம் | 77,548,309 | - | 77,590,309 | - | (42,000) | - |
| 58019 | அலுவலக உபகரணங்கள் - திரண்ட பெறுமானத ̀தேய்வு | - | 54,143,796 | - | 54,144,199 | - | (403) |
| 58040 | முதலீட்டுச் சொத்துக்கள் மீதான காணி முன்னேற்றல்கள் | 1,006,987,585 | - | 1,006,762,087 | - | 225,497 | - |
| 60023 | கையிருப்பு - பொறியியல் - இலத்திரனியல் - மூலப்பொருள்கள் | 2,712,996 | - | 2,670,996 | - | 42,000 | - |
| 60027 | கையிருப்பு - பொறியியல் - EPC - மூலப்பொருள்கள் | 1,073,806 | - | 1,063,236 | - | 10,570 | - |
| 60062 | கையிருப்பு - இறப்பர் - இரசாயனப் பதார்த்தங்கள்- மூலப்பொருள்க | 4,766,900 | - | 5,123,150 | - | (356,250) | - |
| 60101 | கையிருப்பு - பொது - எழுதுகருவிகள் - மூலப்பொருள்கள் | 4,202,175 | - | 4,123,175 | - | 79,000 | - |
| 60103 | கையிருப்பு - பொது - அச்சீட்டு - மூலப்பொருள்கள் | 52,722 | - | 38,972 | - | 13,750 | - |
| 60106 | கையிருப்பு - பொது - நலன்புரி | 770,240 | - | 763,896 | - | 6,344 | - |
| 60120 | கையிருப்பு - பிரதேச அபிவிருத்தி | 1,517,581 | - | 1,764,876 | - | (247,295) | - |

| குறியீடு | விபரம் | மாற்றப்பட முந்திய தொகை | | மாற்றப்பட்டதற்கு பிந்திய தொகை | | மாற்றப்பட்ட தொகை | |
|---|---|---|---|---|---|---|---|
| 60800 | WIP - நேரடிப்பொருள்கள் (H/O) | 925,636 | - | 473,429 | - | 452,207 | - |
| 60801 | WIP - நேரடி உழைப்பு | 1,218,787 | - | 621,562 | - | 597,225 | - |
| 60802 | WIP - பொது மேந்தலை | 426,576 | - | 14,438 | - | 412,138 | - |
| 60804 | WIP - இயந்திர பொது மேந்தலை | 290,301 | - | 10,313 | - | 279,988 | - |
| 70000 | வர்த்தக கடன்படுநர்கள் | 10,940,272 | 25,608,285 | 22,073,180 | 12,631,212 | (11,132,908) | 12,977,074 |
| 71003 | கண்காட்சி - 2022 | 65,067,560 | - | - | - | 65,067,560 | - |
| 71014 | தனியார் முற்பணங்கள் - கே.ஐ.லாலசேன | 343,095 | - | 353,595 | - | (10,500) | - |
| 71059 | கண்காட்சியிலிருந்து கிடைக்க வேண்டிய தொகைகள் | - | - | - | 1,000,000 | - | (1,000,000) |
| 72020 | கிராம அபிவிருத்தி - BOC கணக்கு 4204245 | 6,514,804 | - | 6,520,554 | - | (5,750) | - |
| 72079 | பமுனுவ பித்தளை நிலையம் - பாலித புஷ்பகுமா | - | - | - | 5,000 | - | (5,000) |
| 72134 | கையிலுள்ள காசு | 522,073 | - | 429,859 | - | 92,214 | - |
| 72140 | பயிற்சி கட்டுநிதி | - | - | - | 193,216 | - | (193,216) |
| 79000 | வர்த்தகக் கடன்கொடுநர்கள் | 5,610,893 | 33,285,311 | 5,737,346 | 25,477,798 | (126,452) | 7,807,513 |
| 80027 | மீள செலுத்தக்கூடிய வைப்புக்கள் - கைத்தொழிற் பேட்டைகள் | - | 80,384,796 | - | 83,615,560 | - | (3,230,764) |
| 80042 | பணிக்கொடை கொடுப்பனவு | - | 10,247,000 | - | 9,894,875 | - | 352,125 |
| 80047 | அட்டுறு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் | - | 238,851 | - | 234,783 | - | 4,068 |
| 80050 | தங்குமிட செலவு | - | - | - | 9,900 | - | (9,900) |
| 80051 | பிரயாணச் செலவு | - | 500,658 | - | 790,821 | - | (290,163) |
| 80052 | மின்சாரம் | - | - | - | 16,316 | - | (16,316) |
| 80055 | நீர்க் கட்டணம் | - | - | - | 2,248 | - | (2,248) |
| 80056 | பத்திரிகைகள் | - | - | - | 46,460 | - | (46,460) |
| 80102 | விற்பனை மீதான பெறுமதிசேர் வரி | - | 36,049,617 | - | 37,053,859 | - | (1,004,242) |
| 80200 | செலுத்த வேண்டிய பெறுமதிசேர் வரி | 27,477,752 | - | 27,470,684 | - | 7,069 | - |
| 80202 | கொள்வனவு அட்டுறு | - | 18,670,392 | - | 34,687,184 | - | (16,016,792) |
| 90000 | வருமானத்தை விட அதிகரித்த செலவு (திரண்ட) | 279,319,545 | - | 278,963,352 | - | 356,193 | - |
| 90006 | அரச பங்களிப்பு திரண்ட (மூலதன) | - | 239,059,326 | - | 258,785,672 | - | (19,726,347) |
| 90007 | அரச கொடைகள் நடப்பு வருடம் (மூலதன) | - | 19,726,347 | - | - | - | 19,726,347 |

# நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் மீளாய்வு

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

**எனது இல:** ஐஎம்ரி/ஏ/ஐடீபி/எவ்ஏ/2023/10 **திகதி:** 2024 யூலை 26

தவிசாளர்,
இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபை.

**இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் 2023 திசெம்பர் மாதம் 31 ஆந் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களும் பிற சட்ட மற்றும் ஒழுங்குறுத்துகைத் தேவைப்பாடுகளும் குறித்த 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 ஆம் பிரிவிற்கமைவான கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கை**

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் 2023 திசெம்பர் மாதம் 31 ஆந் திகதியில் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமைமாற்றக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் பொருண்மையான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்கள் அடங்கிய நிதிக் கூற்றுக்களுக்கு உரிய குறிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் மாதம் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசினது அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தினதும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதியதிகாரச் சட்டத்தினதும் ஏற்பாடுகளைப் பின்பற்றி எனது பணிப்பின் கீழ் கணக்காய்வுக்கு உட்படுத்தப்பட்டது. அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரைக்கமைய எனது அறிக்கை உரிய காலத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

எனது அறிக்கையில் 'முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை' என்ற பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களினால் எழுகின்ற பாதிப்பு தவிர, சபையின் நிதிக்கூற்றுக்களின் ஊடாக 2023 திசெம்பர் மாதம் 31 ஆந் திகதியில் உள்ளவாறான நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயற்பாடு, காசுப்பாய்ச்சல்கள் என்பன இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கமைய உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையொன்றைப் பிரபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

(அ) இலங்கை கணக்கீட்டு நியம இல.19 இன் 57 ஆம் பந்திக்கமைய நிறுவனத்தினால் ஊழியர் நன்மைகளின் பகிர்வை கணிப்பிடும்போது ஆயுட்கணக்கர் முறையைப் பயன்படுத்த வேண்டும். சபையினால் அதனைக் கணக்கிடும்போது ஆயுட்கணக்கர் கருதுகோள்கள் பயன்படுத்தப்படுகின்றதென நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ளபோதும், கணக்கிடும்போது ஏற்பட்ட வழுவொன்று காரணமாக ரூ.146,328,424 ஆக இருக்க வேண்டிய ஊழியர் நன்மைகள் பொறுப்பு ரூ.188,643,080 என்று கணக்கிடப்பட்டிருப்பதன் மூலம் ஆண்டிற்குரிய இலாபம் ரூ.3,056,332 இனாலும், வேறு விரிவான வருமானங்கள் ரூ.39,249,324 இனாலும் குறைத்துக் கணக்கிடப்பட்டு நிதிநிலைமைக் கூற்றில் ஊழியர் நன்மைப் பொறுப்பு ரூ.42,305,656 இனால் மிகையாகக் கணக்கிடப்பட்டிருந்தது.

(ஆ) 2016 ஆம் ஆண்டிற்கு முன்பிருந்து காணப்படும் மூலதனக் கொடைகளின்கீழ் காட்டப்பட்டுள்ள ரூ.10,500,000 பெறுமதியான Cess Fund எனும் கொடை இலங்கை கணக்கீட்டு நியம இல. 20 இன் 26 அல்லது 27 ஆம் பந்திகளுக்கு அமைய இலதாக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) வங்கிக்கூற்றின்படி சேமிப்புக் கணக்கொன்றின் மீதி ரூ.143,362,332 ஆக இருந்ததுடன், நிதிக்கூற்றின்படி அது ரூ.138,511,478 ஆக இருந்தது. அதிலுள்ள ரூ.4,850,853 வித்தியாசம் மீளாய்வு ஆண்டில் கிடைத்த வட்டி வருமானமாகும். அது கணக்கீட்டில் உட்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வு ஆண்டில் இறப்பர் பொருள்களின் விற்பனையின் மூலம் பெறப்பட்ட வருமானம் ரூ.20,523,838 என்று நிதிக் கூற்றுக்களில் இனமறியப்பட்டிருந்தபோதும், அது இறப்பர் பொருள் அபிவிருத்தி நிலையத்தின் வங்கிக் கணக்குக் கூற்றின்படி ரூ.31,013,048 ஆக இருந்தமையால், அதில் ரூ.10,489,211 வித்தியாசமொன்று காணப்பட்டது.

(உ) 2020 ஆம் ஆண்டில் ரூ.4,320,000க்கு கொள்வனவுசெய்யப்பட்ட Sage 200 மென்பொருள் சொத்தொன்றாக கணக்குகளில் பதிவுசெய்யப்படாமல் முடிவுறா வேலைகளின் கீழும் அந்த மென்பொருளை முன்னேற்றுவதற்காக மீளாய்வு ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட மூலதனச் செலவு ரூ.1,750,000 செலவொன்றாகவும் பதிவழிக்கப்பட்டிருந்தது.

(ஊ) 2023 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட ரூ.2,275,482 முற்பணங்கள் 2024 ஆம் ஆண்டின் தொடக்க மாதங்களின் தீரத்தல் மீளாய்வு ஆண்டில் நிதிக்கூற்றுக்களில் முற்பணக் கணக்கிலிருந்து சீராக்கம் செய்யப்படாமல் செலவொன்றாக கணக்குகளில் பதியப்பட்டிருந்தது.

(எ) கைத்தொழிற் பேட்டைப் பிரிவின் அட்டவணைகளின்படி 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு ரூ.8,275,427 கடன்படுநர் மீதியொன்றாகக் காணப்பட்டபோதும், நிதிக் கூற்றுக்களின்படி அது ரூ.14,180,401 ஆக இருந்ததன் மூலம் ரூ.5,904,973 வித்தியாசமொன்று அவதானிக்கப்பட்டது.

(ஏ) நிதிக் கூற்றுக்களின்படி பிற கடன்கொடுநர் கணக்கின் மீது ரூ.65,632,084 ஆக இருந்ததுடன், பொதுப் பேரேட்டில் வேறு கடன்கொடுநர் கணக்குகளின் மொத்தம் ரூ.64,907,063 ஆக காணப்பட்டதன் மூலம் ரூ.725,021 வித்தியாசமொன்று அவதானிக்கப்பட்டது.

(ஐ) பிரதேச அபிவிருத்தி வங்கியின் கைத்தொழில் கடன் நிதியத்தின் வங்கிக்கூற்றின்படி 2023 திசெம்பர் மாதம் 31 இலுள்ளவாறான மீதி ரூ.16,948,392 ஆக இருந்தபோதும், நிதிக்கூற்றுக்களின்படி ரூ.16,606,800 ஆகக் காணப்பட்டதன் காரணமாக ரூ.341,592 வித்தியாசமொன்று அவதானிக்கப்பட்டது.

(ஒ) லக்கம் விற்பனை நிலையத்தின் அட்டவணைகளின்படி மீளாய்வு ஆண்டில் உற்பத்திகளின் விற்பனை வருமானமும் புத்தகங்கள் விற்பனை வருமானமும் ரூ.8,755,482 ஆகக் காணப்பட்டபோதும், நிதிக்கூற்றுக்களின்படி அதன் வருமானம் ரூ.7,273,910 ஆகக் காணப்படுவதன் மூலம் ரூ.1,481,572 வித்தியாசமொன்று அவதானிக்கப்பட்டது.

(ஓ) மீளாய்வு ஆண்டின் நிதிக்கூற்றுக்களின்படி பழுதப்பட்ட உலோக துண்டுப்பொருள் கொடுப்பனவுகளின் மீதி ரூ.43,287,723 ஆகக் காணப்பட்டபோதும், மென்பொருள் முறைமையில் பழுதப்பட்ட உலோக துண்டுப்பொருள் தீர்க்கப்படாத பொழிப்பின் (Unsettle Summery) படி அப்பெறுமானம் ரூ.21,282,407 ஆகக் காணப்பட்டது. அதன்படி, மீளாய்வு ஆண்டில் பழுதப்பட்ட உலோக துண்டுப்பொருள் முற்கொடுப்பனவுகள் ரூ.22,005,316 அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஔ) முற்கொடுப்பனவு மீதிகளில் அடங்கிய பெறுமதி ரூ.465,000 ஆகவிருந்த சுதேச மருத்துவ பிழிசாற்று வகைகளைத் தயாரிக்கக்கூடிய இயந்திரமொன்றை 2021 ஆம் ஆண்டில் சபை அன்பளிப்பாக வழங்கியிருக்கும்போது அன்பளிப்பாக கணக்கீட்டில் உட்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு (இ.க.நி.) அமைய என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இக்கணக்காய்வு நியமனங்களின் கீழான எனது பொறுப்பு, இவ்வறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையை வழங்குவதற்கு என்னால் பெறப்பட்டுள்ள கணக்காய்வுச் சான்றுகள் பொருண்மையானவையும் பொருத்தமானவையுமாகும் என்பது எனது நம்பிக்கையாகும்.

## 1.3 சபையின் 2023 ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏனைய தகவல்கள்

இக்கணக்காய்வு அறிக்கைத் திகதிக்குப் பின்னர் எனக்கு வழங்க எதிர்பார்க்கப்படும் சபையின் 2023 ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளபோதும், நிதிக்கூற்றுக்களும் அவை பற்றிய எனது கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்படாத தகவல்களும் ஏனைய தகவல்கள் என்பதால் கருதப்படும். இந்த ஏனைய தகவல்களுக்கு முகாமைத்துவம் பொறுப்புக் கூற வேண்டும்.

நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமான எனது அபிப்பிராயத்தின் மூலம் ஏனைய தகவல்கள் உள்ளடங்காதிருப்பதுடன், அது சம்பந்தமாக எவ்வித உறுதிப்படுத்தலையும் அல்லது அபிப்பிராயத்தையும் நான் வெளிப்படுத்தவில்லை.

மேலே அடையாளம் காணப்பட்ட ஏனைய தகவல்களைப் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்கின்றபோது வாசித்தல் மற்றும் அவ்வாறு செய்யும்போது ஏனைய தகவல்கள் நிதிக்கூற்றுக்களுடன் அல்லது கணக்காய்வின்போது அல்லது வேறு வகையில் பெற்றுக்கொண்ட எனது அறிவின் அடிப்படையில் பொருண்மையான விதத்தில் பொருந்தவில்லையா என்பதைப் பரிசீலிப்பது நிதிக்கூற்றுக்கள் பற்றிய எனது கணக்காய்வு தொடர்பில் எனது பொறுப்பாகும்.

சபையின் 2023 ஆண்டறிக்கையை வாசிக்கும்போது, அதில் பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் காணப்படுவதாக நான் முடிபு செய்வேனாயின், சீர்செய்வதற்கு அவ்விடயங்கள் பற்றி கட்டுப்பாட்டுத் தரப்பினருக்கு அறிவிக்க வேண்டும். மேலும் சீர்செய்யப்படாத பிறழ்கூற்றுக்கள் இருக்குமாயின், அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரைக்கு அமைய என்னால் உரிய காலத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் அறிக்கையில் அவை உட்சேர்க்கப்படும்.

## 1.4 நிதிக் கூற்றுக்கள் பற்றிய முகாமைத்துவத்தினதும் கட்டுப்பாட்டுத் தரப்பினரதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைய தயாரித்து நியாயமான விதத்தில் சமர்ப்பித்தலும் மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதை இயலச் செய்யும் வகையில் அவசியமாகின்ற உள்ளக கட்டுப்பாடுகளைத் தீர்மானித்தலும் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும்போது, சபையை தொடர்ந்து நடாத்திச்செல்லும் ஆற்றலைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் ஒரு பொறுப்பாகும் என்பதுடன், சபையை ஒழிவுக்குட்படுத்த முகாமைத்துவம் கருதுமாயின் அல்லது வேறு மாற்று நடவடிக்கையொன்று இல்லாதவிடத்து செயற்பாடுகளை நிறுத்திவிட நடவடிக்கை எடுக்குமாயின் ஒழிய, தொடர்ந்து இயங்குவதன் அடிப்படையில் கணக்கு வைத்தலும் சபையின் தொடர்ந்து இயங்குவதற்குரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் ஒரு பொறுப்பாகும்.
சபையின் நிதிசார் அறிக்கையிடல் செயன்முறை சம்பந்தமாக பரீட்சிக்கும் பொறுப்பு, கட்டுப்பாட்டுத் தரப்பினரைச் சாரும்.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவிற்கமைவாக, சபையின் ஆண்டுக்குரிய மற்றும் பருவ நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதை இயலச்செய்யும் வகையில் தமது வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் ஆகியன பற்றி உரிய முறையில் ஏடுகளும் அறிக்கைகளும் பேணி வரப்படுதல் வேண்டும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்பு

முழுதுமளாவியாக நிதிக்கூற்றுக்கள், மோசடிகளும் தவறுகளும் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்பாடொன்றை வழங்குவதும், எனது அபிப்பிராயம் அடங்கிய கணக்காய்வு அறிக்கையை வெளியிடுவதும் எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்துகை உயர்மட்ட உறுதிப்படுத்துகையொன்றாக இருக்கின்றபோதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு அமைய கணக்காய்வை மேற்கொள்ளும்போது அது எப்பொழுதும் பொருண்மையான பிறழ்கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான உறுதிப்படுத்துகையொன்றாக அமையாது. மோசடிகளும் தவறுகளும் தனியான அல்லது கூட்டான பாதிப்பு காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படலாமென்பதுடன், இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக்கொண்டு பயனர்களினால் எடுக்கப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீதான பாதிப்பின் அடிப்படையில் அதன் பொருண்மை தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு அமைய கணக்காய்வின் ஒரு பகுதியாக உயர்தொழில்சார் நியாயப்படுத்தலுடனும் உயர்தொழில்சார் ஐயுறவுடனும் என்னால் செயலாற்றப்பட்டது. என்னால் மேலும் -

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வகுத்துக் கொள்ளும்போது மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படுவதற்கான ஆபத்துக்களை அடையாளம் காண்பதற்கும் மதிப்பீடுசெய்வதற்கும் வேளைக்கேற்றவாறு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிட்டு அமுல்படுத்தப்பட்டன. தவறுகள் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களின் மூலம் ஏற்படக்கூடிய பாதிப்பை விட மோசடியொன்றினால் ஏற்படக்கூடிய பாதிப்பு வன்மையானது என்பதுடன் சூழ்ச்சிசெய்தல், போலி ஆவணங்களைப் புனைதல், திட்டமிட்ட திரித்துக்காட்டுதல் அல்லது உள்ளக கட்டுப்பாடுகளைத் தவற விடுதல் மோசடியொன்று இடம்பெறுவதற்குக் காரணமாக அமையும்.

- உள்ளக கட்டுப்பாட்டின் பயன்கூர்தன்மை பற்றிய அபிப்பிராயமொன்றைத் தெரிவிக்கும் எண்ணத்துடன் இல்லாதபோதிலும், வேளைக்கேற்றவாறு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாடு சம்பந்தமான அறிவு பெற்றுக்கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடு, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தினால் செய்யப்பட்ட சம்பந்தப்பட்ட வெளிப்படுத்தல்கள் மதிப்பிடப்பட்டது.

- நிகழ்வுகள் அல்லது சூழ்நிலைகள் காரணமாக சபையின் தொடர்ந்து இயங்குதல் பற்றிய பொருண்மையான நிச்சமற்றதன்மையொன்று காணப்படுகின்றதா என்பது சம்பந்தமாக பெற்றுக் கொண்ட கணக்காய்வுச் சான்றுகளின் அடிப்படையில் கணக்கீட்டுக்காக நிறுவனத்தின் தொடர்ந்து இயங்குதல் பற்றிய அடிப்படையைப் பயன்படுத்தும் ஏற்புடைமை தீர்மானிக்கப்பட்டது. போதிய நிச்சயமற்ற தன்மையொன்று காணப்படுவதாக நான் முடிவுசெய்வேயாயின், நிதிக்கூற்றுக்களில் அது சம்பந்தமான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையில் கவனம் செலுத்தப்படுதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய வெளிப்படுத்தல்கள் போதுமானதாக இருக்கவில்லையெனில், எனது அபிப்பிராயம் திருத்தியமைக்கப்படுதல் வேண்டும். இருப்பினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகளின் அடிப்படையில் தொடந்து இயங்குதல் ஒழிவுறலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்புக்கும் உள்ளடக்கத்திற்கும் அடிப்படையாக அமைந்த கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகள் பொருத்தமானவாறும் நியாயமானவாறும் உள்ளடங்கியிருத்தலும் வெளிப்படுத்தல்கள் அடங்கிய நிதிக்கூற்றுக்களின் முழுதுமளாவிய சமர்ப்பிப்பும் மதிப்பிடப்பட்டது.

எனது கணக்காய்வின்போது இனங்காணப்பட்ட முக்கிய கணக்காய்வுக் காண்புகள், பிரதான உள்ளக கட்டுப்பாட்டுப் பலவீனங்கள் மற்றும் பிற விடயங்கள் குறித்து கட்டுப்பாட்டுத் தரப்பினரை அறிவுறுத்துகின்றேன்.

## 2. பிற சட்ட மற்றும் ஒழுங்குறுத்துகைத் தேவைப்பாடுகள் பற்றிய அறிக்கை

### 2.1 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, தேசிய கணக்காய்வுச் சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகள் சம்பந்தமான விசேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன:-

2.1.1 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(அ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு அமைய எனது அறிக்கையில் 'முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை' என்ற பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களினால் எழுகின்ற பாதிப்பு தவிர்ந்தவிடத்து, கணக்காய்வுக்குத் தேவைப்படும் எல்லாத் தகவல்களும் விளக்கங்களும் என்னால் பெறப்பட்டதுடன், எனது விசாரணையின் மூலம் தோன்றுகின்றவாறு உரிய நிதி அறிக்கைகள் கம்பனியினால் பேணி வரப்பட்டிருந்தது.

2.1.2 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்படும் தேவைப்பாடுகளுக்கு அமைய சபையின் நிதிக்கூற்றுக்கள் கடந்த ஆண்டுடன் ஒத்திசைகின்றன.

2.1.3 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(i)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டுக்கு அமைய எனது அறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை என்ற பகுதியின் ஆ, இ, ஊ இல் காட்டப்பட்டுள்ள அவதானிப்புகள் தவிர்ந்த கடந்த ஆண்டில் என்னால் செய்யப்பட்ட விதப்புரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ளது.

### 2.2 பின்பற்றப்பட்ட செயன்முறைகளும் பெறப்பட்ட சான்றுகளும் மீதும் பொருண்மையான விடயங்களுடன் மட்டுப்படுத்துவதன் ஊடாக பின்வரும் கூற்றுக்களைத் தெரிவிக்கும் அளவுக்கு எதுவும் எனது கவனத்திற்கு உட்படவில்லை.

2.2.1 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (ஈ) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டுக்கு அமைய சபையின் நிருவாக சபை அங்கத்தவர் ஒருவருக்கு சபை தொடர்பில், குறித்தவோர் ஒப்பந்தம் தொடர்பில் நேரடியாக அல்லது வேறு வகையில் பொதுவான வியாபார நிலைமைகளுக்கு அப்பால் தொடர்பொன்று இருக்கின்றமை.

2.2.2 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(ஊ) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டுக்கு அமைய பின்வரும் அவதானிப்புகள் தவிர்ந்த யாதேனும் ஏற்புடைய எழுத்திலான சட்டமொன்றுக்கு அல்லது சபையின் நிருவாக சபையினால் பிறப்பிக்கப்பட்ட வேறு பொதுவான அல்லது விசேட பணிப்புகளுக்கு ஒத்திசைவற்ற விதத்தில் செயலாற்றப்பட்டுள்ளமை.

| சட்டதிட்டங்கள்/ பணிப்புகளுடனான தொடர்பு | அவதானிப்புகள் |
|---|---|
| (அ) 2017 அக்டோபர் 25 ஆம் திகதிய நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் முகாமைத்துவ சேவை சுற்றறிக்கை இல. 05/2017 | சுற்றறிக்கைக்கு அமைய முனைப்பான சேவைக் காலத்தை அடிப்படையாகக் கொள்ளாமல் தொழில்சார் கொடுப்பனவாக 2018 ஆம் ஆண்டு முதல் ரூ.7,717,590 மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. |
| (ஆ) 2022 ஆகஸ்ட் 08 ஆம் திகதிய நிதி அமைச்சின் தேசிய வரவுசெலவுத்திட்ட சுற்றறிக்கை இல. 04/2022 இன் பந்தி 2.4 | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்குப் புறம்பாக 2023 ஆம் ஆண்டில் ஒப்பந்த அடிப்படையில் 106 அலுவலர்களை இணைத்துக்கொண்டு அவர்களில் 61 பேர் நிரந்தரமாக்கப்பட்டிருந்தனர். |
| (இ) 2022 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய பொது நிதிச் சுற்றறிக்கை இல. 01/2020 இன் பந்தி 9.1(ஆ) | ஒரு தடவையில் ஆளொருவருக்கு வழங்கக்கூடிய ஆகக்கூடிய முற்பணத் தொகை ரூ.100,000 ஆக இருந்த போதும், அந்த எல்லையைத் தாண்டி 12 சந்தர்ப்பங்களில் ரூ.125,000 முதல் ரூ.500,000 வரை சேர்ந்த பெறுமதி ரூ.4,148,960 முற்பணங்களாக வழங்கப்பட்டிருந்தது. |

2.2.3 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(எ) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டுக்கு அமைய சபையின் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு ஒத்திசையாத விதத்தில் செயலாற்றப்பட்டுள்ளமை.

2.2.4 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(ஏ) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டுக்கு அமைய பின்வரும் அவதானிப்புகள் தவிர்ந்த சபையின் வளங்களை சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் பயன்கூர் விதத்திலும் கால வரம்புகளினுள் உரிய சட்டதிட்டங்களுக்கு அமைய பெறுகைசெய்து பயன்படுத்தப்பட்டிருக்காமை.

## 2.3 வேறு விடயங்கள்

(அ) கைத்தொழில் அபிவிருத்திச் சபை வசமுள்ள 16 கைத்தொழிற் பேட்டைகளில் (எல்பிட்டிய கைத்தொழிற் பேட்டை தவிர) 733 காணித்துண்டுகள் காணப்படுகின்றன. அவற்றில் 53 காணித்துண்டுகள் கைத்தொழிலாளர்களுக்கு பகிர்ந்தளிக்கப்படாமை காரணமாக பல வருடங்களாக பயன்படுத்தப்படாத நிலையில் இருந்தது. 2023 திசெம்பர் 31 ஆம் திகதியிலுள்ளவாறு 26 கைத்தொழிற் பேட்டைகள் செயற்பாடற்ற நிலையில் மூடப்பட்டிருந்தன. வேறு கைத்தொழிலாளர்களுக்கு அவற்றைப் பகிர்ந்தளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் சபை வசமுள்ள 05 கைத்தொழிற் பேட்டைகளின் 23 காணித்துண்டுகள் வதிவிற்காக பயன்படுத்தப்பட்டிருந்தன.

(ஆ) ரூ.3,850,740 பெறுமதியான 3 இயந்திரங்களைத் தயாரிப்பதற்கு தேசிய அருங்கலைகள் பேரவையினால் இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபைக்குச் சொந்தமான மாத்தறை வேலைக்களத்திற்கு 2021 ஆம் ஆண்டில் கட்டளையொன்று வழங்கப்பட்டிருந்தபோதும், காட்டிலிருந்து மா வேவெல் : வஞ்சி (*Calamus thwaitesii*) இழுப்பதற்கான ரூ.351,000 பெறுமதியான இயந்திரம் தவிர ஏனைய 2 இயந்திரங்களும் 2024 ஏப்ரல் இறுதிப் பகுதியளவில் வேலைகளைப் பூர்த்திசெய்து அருங்கலைகள் பேரவைக்கு ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) பேலியகொட இறப்பர் அபிவிருத்தி மற்றும் சேவை நிலையத்திற்கு இறப்பர் சார்ந்த உற்பத்திகளின் தரத்தை முன்னேற்றுதல், வீண்விரயத்தைக் குறைத்தல், உற்பத்திச் செயன்முறையின் வினைத்திறனை அதிகரித்தல், உற்பத்திக் கிரயத்தைக் குறைத்தல், சிறிய மற்றும் நடுத்தர அளவான கைத்தொழில்களுக்கு பயன்படுத்த அறிமுகப்படுத்தலும் ஊக்குவித்தலும் முதலான நோக்கங்களை முன்வைத்து இறப்பர் இன்ஜெக்சன் மோல்டிங் இயந்திரமொன்று 2016 ஆம் ஆண்டில் ரூ.9,318,026 தொகைக்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. கொள்வனவு செய்யப்பட்ட தினத்திலிருந்து 328 பயிலுநர்களுக்கு மாத்திரம் பயிற்சியளிக்கப்பட்டிருந்ததுடன், 2020 ஆம் ஆண்டு முதல் 2024 ஆம் ஆண்டின் கணக்காய்வுத் திகதி வரையிலும் இந்த இயந்திரம்

செயற்பாட்டு நிலையில் காணப்படவில்லை.

(ஈ) பேலியகொடை இறப்பர் பாண்டங்கள் அபிவிருத்தி மற்றும் சேவை நிலையத்தில் இறப்பர் சார்ந்த 64 இயந்திர சாதனங்கள் காணப்பட்டன. அவற்றில் 26 இயந்திர சாதனங்கள் 1 ஆண்டுக்கும் 39 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலப்பகுதிகளிலிருந்தே செயற்பாடற்ற நிலையில் காணப்பட்டதுடன், ரூ.85,560 பெறுமதியான Compressor இயந்திரம் 2017 ஆம் ஆண்டு முதல் பாவிக்கப்படாத நிலையில் பொதிகளிலேயே களஞ்சியங்களில் காணப்பட்டன. மேலும் அதிலுள்ள 17 வகையான மூலப்பொருள்களும் 284 வகையான இயந்திர உதிரிப்பாகங்களும் 1 ஆண்டு முதல் 17 ஆண்டு கால இடைவெளியில் இருந்து பாவனையின்றி பயன்பாடற்ற நிலையில் காணப்பட்டது.

(உ) 2016 ஆகஸ்ட் 17 ஆம் திகதி අමප/16/1424/723/039 ஆம் இலக்க அமைச்சரவை முடிவின் மூலம் அரச பங்களிப்புடன் நவபிம நிலையத்தில் நிறுவப்பட்ட ரோபோ தொழில்நுட்பத்திற்கான அதிசிறப்பு நிலையத்திற்காக கட்டிடங்களை நவீனமயப்படுத்தல், சம்பளங்களாகவும் வேதனங்களாகவும் ரூ51 மில்லியன் செலவிடப்பட்டிருந்ததுடன், 2018, 2019 ஆம் ஆண்டுகளில் 35 மி.ரூ. பெறுமதியான ரோபோ தொழில்நுட்ப உபகரணங்கள் நிறுவப்பட்டிருந்தபோதும், தேவையான பணியாட்குழு ஆட்சேர்ப்பும் அதன் பணிகளும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. விஞ்ஞான, தொழில்நுட்ப அமைச்சின் கீழ் காணப்பட்ட இந்த நிலையம் கைத்தொழில் அமைச்சுக்கும் 2023 ஆம் ஆண்டின் இறுதிப்பகுதியளவில் மீண்டும் தொழில்நுட்ப அமைச்சுக்கும் அவ்வப்போது கைமாறியிருந்தன. 2023 ஆம் ஆண்டில் இக்கருத்திட்டத்திற்கு IRB 2600 welding power source ஒன்றும், Reproving of 45 existing Robot cell ஒன்றும் அதனைப் பயன்படுத்துவதற்கு 04 நாட்களுக்கு பொறியியலாளர்கள் இருவரைப் பயிற்றுவிப்பதும் வேறு செலவுகள் உட்பட ரூ.5,164,149 தொகை செலவிடப்பட்டிருந்தது. இருப்பினும், இலங்கையின் கைத்தொழில்களுக்கு ஊக்கமளித்தல், அவற்றை முன்னேற்றுதல், அபிவிருத்திக்கு உதவும் நோக்குடன் இக்கருத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருந்தபோதும், 2023 திசெம்பர் மாதம் 31 ஆம் திகதியளவிலும் இது இயக்கப்பாட்டில் இருக்கவில்லை.

(ஊ) 2020 ஆம் ஆண்டில் யுனிடோ நிறுவனத்தினால் 101.130 அமெரிக்க டொலர் பெறுமதியான 12 இயந்திர உபகரணங்களும் 1167.44 அமெரிக்க டொலர் பெறுமதியான பண்டங்களையும் சபைக்கு வழங்கி அவற்றை லக்சல கட்டிடத்தில் நிறுவி மூங்கில் மர பயிற்சி நிலையம் தற்காலிகமாக ஆரம்பிக்கப்பட்டிருந்தது. 2022 செப்டம்பர் மாதம் இப்பயிற்சி நிலையக் கட்டிடம் தேசிய அருங்கலைகள் பேரவைக்கு ஒப்படைக்கப்பட்டதன் காரணமாக அதிலிருந்த இயந்திர உபகரணங்களை அகற்றி கட்டுபெத்த நவபிம வளவில் கட்டிடமொன்றில் அடுக்கிவைப்பதன் மூலம் 2024 மே மாதம் அளவிலும் அவை பாவிக்கப்படாத நிலையில் பயன்பாடற்றுக் கிடந்தன.

(எ) 2023 திசெம்பர் மாதம் 31 ஆம் திகதியிலுள்ளவாறு காணப்படும் ரூ.11,535,511 அடையாளம் காணப்படாத வைப்புக்களின் மீதியை அடையாளம் கண்டு தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஏ) நிதிக்கூற்றுக்களின்படி ரூ.75,572,826 இன் வேறு முற்கொடுப்பனவு மீதியினுள் காணப்பட்ட 2018 ஆம் ஆண்டுக்கும் அதற்கு முந்திய ஆண்டுகளுக்கும் உரிய ரூ.6.618,086 ஐயும் மீளாய்வு ஆண்டில் மின்சார சபைக்கு செலுத்தப்பட்டிருந்த ரூ.25,331,256 ஐயும் தீர்த்துக்கொள்ள சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஐ) இரு வங்கிக் கணக்குகளில் வைப்பிலிடப்பட்டிருந்த ரூ.1,228,365 பெறுமதியான 59 காசோலைகள் 1 மாதம் முதல் 11 மாதங்கள் வரையான காலப்பகுதியிலிருந்து தேறியிருக்கவில்லை.

(ஒ) சில்லறைக் கடன்படுநர் - பொது (Sundry Debtors - Common) என்று முந்திய ஆண்டில் ரூ.2,305,714 ஆன மீதி மீளாய்வு ஆண்டில் ரூ.4,171,284 ஆகி இருந்தது. இந்த மீதியை அறவிட்டுக்கொள்ள சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஓ) 2022 ஆம் ஆண்டில் விமலசுரேந்திர மின்னுற்பத்தி நிலையத்திலிருந்து அப்புறப்படுத்திய பழுதப்பட்ட உலோகங்களைக் கொள்வனவு செய்வதற்காக செலுத்தப்பட்ட ரூ.3,754,298 இற்காக பழுதப்பட்ட செம்பு உலோகம் போதியளவில் இருக்காமை காரணமாக சபைக்கு பண்டங்கள் கிடைத்திருக்கவில்லை. அத்தொகையை மீள பெற்றுக்கொள்வதற்கு அல்லது பண்டங்களைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஔ) 2023 திசெம்பர் மாதம் 31 ஆந் திகதியில் உள்ளவாறு செயல் திட்டத்தின் முன்னேற்றத்தைப் பரீட்சிக்கும்போது 07 பிரிவுகளின் திட்டமிடப்பட்டிருந்த 83 செயற்பாடுகளில் 18 செயற்பாடுகள் மாத்திரம் நிறைவேற்றப்பட்டிருந்தன.

(ஒப்பம்)
**டப்ளியு.பீ.சி.விக்ரமரத்ன**
**கணக்காய்வாளர் தலைமை அதிபதி**